# ஹஜ்ரத்
# கிள்ரு
# (அலை)

பக்கம்


1. கிள்ரு (அலை) அவர்களின் பிறப்பும், பூர்வீகமும் .......... 7
2. அதிசயப் பிறவி .......... 7
3. வியப்பூட்டும் கல்வி ஞானம் .......... 11
4. பிரிந்தவர் ஒன்று சேர்ந்தார் .......... 12
5. அரண்மனை வாழ்க்கையின்மீது வெறுப்பு .......... 14
6. குத்புல் அக்தாப் .......... 15
7. ஆன்மீக வேட்கை .......... 17
8. பெற்றோரின் கவலை .......... 19
9. கிள்ரு (அலை) அவர்களைத் தேடிய காவலர்கள் .......... 24
10. மல்கானின் சீற்றம் .......... 27
11. ஹிள்ரு என்னும் காரணப்பெயர் .......... 29
12. சிக்கந்தர் துல்கர்னைன் வரலாறு .......... 30
13. துல்கர்னைனின் கனவு .......... 33
14. துல்கர்னைனின் பேணுதல் .......... 34
15. ஆபெ ஹயாத்தைத் தேடிச் சென்ற கிள்ரு (அலை) அவர்களும் துல்கர்னைனும். .......... 35
16. காப் மலைக்குச் சென்ற துல்கர்னைன் .......... 40
17. துல்கர்னைனின் கீழ்த்திசைப் படையெடுப்பு .......... 42
18. யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர். .......... 43
19. மிகவும் அறிந்தவர் யார்? .......... 47
20. உப்பிடப்பட்ட மீன் உயிர்பெற்ற வரலாறு .......... 49
21. பாறைமீது வீற்றிருந்த கிள்ரு (அலை) .......... 53

22. அல்லாஹ்வின் அறிவும், படைப்பினங்கள் அனைத்தின் அறிவும். ........ 56

23. கிள்ரு (அலை) அவர்களின் நிபந்தனை ........ 57

24. பொறுமை இழந்த மூஸா (அலை) ........ 59

25. சிறுவனைக் கொன்ற நிகழ்ச்சி ........ 61

26. சாய்ந்திருந்த சுவரைச் சரிசெய்த நிகழ்ச்சி ........ 62

27. மூன்று விளக்கங்கள் ........ 66

28. புதையலில் காணப்பட்ட போதனைகள் ........ 68

29. கிள்ரு (அலை) அவர்களின் அறிவுரை ........ 70

30. மூஸா (அலை) அவர்களின் அறிவுரை ........ 71

31. கிள்ரு (அலை) பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறிய நிகழ்ச்சி ........ 72

32. வலிமார்களுடன் கிள்ரு (அலை) அவர்களின் சந்திப்பு: முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களுடன் சந்திப்பு ........ 74

33. கிள்ரு (அலை) அவர்களின் விரல் அமைப்பு ........ 78

34. முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களை கிள்ரு (அலை) அவர்கள் சந்தித்தல் ........ 79

35. இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களுடன் சந்திப்பு ........ 81

36. கிள்ரு (அலை) அவர்களின் இரண்டாவது சந்திப்பு ...... 83

37. கிள்ரு (அலை) இறந்துவிட்டனரா? ........ 87




بسم الله الرحمن الرحيم

# கிள்ரு (அலை) அவர்களின் பிறப்பும், பூர்வீகமும்

கிள்ரு (அலை) அவர்களின் பெயர் களீர் என்று சொல்லப்படுகிறது. அவர்களின் இயற்பெயர் பல்யா இப்னு மல்கான் ஆகும்.

இவர்கள் ஆதம் (அலை) அவர்களின் ஆண் மக்களில் ஒருவர் என்று சிலர் கூறுகின்றனர்.

வேறு சிலரோ இவர்கள் இப்னு அமாயில் இப்னு நூர் இப்னு அல்ஈஸ் இப்னு இஸ்ஹாக் என்று கூறுகின்றனர்.

மற்றும் சிலரோ கிள்ரு (அலை) அவர்கள் பாரசீகத் தந்தைக்கும், கிரேக்க அன்னைக்கும் பிறந்தவர் என்று கருத்து தெரிவிக்கின்றனர்.

இவர்கள் குகையில் பிறந்து காட்டு விலங்குகளால் பாலூட்டி வளர்க்கப்பெற்று பின்னர் அரசவையை அடைந்து பெரும் பதவி வகித்தார்கள் என்று சொல்லப்படுகின்றது.

இவை போன்று பல்வேறு கருத்துக்கள் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டபோதிலும்,

இமாம் ஸுஹைலி (ரஹ்) அவர்களால் "கிதாபுத் தஃரீப் வல் இஃலாம்" என்னும் நூலில் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைப் பற்றிய செய்திகள் அதிகமாக காணப்படுகின்றன.

இந்நூலில் எழுதப்பட்டுள்ள விவரங்களை இனி காண்போம்.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் ஓர் அரசரின் புதல்வராவர்.

## அதிசயப் பிறவி

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களின் பிறப்பு பற்றிய செய்திகள் உண்மையிலேயே அதிசயமானவைதாம். எனவே அவர்களை ஓர் அதிசயப் பிறவி எனக் கூறுவது பொருத்தமுடையது ஆகும்.

பேரரசரான பைலபூஸும் குறுநில மன்னரான மல்கானும் பூர்வீகத்தில் நபி நூஹ் (அலை) அவர்களின் ஆறாம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள்.

இவ்விருவரும் இரு சகோதரிகளை மணமுடித்து மணமுள்ள அரச வாழ்வு வாழ்ந்தனர்.

மூத்தவளான கிலாயா என்பவளை பைலபூஸும் இளையவள் அல்காவை மல்கானும் மணந்து இல்லறமே நல்லறம் எனும் தத்துவத்தை தழைக்கச் செய்யும் வண்ணம் இன்புற்று வாழ்ந்தனர்.

மன்னர் பைலபூஸ் நாடாளும் வேந்தராக மட்டுமன்றி வானவியல் பற்றிய அறிஞராகவும் இருந்தார்.

ஒருநாள் தம் மைத்துனி அல்காவும் அவளின் கணவர் மல்கானும் தம் மாளிகைக்கு விருந்தினராக வந்திருந்த வேளையில் பைலபூஸ் தம் மனைவி கிலாயாவை நோக்கி, "கிலாயா இன்றிரவு இன்ன நேரத்தில் ஜெனிக்கும் குழந்தை அல்லாஹ்வின் அருளுக்குரிய ஒரு அடியாராகவும், உலகம் உள்ளளவும் உயிர் வாழும் நற்பேறு பெற்றவராகவும் விளங்குவார். எனவே குறிப்பிட்ட அந்நாழிகையில் நாம் உடலுறவு கொண்டால் இறையருள் பெற்ற அப்பிள்ளை நம்முடையதாய் அமையக்கூடும்! என்று கூறினார்.

அது கேட்டு கிலாயா அளவில்லா மகிழ்ச்சியடைந்தாள்.

பின்னர் பேரரசர் பைலபூஸ் அவளை நோக்கி, "அந்த நேரம் வரும்வரை உறங்காமல் கண் விழித்திரு என்று கூறிவிட்டு இறைவணக்கத்தில் ஈடுபட்டார்.

மேலும் இந்த இரகசியச் செய்தியை கண்டிப்பாக வேறு எவரிடத்தும் வெளியிடக்கூடாது என்றும் அவர் அவளை எச்சரித்திருந்தார்.

என்ன செய்வது?

விதியின் விளையாட்டு!

அல்லாஹ்வின் தீர்க்கமான முடிவு ஒன்றிருக்க அதன் அந்தரங்கத்தை விளங்கிக் கொள்ளாமல் நாம் செய்யும் முடிவுகளாலும், போடும் திட்டங்களாலும் யாது விளைந்துவிடப் போகிறது?



பைலபூஸும் கிலாயாவும் பேசிக்கொண்டது அல்காவின் செவியிலும் விழுந்துவிட்டது. அல்லாஹ் நாடிவிட்டான்.

பரபரப்புடன் ஓடிய அல்கா, இச்செய்தியைத் தம் கணவர் மல்கானிடம் விவரித்தாள்.

புளகாங்கிதம் கொண்ட அவர் சென்று நள்ளிரவு குறிப்பிட்ட அந்நாழிகையில் அல்காவுடன் தாம்பத்திய உறவு கொள்ள ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் அத்தாயின் மணி வயிற்றில் கருவாய் உருவானார்கள்.

பைலபூஸின் நிலை யாதாயிற்று?

அன்று நள்ளிரவு பைலபூஸ் குறிப்பிட்டிருந்த அந்நேரம் நெருங்கிய பின்னரும் கிலாயா வெட்கத்தின் காரணமாக தம் கணவரை நெருங்காமல் காலம் தாழ்த்தினாள்.

பின்னர், கண் அயர்ந்து விட்டிருந்த கணவரை ஒருவாறு எழுப்பிவிட்டாள்.

திடுக்குற்று விழித்த பைலபூஸ் தாம் எதிர்பார்த்திருந்த அந்நாழிகை கடந்துவிட்டிருந்ததை எண்ணி கையைப் பிசைந்தார். தம் மனைவியை மென்மையாகக் கடிந்து கொண்டார்.

நடந்தது நடந்தும், முடிந்தது முடிந்தும் விட்டன. அல்லாஹ்வின் நாட்டம் ஈடேறிவிட்டது. அன்று இரவில் கருக்கொள்ளும் குழந்தைகள் யாவும் ஏதேனுமொரு சிறப்பிற்குரியனவாகவே அமையும் என்று விளங்கியிருந்த அவர் அது பற்றித் தம் மனைவியிடம் கூறினர்.

பின்னர், "யா அல்லாஹ்! நான் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த இரவு இது! இதில் உனது பேரருளுக்கு மிகவும் உரித்தான நல்லடியாரைப் பெறும் நற்பேற்றை இழந்துவிட்டேன். உலக முழுவதையும் ஒரே குடையின்கீழ் ஆளும் நற்பேறு பெற்ற குழந்தை கருக்கொள்ளும் இரவாகவும் இது உள்ளது என அறிகிறேன். அந்த நற்பேற்றையேனும் எங்களுக்கு ஈந்தருள்வாயாக! என்று துஆ இறைஞ்சினார்.

அதன் பின்னர் அவர்தம் மனைவியுடமன் தாம்பத்திய உறவு கொண்டார்.

அதன் பயனாக கிலாயாவின் திரு வயிற்றில் பேரரசர் சிக்கந்தர் துல்கர்னைன் கருவாய் உருவானார்.

★ ★ ★

நூஹ் நபி (அலை) அவர்களின் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவரும், குறுநில மன்னருமான மல்கானின் மனைவி அல்கா கருவுற்ற நாள் முதற்கொண்டு இனிமையான கனவுகளைக் கண்டுவந்தாள்.

அக்கனவுகளில் வானவர்கள் தோன்றி, அவளின் கருவறையில் உள்ள சிசுவின் மாண்பைப் பற்றி எடுத்தோதுவர், மேலும் அவளுக்கு வாழ்த்துக்களும், நன்மாராயங்களும் கூறினர் என்பதாக கூறப்படுகின்றது.

கரு முதிர்ந்து, குழந்தையைப் பிரசவிக்கும் காலம் அண்மிய பொழுது இறை ஆணைப்படி அல்கா ஓர் இருண்ட குகையினுட் சென்று பிரசவித்துவிட்டு வந்தாள்.

நாடாளும் வேந்தனின், துணைவியாய், அரசியாய் இருந்தும் இவ்வாறு ஓர் குகையினுட் சென்று குழந்தையைப் பிரசவிப்பது அவளுக்கு மனவேதனையை நல்கியபோதிலும், இறை ஆணைக்கு மாறுசெய்ய விரும்பாமல் அவள் அவ்விதம் செய்தாள் என்று கூறப்படுகிறது.

குகையினுள் இருந்த பச்சிளங் குழந்தைக்கு பக்கத்து கிராமத்திலிருந்த ஒரு ஆடு நாள்தோறும் வந்து பாலூட்டிவிட்டுச் சென்றது.

இந்த அதிசயத்தைக் கண்ட ஆடு மேய்க்கும் மனிதர் ஒருவர் அழகே உருவான அந்த ஆண் குழந்தையைத் தூக்கிவந்து வளர்க்கலானார்.

குழந்தைப்பேறு அற்றிருந்த அவரின் மனைவி அக்குழவியை வாரி அணைத்து முத்தமிட்டு அதனைக் கண்ணாய், கண்ணின் மணியாய் பேணிக் காத்து வந்தாள்.

அக்குழந்தையைக் கண்ட ஊர்வாசிகளோ, அதன் அழகையும், பொலிவையும் கண்டு வியப்பு மொழி பகர்ந்தனர்.

அது மற்ற குழந்தைகளைப் போன்ற சாமான்ய குழந்தையாய் இருக்க முடியாது என்பது அவர்களின் தீர்க்கமான கருத்தாய் இருந்தது. குழந்தைக்கு அவ்வூர் மக்கள் பல்யா எனப் பெயரிட்டனர்.

அவ்வூர் வரட்சி மிகுந்த ஓர் பகுதியாகவும், புற்பூண்டு முளைக்காத பெருவெளியாகவும் இருந்தது.



என்னே வியப்பு! குழந்தை பல்யா அவ்வூருக்குக் கொண்டு வரப்பட்ட மறுநாள் அவ்வூர் முழுவதும் பசுமையாய் இலங்கியது. புற்பூண்டுகளும், செடிகொடிகளுமாக எங்கு நோக்கினும் பச்சைப் பசேலென்ற காட்சிகள் தென்பட்டன.

அது கண்டு அவ்வூர்வாசிகள் அடைந்த வியப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. இறையருள் பெற்ற குழந்தை பல்யாவின் பொருட்டால்தான் இத்தகைய பசுமையும், வளமையும் தோன்றியிருக்கக்கூடும் என்று ஊகித்து உணர அவர்களுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

## வியப்பூட்டும் கல்விஞானம்

சிறு பிள்ளையான பல்யா இப்னு மல்கான் முறைப்படி எவரிடத்தும் சென்று கல்வி பயிலவில்லை. ஏனெனில் கற்றறிந்த அறிஞரோ, ஆன்மீக ஞானியரோ அந்த கிராமத்தில் ஒருவரும் இலர். அனைவரும் பாமரர்களாய் இருந்தனர். எனவே, முன்னோர்களான நபிமார்களின் வேதஞானங்களை அம்மக்கள் அறிந்திருக்க வாய்ப்பேயில்லை.

இந்நிலையில் பல்யா இப்னு மல்கானை கல்வி பயிலச் செய்வது அவர்களால் இயலுமா?

பல்யா பன்னிரண்டு வயதுச் சிறுவராய் இருந்தார். அவரின் செயல்கள் மற்ற சராசரிச் சிறுவர்களின் செயல்களைப் போலன்றி முற்றிலும் மாறுபட்டதாய் விளங்கின.

தனிமையில் இருப்பதை பல்யா விரும்பினார். இறைவனைத் தொழுவது, இறை சிந்தனையில் மூழ்குவது, வீண் விளையாட்டை வெறுப்பது, ஆகியவை அவரிடம் காணப்பட்ட சிறப்புப் பண்புகளாகும்.

பிறவிலேயே கல்விஞானம் வாய்க்கப்பெற்ற பல்யா இப்னு மல்கானின் நாவிலிருந்து முன்னோர்களாம் நபிமார்களின் வேத வசனங்கள் வெளியாயின.

நபி நூஹ் (அலை) இப்ராஹீம் (அலை) ஷீது (அலை) ஆகியோரின் சுஹ்ஃபுகள் எனப்படும் வேதக்கட்டளைகள் பல்யா இப்னு மல்கானுக்கு மனனமாயிருந்தன.

அல்லாஹு தஆலா நபி ஆதம் (அலை) அவர்களுக்கு 10 ஸுஹ்புகளும், நபி ஷீத் (அலை) அவர்களுக்கு 50 ஸுஹ்புகளும், நபி இத்ரீஸ் (அலை) அவர்களுக்கு 30 ஸுஹ்புகளும், நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு 10 ஸுஹ்புகளும் அருளினான்.

இவை அனைத்தையும் பல்யா இப்னு மல்கான் அறிந்திருந்தார். எந்த ஆசானிடம் கல்வியிலா நிலையிலேயே அவர் அறிந்திருந்த அதிசயத்தைக்கண்டு அவ்வூர் மக்கள் அனைவரும் பெரும் வியப்பில் ஆழ்ந்தனர். இதனால் நாளடைவில் அவரின் சிறப்புகள் நாளா திசைகளிலும் பரவலாயிற்று.

## பிரிந்தவர் ஒன்று சேர்ந்தார்

நாம் இதுவரை பல்யா இப்னு மல்கானின் பிறப்பு வளர்ப்பு ஆகியவற்றைப் படித்தோம். இனி அவரின் தந்தையும், அந்நாட்டின் வேந்தருமான மல்கானின் நிலையைக் காண்போம்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தவற்றை நம் நினைவிற்கொண்டு வருவோம்.

மல்கானின் மனைவி அல்கா, தன் கனவில் அறிவுறுத்தப்பட்டதற்கு இணங்க இரகசியமான முறையில் ஊருக்கு அப்பாலிருந்த குகையினுட் சென்று குழந்தையை ஈன்றுவிட்டு வெறுமனே திரும்பி வந்தாள்.

அவ்வேளையில் வெளியூர் சென்றிருந்த அரசர் மல்கான் சின்னாட்களில் நாடு திரும்பி தனக்குப் பிறந்த குழந்தை யாதாயிற்று எனத் தன் மனைவியிடம் வினவ, அவள் ஆதிமுதல் அந்தம்வரை நடந்தவை அனைத்தையும் அவரிடம் ஒன்றுவிடாது விவரித்தாள்.

அது கேட்டு திடுக்குற்ற அவர் அக்கணமே புறப்பட்டு, தன் மனைவி அல்கா குறிப்பிட்ட குகைக்கு விரைந்து சென்றார்.

எனினும் என் செய்வது?

குழந்தை அங்கே காணப்படவில்லை. ஏமாற்றத்துடன் அரண்மனை திரும்பிய மல்கான் அதே கவலையில் காலம் கழித்து வரலானார். இந்நிலையில் பதினைந்து ஆண்டுகள் ஓ மறைந்துவிட்டன.



ஒருநாள் மல்கான் தம் அமைச்சர்களிடம், "நூஹ் (அலை) இத்ரீஸ் (அலை), ஷீத் (அலை), இப்ராஹீம் (அலை) ஆகியோரின் சுஹ்ஃபுகளைத் தொகுத்து நூல் வடிவில் உருவாக்க வேண்டும். என்ற தம்முடைய எண்ணத்தை வெளியிட்டார்.

அப்பொழுது அமைச்சர்கள், "அத்தகு உயர்ந்த பணியை ஏற்றுச் செவ்வனே செய்து முடிக்கத் தகுந்த பேரறிஞர்கள், வேத வித்தகர்கள் நம் நாட்டில் எவருமில்லை!" என்று வருத்தத்துடன் தெரிவித்தார்கள்.

அவ்வேளையில் அரசவையில் இருந்து ஒருவர், "கிராமப்புறமொன்றில் பல்யா என்னும் சிறுவர் ஒருவர் முன்னோர்களாம் நபிமார்களின் வேதக் கட்டளைகளை (ஸுஹ்ஃபுகளை) அறிந்துள்ளார். நூஹ் (அலை), இப்ராஹீம் (அலை) ஆகியோரின் ஸுஹ்ஃபுகளை அவர் மனனம் செய்தும் உள்ளார்" என்ற தகவலை வெளியிட்டார்.

அதுகேட்டு வியப்புற்ற மன்னர் மல்கான் அச்சிறுவரை அரசவைக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டார்.

சின்னாட்களில் பல்யாவும், அவரின் வளர்ப்புத் தந்தையான ஆட்டிடையரும் அரசவைக்குள் நுழைந்தனர்.

பல்யாவின் திருவதனத்தைக் கண்டு அரசர் மல்கானும், அவையோரும், மற்றோரும் சிந்தனையில் ஆழ்ந்தனர்.

சிறுவர் பல்யாவின் முகத்தில் அருளொளி வீசியது.

இடையர் குலத்தில் உதித்தவராக அவர் இருக்க முடியாது. அவர் ஓர் உயர்குடி பிறப்பினராகத்தான் இருக்க வேண்டும். அது மட்டுமன்றி இறையருள் பெற்ற ஏந்தலாகவும் அவர் இருக்கக்கூடும் என்பது அனைவரின் ஏகோபித்தக் கருத்தாக இருந்தது.

வேதக் கட்டளைகள் பற்றிய வினாக்களை அறிஞர்கள் பலர் அடுக்கடுக்காய்த் தொடுக்க, அவற்றிற்கெல்லாம் அடுத்தடுத்து விடையளித்தார் பல்யா.

அதுகண்டு வியப்புற்ற மன்னர் மல்கான், சிறுவரின் வளர்ப்புத் தந்தையான இடையரை அருகில் அழைத்து,

இச்சிறுவர் உண்மையில் உம்முடைய மைந்தரா? அரசவை இது! இங்கே பொய்புகல வேண்டாம்! உண்மையல்லாது வேறெதனையும் கூறவேண்டாம்! என்று கண்டிப்புடன் வினவினார்.

அப்பொழுது அவ்விடையர் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் குகையொன்றில் குழந்தையாய்க் கிடந்த பல்யாவைக் காப்பாற்றி வளர்த்துவந்த வரலாற்றை ஒன்றுவிடாது கூறினார். அது கேட்டு வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்த மன்னர் மல்கான் ஆனந்த கண்ணீர் வடித்தார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் காணாமற்போன தம் மகனார் திரும்ப கிடைத்த மகிழ்ச்சியை விவரிக்க முடியுமா?

சிறுவர் பல்யாவை வாரியணைத்துக்கொண்ட மன்னர், அவையோர் அனைவரிடமும் அவரைத் 'தம் வாரிசு' எனவும், 'இளவரசர்' எனவும் அறிமுகப்படுத்தினார்.

தம் மகனைக் கண்ட அன்னை அல்காவோ என்றுமில்லா ஆனந்தம் கொண்டாள். அழுது வடிந்து கொண்டிருந்த அவளின் கண்கள் ஆனந்த மழையைச் சொரிந்தன.

அரண்மனை மட்டுமல்லாது, நகரம் முழுவதும் மகிழ்ச்சிக்கோலம் பூண்டது.

பல்யாவை கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்த இடையருக்கு போதுமான அளவு வெகுமதிகளை வழங்கி மன்னர் கண்ணியப்படுத்தினார்.

சிறுவருக்கு பல்யா இப்னுமல்கான் என்ற பெயர் மாறி, 'அபுல் அப்பாஸ்' என்ற குடும்பப்பெயர் ஏற்பட்டது.

## அரண்மனை வாழ்க்கையின்மீது வெறுப்பு

இழந்த மகனை மீண்டும் அடையப்பெற்ற மகிழ்ச்சி மன்னர் மல்கானுக்கு! எனினும் அம்மகிழ்ச்சி அவருக்கு நீடித்தா?

தமக்குப்பின் அரசபாரத்தை ஏற்று இளவரசராகி அரியணையில் அமர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்பார் என்று மல்கான் எண்ணினார். அதற்கேற்ற சூழ்நிலையில் மகனை வளர்க்க வேண்டும் என்பது அவரின் ஆசை!

போர்முறை, குதிரையேற்றம், நிர்வாகம் ஆகிய அனைத்தையும்



மகனுக்கு பயிற்றுவிக்க தந்தை விரும்பினார். ஆனால் 'அபுல் அப்பாஸின்' போக்கு மன்னர் மல்கானின் எண்ணத்திற்கு எதிர்மறையாய் காணப்பட்டது.

தனிமையும், இறைசிந்தனையும், இறைவணக்கம், திக்ரும், ஃபிக்ரும் அபுல் அப்பாஸின் இயல்புகளாய் அமைந்திருந்தன.

வலுக்கட்டாயமாக அவரை அரண்மனை ஆடம்பர வாழ்வின் பக்கம் செலுத்த முயல்வது வெறும் கனவோ என்ற கவலை மன்னருக்கு ஏற்பட்டது.

உலகக் கல்வியையும், அரசியல் முறைமைகளையும் கற்க இளவரசரை ஆசானிடம் அனுப்பி வைத்தார் அரசர். ஆனால் அபுல் அப்பாஸின் மனமோ ஆன்மீக வாழ்க்கையையே நாடியது.

ஒருநாள் அபுல் அப்பாஸ் தம் ஆசானிடம் சென்று கல்வி கற்று மீள்கையில் இறைநேசச் செல்வர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

"உமக்குப் பயன்தராத கல்வியை கற்கவா சென்றீர்?" என்று அவர் வினவ,

"என் மனம் விரும்பாத நிலையிலேயே நான் அதில் ஈடு படுத்தப்பட்டுள்ளேன்" என்று அபுல் அப்பாஸ் தம்முடைய உள்மன வெறுப்பை வெளிப்படுத்தினார்கள்.

## குத்புல் அக்தாப்

அபுல் அப்பாஸ் சந்தித்த இறைநேசச் செல்வர் வலிமார்களிலேயே உயர்ந்த படித்தரத்தையுடைய 'குத்புல் அக்தாப்' என்று சொல்லப்படுகிறது.

உலகின் அச்சாணி போன்று விளங்கும் 'குத்பு'மார்கள் ஒவ்வொரு காலத்திலும் ஒருவர் இருப்பார். அவர் குத்புஸ்ஸமான் என்று அழைக்கப்படுவார்.

'குத்பு'மார்கள் தங்களை எவர்கள் என வெளிக்காட்ட மாட்டார்கள்.

ஹஜ்ரத் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தம்முடைய நூலான 'ரூஹுல் குத்ஸ்' என்னும் நூலில், பின்வரும் செய்தியைக் குறிப்பிடுகின்றார்கள்.

# 16

“என்னுடைய கனவில் ‘குத்பு’ ஒருவரைக் கண்டேன். அவரைப் பலமுறை நான் சந்தித்தபோதினும் அவரை இன்னாரென என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

மறுநாள் அவர் சிலருடன் வீற்றிருப்பதைக்கண்ட நான் என் கனவில் கண்ட காட்சியை நினைவு கூர்ந்து அது பற்றி அவரிடம் கூற வாயெடுத்தேன்.

அப்பொழுது அவர், ‘நீர் விரும்பினால் உம் கனவைப்பற்றிக் கூறும்! ஆனால் அதில் கண்ட மனிதரின் பெயரைக் கூறவேண்டாம் என்று கூறினார்.

நானும் அவ்வாறே செய்தேன்.

பின்னர் அவர் என்னைவிட்டுப் பிரியும் வேளையில், என்னை யாரென நீர் அறிந்துகொண்டதால் இனி நான் இங்கிருப்பது நல்லதல்ல! என்று கூறிச் சென்றார். அவரின் பெயர் அல் அஷ்ஹல் அல்கபாயிலி (ரஹ்) ஆகும். என்று நாம் சந்தித்த குத்பு அவர்களைப் பற்றி இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் குத்புமார்களுக்கெல்லாம் மேலான ‘குத்புல் அக்தாப்’ ஆக இருந்தார்கள் என்று கூறப்படுகிறது.

‘குத்பு’ என்னும் பதவி ‘கௌது’ என்னும் பதவியைக் காட்டினும் மேலானது எனச் சிலர் கூறுகின்றனர்.

இப்பதவி அல்லாஹ்வால் விரும்பியவர்களுக்கு அளிக்கப் பெறுகின்றதே அன்றி, எவரும் தங்களின் முயற்சியால் இதனை அடைய முடியாது என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய மேலான ஆன்மீகப்படித்தரத்தை எய்தப்பெற்ற இறைநேசச் செல்வரை அபுல் அப்பாஸ் சந்தித்தார்.

“நீர் தற்போது கற்கும் இக்கல்வி உம்முடைய ஆன்மீக வேட்கையை தணித்துவிடாது! உமக்குத் தேவையான மெய்ஞ்ஞான அமுதம் இங்கே இருக்கிறது” என்று அவர் அபுல் அப்பாஸிடம் கூறினார்.

# 17

# ஆன்மீக வேட்கை

உண்மையில் அபுல் அப்பாஸின் மனம் ஆன்மீக வேட்கையால் தவித்தது, தத்தளித்தது, அதற்கொரு பற்றுக் கொம்பாய், வேட்கையைத் தணிக்கும் நீரூற்றாய் அவர் சந்தித்த அப்பெரியார் அமைந்தார்.

ஆன்மீகத் தேட்டத்தில் உள்ளவர்களுக்கு உலகக் கல்வியால் எந்தப் பயனும் ஏற்படாது என்பதற்கு எடுத்துக்காட்டாக மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் வாழ்க்கையைக் குறிப்பிடலாம்.

கௌன்யா நகருக்கு ‘ரூம்’ என்ற மற்றொரு பெயரும் உண்டு.

அவ்வூரைச் சேர்ந்த இறைநேசர் ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் தம் தந்தை பஹாவுத்தீன் வலத் (ரஹ்) அவர்களுக்குப் பின்னர், அவர்களின் ஆசனத்தில் அமர்ந்து மாணவர்களுக்கு கல்வி போதித்தனர். அப்பொழுது அவர்களுக்கு வயது 26.

பின்னர் அவர்கள் திமிஷ்க் சென்று ஷைகு முஹ்யித்தீன் அரபி (ரஹ்) போன்ற பெரியார்களிடம் தொடர்பு கொண்டனர்.

சையது புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர்கள் ரூமி (ரஹ்) அவர்களின் ஆன்மீக ஆசானாக இருந்தார்கள்.

ஆசான் இறப்பெய்தியபின் ரூமி (ரஹ்) அவர்கள் ஆன்மீகப் பற்றுக் கொம்பின்றி தவித்தார்கள்.

ஹிஜ்ரீ 642 இல் தம்முடைய 38வது வயதில் ஒருநாள் அவர்கள் கௌன்யா, பள்ளிவாயிலின் நீர்த்தேக்கத்தின் அருகில் அமர்ந்து சில நூல்களை வைத்துப் படித்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது கம்பளி உடையணிந்த ஒருவர் அவர்களின் அருகில் வந்தார். அவரை அவர்கள் அருவருப்புக் கண்களுடன் நோக்கினார்கள்.

அப்பொழுது அவர் அந்நூல்களைச் சுட்டிக்காட்டி, “அவை என்ன நூல்கள்” என்று வினவினார்.

“இவை ஞான உதிப்பால் எழுதப்பெற்றவை. இவை பற்றி உமக்கென்ன அக்கறை?” என்று வெடுக்கென பதிலளித்தார்கள் ரூமி (ரஹ்) அவர்கள்.

அதுகேட்ட அவர் கண்ணிமைப்பொழுதில் அந்நூல்கள் அனைத்தையும் வாரி நீர்த்தேக்கத்தில் போட்டுவிட்டார்.

அதுகண்டு ரூமி (ரஹ்) அவர்கள் செய்வதறியாது தவித்தார்கள். தம் உயிரே போய்விட்டது போன்ற உணர்வு அவர்களுக்கு. தாம் அரும்பாடுபட்டு சேகரித்துவைத்த நூல்களையெல்லாம் இம்மனிதர் நீரில் வீசிவிட்டாரே என்று கலங்கி நின்ற அவர்கள், "என்ன செய்தீர்? என்ன செய்தீர்?" என்று வாய்விட்டுக் கதறினார்கள்.

ஆனால் கம்பளி ஆடை அணிந்திருந்த மனிதரோ அவர்களின் அலறலைப் பெரிதுபடுத்தவில்லை. மாறாக புன்முறுவல் பூத்தார்.

பின்னர் அவர் நீர்த்தேக்கத்தில் தம் கையைவிட, நூல்கள் அனைத்தும் அவரின் கைக்குள் வந்தன.

என்னே வியப்பு! அவை அணுவளவும் நீரில் நனையாதிருந்தன.

அதுகண்டு மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) மெய்மறந்து நின்றார்கள்.

"என்னே புதுமை!" என்ற வியப்பு மொழிகள் அவர்களின் வாயிலிருந்து வெளிவந்தன.

அப்பொழுது அம்மனிதர், இதுபற்றி உமக்கேன் அக்கறை? என்று வினவினார்கள்.

அதுகேட்டு ரூமி (ரஹ்) அவர்களின் அகக்கண்கள் திறந்து கொண்டன.

நாம் எவரை சாமான்யர் என்று கருதினோமோ, அவர் சாமான்யர் அல்லர்! மாபெரும் மகான் என்று அவர்கள் தெளிவடைந்தார்கள்.

அந்த கம்பளி ஆடை அணிந்த மனிதர்தாம் ஷம்ஸுத் தப்ரேஸ் (ரஹ்) அவர்கள். அதன் பின்னர் ரூமி (ரஹ்) அவர்கள் ஷம்ஸுத்தப்ரேஸ் (ரஹ்) அவர்களைத் தம் இல்லம் அழைத்துச்சென்று கண்ணியப்படுத்தி உபசரித்தனர்.



இருவரும் அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு நாற்பது நாட்கள் மற்றொரு வரலாற்றின்படி ஆறுமாதங்கள் தனித்திருந்தனர்.

இந்த ஆறு மாதத்தில் ஷம்ஸுத் தப்ரேஸ் (ரஹ்) அவர்கள் மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் இதயத்தில் ஆன்மீக இரகசியங்களைப் பாய்ச்சினர்.

ரூமி (ரஹ்) அவர்களின் அகக்கண் வெளிச்சம் பெற்றது. இதுவரை தாம் கற்ற கல்வி அனைத்தும் சாதாரணமானவை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

★ ★ ★

இதேநிலை அபுல் அப்பாஸ் வாழ்வில் ஏற்பட்டது.

ஆன்மீகத் தேட்டத்தில் இருந்த அவருக்கு ஞானமேதை ஒருவரின் தொடர்பு ஏற்பட்டதால் அவரின் அகக்கண்கள் ஒளிபெற்றன.

இதுவரை தாம் கற்றவை யாவும் தமக்குப் பயனற்றவை; எனினும் தற்போது தாம் கற்கும் அகமியக் கல்வியே தமக்கு உகந்தது என்ற திருப்தி மேலிட அவர்களின் நாட்டம் முழுவதும் அதனளவிலேயே சென்றது.

## பெற்றோரின் கவலை

அபுல் அப்பாஸ் என்று குறிப்பிடுவதை விடுத்து இனி கிள்ரு (அலை) என்றே நாம் குறிப்பிடுவோம்.

வாலிபப் பருவத்தினராய் இருந்த ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களின் சிந்தையெல்லாம் ஆன்மீகத்திலேயே மூழ்கியிருந்த தேயன்றி உலக அலுவல்களில் அணுவளவும் ஈடுபாடு கொள்ள வில்லை.

உலகக் கல்வி பயிலச் சென்ற அவர்களின் உள்ளத்தில் ஓர் மாறுதல் தோன்றியிருக்கும் என்று எண்ணிய பெற்றோருக்கு பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது.

தந்தை ஏற்பாடு செய்திருந்த ஆசானிடம் செல்வதை விடுத்து ஆன்மீகக் கல்விபெறச் சென்ற செய்தியை பெற்றோர்கள் அறிய மாட்டார்கள் அல்லவா?

நாளுக்கு நாள் கிள்ரு (அலை) அவர்களின் உள்ளம் தனிமையைத்தான் நாடியது.

இனி இவரைப் படிக்க அனுப்பிவைப்பதில் பயனில்லை என்று பலர் மன்னர் மல்கானிடம் தங்களின் கருத்தைத் தெரிவித்தனர்.

அக்கருத்தைத் தீவிரமாக சிந்தித்த மன்னர், இனி அவரைத் திருத்த என்னதான் மாற்று வழி? என்று ஆலோசித்தபொழுது,

அவருக்கு மணமுடித்து வைப்பதே உகந்த வழி! மனைவியின் வருகையால் அவரின் மனத்தில் மாற்றம் நிகழலாம் என்று சிலர் யோசனை தெரிவித்தனர். அது சரியானதொரு முடிவாகவே மன்னருக்கும் தோன்றியது.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் விரும்பாத நிலையிலேயே அவர்களின் திருமணமும் நிகழ்ந்தது.

முதலிரவின் வேளையில் எழிலே உருவான அவர்களின் மனைவி பள்ளியறையினுள் நுழைந்தாள்.

அப்பொழுது கிள்ரு (அலை) அவர்கள் அவ்வறையின் ஓர் மூலையில் அல்லாஹ்வை வணங்கிக்கொண்டிருந்தனர்.

அவர்களின் அண்மையில் சென்ற அவள் அமைதியுடன் நின்றாள்.

அவளை ஏறிட்டுப் பார்த்த அவர்கள், பெண்ணே! உனக்கு இங்கே என்ன வேலை? என்று வினவ,

அதற்கவள், நான் தங்களின் மனைவியல்லவா? தாங்கள் என்னரும் கணவரல்லவா? என்று கூறினாள்.

அது கேட்ட அவர்கள், நீ எதனை எதிர்பார்த்து என்னிடம் வந்தாயோ அதனை என்னிடம் பெறமாட்டாய்! என்று கூற,

"அதனால் பாதகமில்லை! தாங்கள் விரும்பும் வண்ணம் நான் நடந்து கொள்வேன். தங்களுக்கு ஊழியம் செய்யும் நற்பேறு ஒன்றே எனக்குப் போதுமானது." என்று அவள் கூறினாள்.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் தொழுகையில் ஈடுபட்டுவிட்டார்கள்.



மனைவி என்ற உறவுகொண்டு வந்த அவ்வெழிலார் நங்கையும் இறைவணக்கத்தில் ஈடுபட்டு விட்டாள்.

இவ்வாறு இருவரும் வைகறைப்பொழுதுவரை இறை வணக்கத்திலேயே இரவைக் கழித்தார்கள். முதலிரவு மட்டுமா?

இல்லை; இல்லை;

கணவன்–மனைவியான அவ்விருவரின் இரவுகள் யாவும் அதேபோன்றே கழிந்தன. இவ்விதமாக ஆண்டு ஒன்று கழிந்தது.

மன்னர் மல்கானுக்கும், மற்றவர்களுக்கும் பெருத்த ஏமாற்றம்.

ஓராண்டாகியும் தம் ஒரே மகனாரின் போக்கில் மாற்றமேது மில்லையே! என்று அவர் கலங்கினார். குழம்பிப் போனார்.

மகன்–மருமகளுக்கிடையே தாம்பத்திய உறவு உண்டா? இல்லையா? என்ற ஐயமும் குழப்பமும் மேலிட சேடிப் பெண்களை ஏவி, மருமகளிடம் நிலைமை குறித்து விசாரித்தார் மன்னர் மல்கான்.

விடை என்ன?

அவர் எதிர்பாத்ததுபோன்ற ஏமாற்றமே!

அப்பொழுது சிலர் மன்னரிடம் இப்பொழுது தங்களின் மருமகளாக வந்திருப்பவள் திறமையற்றவள்; கணவரை மயக்கித் தன் வலையில் வீழ்த்தத் தெரியாதவள். எனவே இவளை விவாகரத்து செய்துவிட்டு விதவை ஒருத்தியை அவருக்கு மணமுடித்து வைப்பின் நிலைமை சரியாகிவிடும் என்று யுக்தி கூறினார்கள்.

அடுத்தடுத்து குழப்பங்களில் சிக்கித் தவித்த மன்னருக்கு இந்த யுக்தி சரியானதாகத் தோன்றியது.

எனவே "உம்முடைய மனைவி உமக்குப் பொருத்தமற்றவள்; எனவே அவளை தலாக் கூறிவிடு!" என்று கூறி அவர் வற்புறுத்தினார்.

தமக்கு எவ்வகையிலும் இடையூறாக அமையாத என் மனைவியை தலாக் சொல்வதா? என ஒருகணம் கிள்ரு (அலை) அவர்கள் தயங்கியபோதினும், பின்னர் வேறு வழியின்றி தலாக் கூறினார்கள்.

அதன்பின்னர் அவர்களுக்கு விதவைப் பெண்ணொருத்தி மணமுடித்து வைக்கப்பட்டாள்.

முதல் மனைவியைப் போன்ற இறையச்சமுள்ள பெண்ணல்ல இவள். அவளை ஏறெடுத்தும் பாராமல் இருந்தார்கள் கிள்ரு (அலை) அவர்கள்.

ஆனால் அவளோ அவர்களிடம், "நான் தங்களின் மனைவி" என்று கூறினாள். அப்பொழுதவர்கள், நீ என் இறை வணக்கத்திற்கும், ஆன்மீக வாழ்க்கைக்கும் இடையூறாய் இருப்பின் என்னுடன் தங்கியிருக்க முடியாது என்றார்கள்.

அவர்களின் மனம் கோணாது நடப்பதாகக் கூறிய அவளுக்கு நாளடைவில் அவர்கள்மீது வெறுப்பு ஏற்பட்டது.

எவ்வாறேனும் அவர்களை மயக்கி, தன் வலையினுள் வீழ்த்த எண்ணிய அவள் கவர்ச்சியான தோற்றத்தில் அவர்களின் முன் வந்தாள். அரைகுறை ஆடையுடனும் வந்து வசீகரிக்க முயன்றாள்.

எனினும் அவளின் முயற்சிகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராகவே முடிந்தன.

★ ★ ★

மாபெரும் ஞானி அபூயஜீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களிடம், இறைநேசர் என்றால் யார்? என்று வினவப்பட்டபொழுது,

இறைவனையன்றி வேறெதனையும் நேசிக்காதவர் என்று அவர்கள் பட்டென்று விடையளித்தார்கள்.

மேலும் அபூயஜீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

நான் இறை நினைவில் என்னையே மறந்து பகலையும், இரவையும் அறியாதிருக்கும் நிலையில் கால நேரத்தை நான் எவ்வாறு அறிவேன்?" என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள், "இறைக் காதலானது ஒருவனை இவ்வுலகை மட்டுமல்லாது மறு உலகையும் மறக்கடித்துவிடுகிறது" என்று கூறினார்கள்.

★ ★ ★



இதுபோன்ற நிலையிலிருந்த கிள்ரு (அலை) அவர்களின் முன் இம்மையின் கவர்ச்சிகள் எடுபடுமா?

மஹ்பூப் சுப்ஹானி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் துவக்கத்தில் ஆன்மீகப் பரிபக்குவம் அடைவதற்காக மேற்கொண்ட தவம் மிக்கக் கடினமானதும், அபாரமானதும் ஆகும்.

கானகத்தில் முற்கால பாரசீக மன்னர்களின் கோட்டையான பாழடைந்த கோட்டையில் (புரூஜுல் அஜமியில்) கடும் தவம் மேற்கொண்டார்கள்.

அவர்களின் தவத்தைக் கெடுக்க ஷைத்தான் பலவாறு முயற்சி செய்தான்.

ஒருமுறை அவன் பெண்ணுருவில், அழகெலாம் திரண்ட ஆரணங்காய் நிர்வாணமாய் அவர்களின் முன் தோன்றினான்.

எனினும் ஷைத்தானின் சூழ்ச்சியை விளங்கிக்கொண்ட அவர்கள் அவளை ஏறிட்டும் பாராமல் தவம் செய்தார்கள்.

தன் சூழ்ச்சி பலிக்காதது கண்டு மூக்குடைந்த அவன் ஒரு நாளிரவு அவர்களின் கனவில் நாற்பது தடவை அழகிய கன்னியின் உருவில் தோன்றி அவர்களின் உறுதியைக் குலைக்க முயன்றான்.

அதன் காரணமாக அன்றிரவு மட்டும் அவர்கள் நாற்பது தடவை குளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு இறைவனளில் தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்ட ஞானியரை எந்தவிதமான உலகக் கவர்ச்சியும் அவர்களின் உறுதியைக் குலைத்துவிடாது.

அதேபோன்று தம்முடைய மனைவி என்று உறவு கொண்டாடிக் கொண்டு அரைகுறை ஆடைகளுடன் தம்மிடம் தோன்றிய அப்பெண்மணியால் கிள்ரு (அலை) அவர்கள் நிலைதடுமாறி விடவில்லை; உறுதி தளர்ந்துவிடவில்லை.

தன்னுடைய முயற்சிகள் அனைத்திலும் தோல்வியைத் தவிர்த்து வேறொன்றையும் காணாத அவள் வெறுப்புற்று,

"இல்வாழ்வில் சற்றும் நாட்டமற்ற ஒரு துறவியைத்தான் எனக்கு மணமுடித்து வைத்தீர்கள்! என்று கூறி அங்கலாய்த்தாள்.

இச்செய்தி மன்னர் மல்கானின் செவிக்கு எட்டியது.

இவையெல்லாம் அவரை வாட்டி வதக்கி மனோ வருத்தமும் வெஞ்சினமும் கொள்ள வைத்தது.

ஒரு பெண்ணுக்கேற்ற ஆண்மகனாக இருந்து இல்லற வாழ்வு நடத்த வாக்குறுதி அளிக்குமாறு அவர் கிள்ரு (அலை) அவர்களை வற்புறுத்தினார்.

அதற்கு அவர்கள் இணங்காததால் அவர்கள் அரண்மனை மாளிகையின் ஓர் அறையினும் அடைத்துவைத்து கடுமையான காவலை ஏற்படுத்தினார்.

அத்தகைய வாக்குறுதி அளித்தாலன்றி விடுவிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார் மன்னர் மல்கான்.

தம் தந்தையின் பிடிவாதப்போக்கு ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களின் உள்ளத்திற்கு நோவினை தந்தது.

தம்முடைய மனோ நிலையை அறியாத, உணராத தந்தையாக உள்ளாரே என்று அவர்களின் உள்மனம் வேதனைப்பட்டது.

மாளிகைக்குள் சிறைவைக்கப்பட்ட அவர்கள் இப்பொழுது முன்பைக் காட்டினும் அதிகமாக இறைவணக்கத்திலும், திக்ரிலும் ஈடுபட்டார்கள்.

மூன்றாம் நாள் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் பூட்டி வைக்கப்பட்ட அறையின் உள்ளிருந்து மாயமாக மறைந்து போனார்கள்.

அது கண்டு காவலர்கள் திடுக்குற்றார்கள்.

அறை முழுவதும் தேடினார்கள்.

ஆனால் கிள்ரு (அலை) அவர்களோ காற்றோடு காற்றாகி மறைந்து போனார்கள்.

## கிள்ரு (அலை) அவர்களைத் தேடிய காவலர்கள்

"உலகின் எந்த மூலையில் பதுங்கியிருந்தாலும் பிடித்து வாருங்கள் அபுல் அப்பாஸை! கிள்ரு (அலை) அவர்களை" என்ற அரச ஆணை பிறந்ததுதான் தாமதம், நாட்டின் பல பகுதிகளுக்கும்



ஆட்கள் சிட்டாய் பறந்தனர். அவர்களைப் பிடித்துகொண்டு வருவோருக்கு உரிய வெகுமதியும் வழங்கப்படும் என்ற அறிவிப்பை மன்னர் வெளியிட்டிருந்ததால் அரச காவலர்களுக்கோ சொல்லொணா ஆர்வமும், உத்வேகமும் பிறந்து ஓடினார்கள், தேடினார்கள், எனினும், ஏமாற்றம்தான் எஞ்சியது.

அந்நாட்டைச் சூழ்ந்து பரந்துவிரிந்த கடலும் அதில் எண்ணற்ற தீவுகளும் இருந்தன.

நிலப்பரப்பை ஒட்டிய நாடு நகரங்களிலும், வனாந்திரங்களிலும் தேடியும் பயனில்லை. இனி கடல்கடந்துச் சென்று தீவுகளிலும் தேட வேண்டும் என்ற எண்ணம் மிகவே, காவலர்கள் கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்து கடற்பயணம் மேற்கொண்டனர். ஆழ்கடலில் பயணம் தொடர்ந்தது.

இரண்டாம் நாளன்று வானிலை பெரிதும் மாறுதல் அடைந்தது. கருமேகங்கள் சூழ்ந்தன. மெல்ல வீசத் துவங்கிய கடற்காற்று பெரும் சூறாவளியாக மாறியது.

செய்வதறியாது தவித்தனர் காவலர்கள். கிள்ரு (அலை) அவர்களைத் தேடிப் புறப்பட்டது வீண்வேலை என்று அவர்களின் மனதிற்பட்டது. இப்பொழுது அதைப்பற்றியெல்லாம் சிந்தித்து ஆகப்போவது என்ன?

ஆழியின் அலைகள் சீற்றமெடுத்து கோரத் தாண்டவம் ஆடின. அலைகளின் இரைச்சலும் சூறாவளியின் பேய்க் கூச்சலும் கப்பலில் இருந்தோரைச் செவிடர்களாக்கின.

"கிள்ரு (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அருளுக்குரிய நேசர்! அவர்களுக்குத் தொல்லை கொடுக்க முயன்றதன் விளைவைத்தான் இப்பொழுது நாம் சந்திக்கிறோம்" என்று எண்ணி கலங்கினர் காவலர்கள்.

மரணத்தின் விளிம்பிற்கு வந்துவிட்ட அவர்கள் தங்கள் வாழ்நாளின் இறுதி மணித்துளிகளைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த வேளையில் அவர்களின் மரக்கலம் பேரலை ஒன்றினுல் தூக்கி எறியப்பட்டுச் சிதறியது, சின்னாபின்னமாயிற்று.

"கிள்ரு (அலை) அவர்கள் எங்கிருந்தாலும் பிடித்து வருவதாகச்" சூளுரைத்துப் புறப்பட்ட அரச காவலர்களின் கதி பரிதாபத்திற்குரியதாகிவிட்டது.

அனைவரும் ஆழ்கடலுக்கு இரையாயினர். இருவரைத் தவிர.

தப்பித்தோம்! பிழைத்தோம்! என்னும் நிலையில் அவ்விருவரும் உடைந்த மரக்கலத்தின் கட்டைகளை மிதவைகளாக்கிக் கொண்டு நீந்தினர். இறையருள் அவர்களுக்குத் துணை நின்றது.

வெகு விரைவில் ஒரு தீவின் கரையை அவ்விருவரும் வந்தடைந்தார்கள்.

பச்சைப் பசேல் என செழிப்புடன் விளங்கிய அத்தீவு அவர்களின் உள்ளங்களுக்குக் குதூகலத்தை தந்தது.

மனித நடமாட்டம் இல்லாதிருந்த அதில் அவர்கள் நடந்து சென்றார்கள்.

என்னே வியப்பு!

நம்ப முடியாத காட்சியை அவர்கள் கண்டார்கள்.

ஆம்!

எந்த "கிள்ரு (அலை) அவர்கள் தேடிப் புறப்பட்டார்களோ அந்த இறைநேசர் அவ்விருவரின் எதிரில் தொழுது கொண்டிருந் தார்கள்.

அவர்கள் தொழுது முடிந்ததும் அவ்விருவரும் அவர்களின் முன் சென்று, தங்கள் எவரென அறிமுகம் செய்து கொண்டார்கள்.

அப்பொழுது ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் அக் காவலர்களை நோக்கி, "நீங்கள் வந்த நோக்கத்தை நானறிவேன். வழிப்பயணத்தில் நீங்கள் உற்ற இன்னல்களையும் அறிவேன். எனவே நீங்கள் விரும்பினால் என்னுடனேயே இவ்விடத்தில் தங்கிவிடலாம் என்றனர்.

அதற்கு இசையாத அவ்விருவரும் தாங்கள் தங்களின் ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தனர்.

அதுகேட்ட கிள்ரு (அலை) அவர்கள், "அதற்கு நான் உதவி செய்கிறேன். ஆனால், என்னைப்பற்றியோ, என் இருப்பிடம் பற்றியோ எவரிடமும் கூறக்கூடாது. அதற்கு நீங்கள் வாக்குறுதி தரவேண்டும்" என்று கூறினர்.



அதற்கு அவ்விருவரும் இசைந்தனர்.

அப்பொழுது "கிள்ரு (அலை) அவர்கள் உங்களில் எவர் வாக்கு மீறுவாரோ அவர் சொல்லொணா துன்பத்திற்கு ஆளாவார் என்றும் கூறினார்கள்.

பின்னர் அவர்கள், அக்காவலர்கள் தங்களின் ஊர் போய்ச்சேர உதவி செய்தார்கள்.

## மல்கானின் சீற்றம்

இறையருளால் நல்விதமே தங்களின் ஊர் போய்ச்சேர்ந்த இரு காவலர்களில் ஒருவனுக்கு பேராசை ஏற்பட்டது.

"கிள்ரு (அலை) அவர்கள் இருக்குமிடத்தை மன்னர் மல்கானிடம் தெரிவித்தால் உரிய சன்மானம் கிட்டும். எனவே இத்தகைய அரிய வாய்ப்பை நழுவ விட்டுவிடக் கூடாது" என்று எண்ணிய அவன், தீவில் கிள்ரு (அலை) அவர்களிடம் கொடுத்த வாக்குறுதியை மீறவும் துணிந்தான். வாக்கை மீறினால் கேடு விளையும் என்ற அவர்களின் எச்சரிக்கையும் அவன் மறந்தான்.

எனவே அவன் மன்னர் மல்கானிடம் சென்று கடற்பயணம் மேற்கொண்டு சென்றது முதற்கொண்டு ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைக் கண்டது வரை அனைத்துச் செய்திகளையும் சொல்லி முடித்தான்.

அவனின் கூற்றை முன்னர் நம்பாததால், தன்னுடன் பயணம் செய்த மற்றவனையும் விசாரிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவ்வண்ணமே மன்னர் மல்கான் மற்றவரை அழைத்து விசாரித்தான்.

இரண்டாமவனோ ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களிடம் கொடுத்த வாக்குறுதியைக் காக்க எண்ணினான். அவர்களை காட்டிக்கொடுக்க அவன் விரும்பவில்லை.

எனவே அவன், கிள்ரு (அலை) அவர்களைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. அவர்களை நான் கண்டதுமில்லை என்று கூறினான்.

அதுகேட்ட மன்னர் சினங்கொண்டு அம்மனிதரை சிறை யிலிட்டான்.

அதன் பின்னர் முதல் மனிதன் கூறிய தீவிற்கு தம்முடைய வீரர்களை மன்னர் அனுப்ப, அவர்கள் அங்கு தேடித்திரிந்தனர். எனினும் கிள்ரு (அலை) அவர்களைக் காணாத நிலையிலேயே திரும்பிவந்தனர்.

அதுகண்டு வெகுண்டெழுந்த மன்னர் முதல் மனிதன் கிள்ரு (அலை) அவர்களைக் கண்டதாகக் கூறிய செய்தி உண்மையான தல்ல எனத் தீர்மானித்து அவனைக் கொன்றொழித்தார்.

தம்முடைய ஆருயிர் மகன் தம்மையும், நாட்டையும் துறந்து ஓடிப்போகக் காரணமாயிருந்த கிள்ரு (அலை) அவர்களின் இரண்டாவது மனைவியையும் கொல்லுமாறு ஆணையிட்டார்.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களுக்கு விரோதமாகச் செயல்பட்டு அவர்களைப் பற்றிய அந்தரங்கச் செய்திகளை வெளிப்படுத்தியதால் அவர்களின் இரண்டாம் மனைவியும், அவர்களிடம் தீவில் தந்தை வாக்கிற்கு மாறு செய்த காவலனும் கொலையுண்டார்கள்.

அவர்களைப் பற்றிய இரகசியங்களை இரகசியமாகப் பொதிந்து காப்பாற்றிய அவர்களின் முதல் மனைவியும், தீவில் அவர்களைச் சந்தித்த இரண்டாம் மனிதனும் தீங்கிலிருந்து தப்பினார்கள். சிறையில் அடைக்கப்பட்ட அம்மனிதரை மன்னர் விடுதலை செய்தார்.

மன்னரின் போக்கைக் கண்டு அஞ்சிய கிள்ரு (அலை) அவர்களால் தலாக் சொல்லப்பட்ட முதல் மனைவி அவ்வூரைவிட்டே வெளியேறினாள்.

பின்னர் அந்நாட்டில் அக்கிரமங்கள் பெருகிற்று. அதன் விளைவாக அந்நாடு அழிவுற்றது. அங்கு வாழ்ந்த மக்கள் அழிந்தார்கள்.

இவ்வாறு "கிள்ரு (அலை) அவர்களைப் பற்றிய வரலாறு கூறப்படுகிறது.

அவர்களைப் பற்றிய செய்திகள், "கிதாபுத் தஃரீப் வல் இஃலாம்" என்னும் நூலில் அதிகமாக காணப்படுகிறது.

இமாம் ஸுஹைலி (ரஹ்) அவர்கள் இந்நூலின் ஆசிரியராவர்.



# கிள்ரு என்னும் காரணப்பெயர்

கிள்ரு (அலை) அவர்களின் இயற்பெயர் பல்யா இப்னு மல்கான் என்பது. அவர்களின் குடும்பப்பெயர் அபுல் அப்பாஸ் ஆகும். கிள்ரு என்பதோ காரணப்பெயர் எனலாம்.

அவர்கள் வரண்ட நிலப்பகுதியில் அமர்ந்தால் அப்பகுதி முழுவதும் பசுமையாகிவிடும். அதனாலேயே அவர்களுக்கு ஹளிர் (பசுமை) என்னும் பெயர் ஏற்பட்டது என்பதாகச் சொல்லப்படுகிறது.

"கிள்ரு (அலை) அவர்கள் ஒரு வெள்ளைத் தோல்மீது அமர்ந்தார்கள். அது பசுமையாகிவிட்டது" என்று இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் அவர்கள் இதற்கு விளக்கமாக "வெள்ளைத்தோல் என்பது பூமி" என்றும் கூறுகின்றார்கள்.

'ஆபெஹயாத்' என்னும் சுனை நீரை அவர்கள் அருந்திய பொழுது 'நீர் கிள்ர் (பசுமை) ஆக இருப்பீர். உம்முடைய பாதம் படும் இடமெங்கும் பசுமையாகிவிடும்' என்று அசரீரி முழங்கியது என்றும் கூறப்படுகின்றது.

வேறு சிலரோ, "இவர்கள் எங்கு நின்று தொழுதபோதினும் அவ்விடம் பசுமை பெற்றுவிடும் என்றும் அதன் காரணமாக இவர்களுக்கு 'அல்களீர்' (பசுமை மனிதர்) என்று பொருள்படும் பெயர் ஏற்பட்டது என்றும், அதுவே பின்னர் மருவி கிள்ர் (பசுமை) என்று சுருங்கிவிட்டதென்றும் கூறுகின்றனர்.

கிள்ரு (அலை) அவர்களின் காலம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

அவர் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் சமகாலத்தவர் என்று சிலர் கூறுகின்றனர்.

இப்ராஹீம் (அலை) பாபல் நகரைவிட்டு நீங்கிச் சென்ற பொழுது "கிள்ரு (அலை) அவர்களும், அவர்களுடன் சென்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

வரலாற்றாசிரியர்களோ அவர்கள் நபி மூஸா (அலை) அவர்களின் காலம்வரை வாழ்ந்தனர் என்றும், சிக்கந்தர் துல்கர்னைனின் சமகாலத்தவர் என்றும், கூறுகின்றனர். இதுவே பெரும்பாலோரின் கருத்தாகவும் இருக்கிறது.

# சிக்கந்தர் துல்கர்னைன் வரலாறு

சிக்கந்தர் துல்கர்னைன் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களின் சித்தியின் மகன் என்று கூறப்படுகிறது.

வேறு சிலரோ அவர் அவர்களின் பெரிய அன்னை மகன் என்று கூறுகின்றனர்.

எனினும் இவ்விருவரும் ஒன்றுவிட்ட சகோதரர் முறையினர் என்பது மட்டும் தெளிவாகிறது.

துல்கர்னைன் என்பதற்கு 'இரு கொம்புகள் உள்ளவர்' என்பது பொருளாகும்.

துல்கர்னைன் என்பவர் எவர் என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

இவர் ஒரு நபியா? என்பது பற்றியும், தெளிவான முடிவு ஏதும் இன்றுவரை ஏற்படவில்லை.

1. அல்முன்திர் அல் அக்பர் பின் மாகுல்ஸமா என்பதே. துல்கர்னைன் என்னும் அவரின் நெற்றியில் இரண்டு முடிச் சுருள்கள் விழுந்ததன் காரணமாக அவருக்கு துல்கர்னைன் என்னும் பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

இம்ரவுல் கைஸால் தம்முடைய கவிதையொன்றில் கூறப்பட்டுள்ள துல்கர்னைன் இவர்தாம் என இப்னு துரைத் கூறுகிறார்.

இம்ரவுல் கைஸ் என்பவன் அரபு நாட்டின் பெரும் கவிஞன் (கி.பி. 540) என்பதும்,

இப்னுதுரைத் என்பவர் (கி.பி. 837–930) இஸ்லாத்தில் தோன்றிய மாபெரும் அறிஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2. திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள துல்கர்னைன் தென் அரபு நாட்டின் பேரரசராயிருந்த துப்பவுல் அக்ரானையே குறிக்கும் என அரபு நாட்டின் தென்பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

"துப்பவுல் அக்ரான்' எனப்படும் இப்பேரரசர் 'துப்பவுல் அக்பர்' என்றும் அடைமொழிச் சொல்லால் குறிப்பிடப்படுகிறார்.



மாண்புமிகுந்த மன்னரான அவரே கஃபாவுக்கு முதன் முதலாக போர்வை போர்த்தியவர் என்று கூறப்படுகிறது.

அவர் யமன் நாட்டில் இரண்டாயிரம் யூதரப்பி (யூத அறிஞர்) களைச் சந்தித்தார். அப்பொழுது அவர்கள் இறுதி நபியின் வரவைப்பற்றி அவரிடம் முன்னறிவிப்புச் செய்தனர்.

எனவே அவர் இறுதி நபி குடியேறும் இடத்தை அவர்களின் மூலம் அறிந்து அங்குச் சென்று நானூறு யூதரப்பிகளுடன் குடியேறி நபி (ஸல்) அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தார்.

பின்னர் அவர் அவர்களனைவரையும் அங்கு வாழுமாறு பணித்து இறுதி நபி அவர்களிடம் தம் மடலைத் தருமாறு கூறிவிட்டுச் சென்றார்.

அம்மடல் இறுதியாக யூதரப்பிகளின் வழிவந்த அபூ ஐயூப் காலித் இப்னு ஸைத் (ரலி) அவர்களிடம் வந்தது.

அதனை அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்தார்கள். அதில் துப்பவுல் அக்பர் 'நான் இறைவன் ஒருவனே என்று சான்று பகர்கிறேன். அண்ணல் நபி (ஸல்) அவர்களை இறுதி நபியென ஏற்றுக்கொள்கிறேன். எனக்காக இறுதித் தீர்ப்பு நாளின்பொழுது பரிந்துரைக்குமாறு வேண்டுகிறேன்' என்று எழுதியிருந்தார் என்று கூறப்படுகிறது.

துவக்கத்தில் தீயை வணங்கக்கூடியவராக இருந்த மாமன்னர் துப்பவு பின்னர் ஓரிறை வணக்கத்தை மேற்கொண்டார். அதே கொள்கையை ஏற்று வழிபடுமாறு தம் குடிமக்களையும் அவர் வற்புறுத்தினார். அதற்கு மறுத்த பலரை இறை ஆணைப்படி அவர் கொன்றார் என்று கூறப்படுகிறது.

இம்மன்னரின் கூட்டத்தினரைப் பற்றியே அல்லாஹ் தன் திருமறையில் 'துப்பவு மக்கள்' என்று குறிப்பிடுகின்றான். (44:37)

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் துப்பவு ஒரு நபியா? என்று வினவப்பட்டபொழுது, "அது எனக்குத் தெரியாது" என்று கூறினர்.

திருமறையில் அல்லாஹு தஆலா, "மேலும் துல்கர்னைனப் பற்றி அவர்கள் உம்மிடம் வினவுகின்றனர். அவரைப் பற்றிய செய்தியை வெகு விரைவில் உங்களுக்கு நான் ஓதிக் காட்டுவேன் என்று கூறுவீராக!" என்று கூறுகின்றான். (18:83)

அல்லாஹு தஆலா குறிப்பிடும் துல்கர்னைன் உண்மையில் யார்? இதில் பெரும்பாலோரின் கருத்து யாது என்பதை இனி பார்ப்போம்.

துல்கர்னைன் என்பது அலெக்சாண்டர் என்னும் மாமன்னரைக் குறிக்கும்.

எனினும் அலெக்ஸாண்டர் என்ற பெயருடன் இருவேறு காலகட்டங்களில் இரு பேரரசர்கள் இருந்துள்ளனர். அதுவே குழப்பத்திற்கு இடமளிப்பதாய் அமைந்துள்ளது.

கி.மு.3ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் மகா அலெக்ஸாண்டர் என்ற பெயருள்ள ரோமச் சக்ரவர்த்தி ஒருவர் இருந்தார். உலக மகா தத்துவஞானியான அரிஸ்டாட்டில் இவரின் அமைச்சராக இருந்தார்.

இம்மன்னர் சிறிய ஆசியா, பாரசீகம் முதலான நாடுகளை வென்று இந்தியா வரையிலும் படையெடுத்து வந்தார். இவர் சென்றவிடமெல்லாம் வெற்றிக்கொடி நாட்டியதால் இவரை மகா அலெக்ஸாண்டர் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் இவர் முஸ்லிமல்ல; காஃபிர். மேலும் அல்லாஹு தஆலா இவரைப்பற்றி திருக்குர்ஆனில் குறிப்பிடவில்லை.

18:83ஆம் திருவசனத்தில் அல்லாஹு தஆலா குறிப்பிட்டுள்ளது, இவரைப்பற்றியே என சிலர் தவறாக நினைத்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் அல்லாஹ் குறிப்பிடும் துர்கர்னைன் இம்மன்னருக்கு வெகு காலத்திற்கு முன் வாழ்ந்தவரே ஆகும். அவர் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியவராவார்.

அவர் கிரேக்கர். அவரின் தந்தையின் பெயர் பைலகூஸ் என்பது. உலகம் முழுவதையும் கட்டி ஆண்ட மன்னர்களில் அவரும் ஒருவர்.

அவர் ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். அவரின் காலம் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் காலமாகும்.

அவரின் முன்னணிப் படையினருள் ஒருவராக ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் இருந்தார்கள். அத்துடன் அப்படையினரை வழிநடத்துபவராகவும் அவர்கள் இருந்தார்கள்.



இந்த அலெக்ஸாண்டர் (சிக்கந்தர்) இறையச்சமுள்ள ஒரு முஃமின் ஆவார். இவரைச் சிலர் நபியென்றும் வேறு சிலர் நபியல்லர் என்றும் இருவிதமாகக் கூறுகின்றனர்.

இவர் ஐந்நூறு ஆண்டுகாலம் பல்வேறு நாடுகளைச் சுற்றி வந்தாரெனவும், ஜூர் என்னுமிடத்தில் மரணமுற்ற இவர் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டாரெனவும் கூறப்படுகிறது.

பைத்துல் முகத்தஸில் அடக்கம் செய்யப்பட்டாரெனவும் பலர் கருதுகின்றனர்.

இவர் கீழ்த்திசையிலிருந்து மேல் திசைவரை சென்றதால் இரு கிரணங்களையுடையவர் என்று பொருள்பட 'துல்கர்னைன்' என்று அழைக்கப்படுகிறார்.

## துல்கர்னைனின் கனவு

இவருக்கு 'துல்கர்னைன்' என்றபெயர் ஏற்பட்டதற்கும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. ஒருநாள் துல்கர்னைன் கனவு ஒன்று கண்டார். அதில் அவர் சூரியனுக்கு அருகில் சென்று எழு வானிலுள்ள அதன் கிரணத்தையும், படுவானிலுள்ள மற்றொரு கிரணத்தையும் அவர் பிடிப்பதாகக் கண்டார்.

இக்கனவை அவர் தம்முடைய கூட்டத்தினரிடம் கூறியபொழுது, அவர்கள் அவருக்கு (இரு கிரணங்களை உடையவர்) துல்கர்னைன் எனப் பெயரிட்டு அழைக்கலாயினர் என்று கூறப்படுகிறது.

2. தவிர, அவரின் தலையில் முளைபோல செந்நிறத்தில் இரு தசைக்கொம்புகள் இருந்தன. அவற்றை மறைக்க அவர் தலைப்பாகை கட்டிக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அவரின் பெரிய கணக்குப்பிள்ளை அதனைப் பார்த்துவிட்டார். அப்பொழுது அவர் அவரை நோக்கி, இக்கொம்புகளை உன்னைத்தவிர வேறெவனும் கண்டதில்லை. இதனை நீ பிறகுக்கு அறிவித்தால் உன்னைக் கொன்றுவிடுவேன் என்று எச்சரித்தார்.

எனினும் நாளடைவில் அச்செய்தி கணக்குப்பிள்ளையின் வாயிலாக பலருக்கும் தெரியலாயிற்று. இதனால் அம்மன்னருக்கு துல்கர்னைன் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

3. இவர் தந்தை வழியிலும், தாய் வழியிலும் உயர் குடியில் பிறந்தவர். எனவே இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

4. இவர் இரு தலைமுறைகள் அதாவது அறுபது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

5. இவர் வெளி உலகத்தைப் பற்றியும், ஆன்மீக உலகத்தைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தார்.

6. வெளிச்சம், இருள் நிரம்பிய பகுதிகளில் இவர் ஊடுருவிப் பாய்ந்தார்.

7. இவருக்கு இரண்டு பெரும் காதுகள் இருந்தன.

8. இவர் ரோம், பாரசீகம் ஆகிய இரண்டு நாடுகளை ஆண்டார்.

9. ஒரு கூட்டத்தினருக்கு அல்லாஹ் இவரை நபியாக அனுப்பிவைத்தான். அவர்கள் இவரை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அல்லாஹ் அக்கூட்டத்தினரை அழித்துவிட்டு வேறொரு கூட்டத்தினருக்கு நபியாக அனுப்பினான்.

10. இவரைப் பொய்யரெனக் கூறி இவரின் கொம்பொன்றை முறித்து இவரை கொன்றுவிட்டார்கள். ஒரு கூட்டத்தினர். அல்லாஹ் இவரை மீண்டும் உயிர்ப்பித்தான் இவ்வாறு இவருக்கு இருவாழ்வு அளிக்கப்பட்டது.

இவ்வாறு இருவித சிறப்புக்களைப் பெற்றதன் காரணமாக இவருக்கு துல்கர்னைன் என்னும் பெயர் ஏற்பட்டதெனக் கூறப்படுகிறது. எனவே இது ஒரு காரணப்பெயரேயாகும். இவரின் இயற்பெயர் அலெக்ஸாண்டர் (சிக்கந்தர்) என்பதேயாகும்.

## துல்கர்னைனின் பேணுதல்

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் திருமக்காவில் இருந்தபொழுது அங்கு துல்கர்னைன் வந்தார்.



அவர் மக்காவில் அப்தஹி என்னுமிடத்தை அடைந்தபொழுது அந்நகரில்தான் இப்ராஹீம் கலீலுர் ரஹ்மான் (அலை) இருப்பதாக அவருக்குக் கூறப்பட்டது.

அது அறிந்த அவர், 'இப்ராஹீம் கலீலுர் ரஹ்மான் (அலை) இருக்கும் நகரில் நான் வாகனம் மீது அமர்ந்து செல்வதா? என்று கூறி வாகனத்தை விட்டிறங்கி கால்நடையாகச் சென்று அவர்களைச் சந்தித்தார்.

அப்பொழுது இப்ராஹீம் (அலை) அவர்கள் அவருக்கு சலாம் உரைத்து, அவரை முஆனகா செய்தனர். (கட்டித் தழுவிக் கொண்டனர்)

முஆனகா செய்த முதல் மனிதர் இப்ராஹீம் (அலை) என்பதாக அன்சானுல் உயூன், துரனுல் குரர் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

## ஆபெ ஹயாத்தைத் தேடிச்சென்ற கிள்ரு (அலை) அவர்களும், துல்கர்னைனும்

'ஆபெ ஹயாத்' என்பதற்கு உயிர் தண்ணீர் என்பது பொருளாகும். இதனை மாவுல் ஹயாத் என்றும் கூறுவர்.

மேற்குக் கரையில் என்றென்றும் உயிர்வாழச் செய்யும் நீரையுடைய ஊற்று ஒன்றிருப்பதாக துல்கர்னைனிடம் கூறப்பட்டது. அந்நீரைப் பருகுபவர் உலக முடிவு நாள்வரை மரிக்கமாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே அந்நீரூற்றைத் தேடி துல்கர்னைனும், ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களும் சென்றனர்.

துல்கர்னைன் ஒரு மரக்கலத்தில் ஏறி மேற்கு கடற் பகுதியை நோக்கிச் சென்றார். மரக்கலம் சென்ற இடத்தை அதுவரை வேறெவரும் சென்றதில்லை. அது கரிசல் களிமண் பாங்கான இடமாகும். சூரியன் மறையும் பொழுதை அடுத்து இருள் கவ்வியது.

இருளையும், பொருட்படுத்தாது துல்கர்னைன் அந்த கரிசல் நிலத்தில் செல்ல நாடி தம்முடன் வந்தவர்களை நோக்கி, இருளில் பார்வையை உடைய விலங்கு எது? என்று வினவினார்.

அதற்கவர்கள் 'குதிரை' என்று விடையளித்தனர்.

அப்பொழுதவர், ''எத்தகைய குதிரை தீர்க்கமான பார்வையுடையது? என்று வினவ, பெண் குதிரை அதுவும் சூலுக்கு விடப்படாமல் கன்னியாய் இருக்கும் குதிரை என்ற அவருக்கு விடையளிக்கப்பட்டது.

அப்பொழுது அவர் நின்றிருந்த இடமோ மேற்குத் திசையில் உலகின் கடைசி எல்லையாகும். அதற்கு அப்புறம் எவரும் செல்ல முடியாத இடம். அத்தகைய இடத்தில் கடற்கரை ஓரமாக படையணிகளுடன் அவர் நின்றிருந்தார்.

பின்னர் அவர் தம் படையணிகளிலிருந்து ஆறாயிரம் கன்னிக் குதிரைகள் தேர்ந்தெடுத்து, மற்றவற்றை வெளியில் நிறுத்திவிட்டு ஆறாயிரம் வீரர்களுடன் இரவு பகலாய் பயணம் செய்தார்.

அவரின் படையணிகளில் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் துல்கர்னைனின் தலைமைக் கொடியைத் தாங்கிச் செல்பவராகவும் முன்னணிப் படைத் தளபதியாகவும் இருந்தார்கள்.

இருண்ட குகையொன்றில் 'ஆபெஹயாத்' என்னும் நீர் சுனையை ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் கண்டறிந்து அதன் நீரை அருந்தினர், அதில் குளிக்கவும் செய்தனர்.

அதில் 'உளூச் செய்து இரண்டு 'ரக்அத் தொழுதனர்.

அந்நீரைப் பருகியதன் காரணமாக அவர்கள் நீண்டநாள் வாழும் பேற்றினைப் பெற்றனர்.

தமக்கு முன் சென்ற ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் இந்நீரைக் குடித்துவிட்டதனால் நிராசையாகி சிக்கந்தர் துல்கர்னைன் திரும்பிவிட்டார்.

மற்றொரு வரலாற்றில்,

கிள்ரு (அலை) அவர்களும், அவர்களின் சகோதரர் இல்யாஸும் சிக்கந்தர் துல்கர்னைனின் ஊழியத்தில் இருந்தார்கள் என்றும் அவருடன் சென்ற அவ்விருவரும் தனித்தனியே பிரிந்து ஜீவநீரைத் தேடிச்சென்று அதனைப் பருகினர் என்றும், அதன் பின்னர் அச்செய்தியை துல்கர்னைனிடம் வந்து கூறினர் என்றும் கூறுகிறது.



இதன் காரணாக ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களும், இல்யாஸ் (அலை) அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழும் நற்பேறு பெற்றார்கள் என்று கூறப்படுகிறது.

மற்றொரு வரலாற்றின்படி,

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் ஜீவ நீரைத் தேடிச்சென்றபொழுது தம்முடன் உப்பிடப்பட்ட மீன் ஒன்றை கொண்டுச் சென்றார்கள்.

ஓரிடத்தின் நீர்த்துளிகள் அம்மீன் (கருவாட்டின்) மீது பட்டவுடன் அது உயிர்ப்பெற்று துள்ளிக் குதித்தது.

எனவே அதுதான் ஜீவநீர் என்பதை உணர்ந்து அதனை அவர்கள் அருந்தினர். குளித்தனர், அதில் 'உளூச் செய்தனர் என்று கூறப்படுகிறது.

''ஜாமிஉல் பயான் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன் என்னும் (இப்பொழுதும் உள்ள) திருக்குர்ஆன் விளக்கவுரை எழுதிய முஃபஸ்ஸிரீன் தபரீ (ரஹ்) அவர்கள் 'ஆபெ ஹயாத்' நீர்ச் சுனையில் கிள்ரு (அலை) அவர்கள் மூழ்கினர் என்று கூறுகின்றார்கள்.

மாபெரும் ஃபார்ஸீ கவிஞரும், லைலா மஜ்னூன் என்னும் உலகப் பெரும் காவியத்தை இயற்றியவருமான நிஜாமி (ஹிஜ்ரீ 535–599) கிள்ரு (அலை) , இல்யாஸ் (அலை) ஆகிய இருவரும் ஜீவநீரைப் பருகினர் என்று, அதனால் இறவாப் பெருவாழ்வை எய்தப் பெற்றனர் என்றும் கூறுகின்றார்.

ஜீவ நீர்ச்சுனையில் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் இருந்தபொழுது நீர் ஹிள்ரு (பசுமையாக) ஆக இருப்பீர் என்றும், உம்முடைய பாதம்படும் இடமெங்கும் பசுமையாகிவிடும் என்றும் அசரீரி முழங்கியது என உமாரா கூறுகின்றார்.

இந்த ஜீவ நீரைப் பற்றி ஷைகு ஸஅதி (ரஹ்) அவர்கள் தம் பாட்டில் குறிப்பிடுகின்றார்கள்.

உன் அலுவல்கள் வளம்பெற்று

வரவில்லையாயின்,

அதற்காக மனச்சோர்வு அடையாதே!

இருள் நிறைந்த குகையில்தான்

'மாவுல் ஹயாத்'

என்னும் ஜீவநீர் உள்ளது என்று கூறுகின்றார்கள்.

இவர்களின் காலம் ஹிஜ்ரீ 571–691 (கி.பி. 1184–1304) ஆகும்.

இவர்களும் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாக ஒரு வரலாறு கூறுகின்றது.

ஷைகு ஸஅதி (ரஹ்) அவர்கள் மக்காவில் புனிதப் பயணிகளுக்கு நீர் இறைத்துக் கொடுக்கும் பணியைச் செய்து வந்தார்கள்.

அப்பொழுது ஒருநாள் அவர்கள் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்தனர்.

அவர்கள் ஸைகு ஸஅதியின் வாயில் ஜீவ நீரை ஊற்றினர்.

இந்நிகழ்ச்சியை ஒருவர் நம்பவில்லை. இந்நிலையில் அவர் கனவொன்று கண்டார். அதில், சுவனத்தின் வாயில்கள் அனைத்தும் திறக்கப்பட்டிருந்தன. அவை எவருக்காகத் திறக்கப்பட்டுள்ளன? என்று அவர் வினவ, அவை ஸஅதிக்காக என்று ஒரு வானவர் பதில் அளித்தார்.

எதனால் அவருக்கு இப்பேறு கிட்டியது? என்று அவர் மீண்டும் வினவ,

அறிவாளர்களின் கண்களுக்கு

பூங்காவின் ஒவ்வொரு இலையும்

அதனைப் படைத்தவனின்

புகழைப் பாடுகின்றது

என்ற 'ஸஅதி (ரஹ்) அவர்களின் கவிதையால் என்று அவ்வானவர் விடையளித்தார்.

இக்கனவு கண்டு விழித்தெழுந்த அம்மனிதர், அந்த இரவு வேளையிலேயே ஸஅதி (ரஹ்) அவர்களின் இல்லத்திற்கு வந்தார்.

அப்பொழுது ஸஅதி (ரஹ்) அவர்களும் அதே பாடலைப் பாடிக்கொண்டிருப்பதை அம்மனிதர் செவியுற்றார்.



உலகப் புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர், அமீர் குஸ்ரு, ஜீவ நீரைத் தமக்கும் தருமாறு வேண்டினார்.

அப்பொழுது ஸஅதி (ரஹ்) அதனை நான் ஹாஃபிஸுக்குக் கொடுத்து விட்டேன் என்று கூறினார்கள்.

இந்நிகழ்ச்சியை ஜாமி தாம் எழுதிய அமீர் குஸ்ருவின் வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

'ஜாமி' (கி.பி. 1414–1492)ம் உலகப் புகழ்பெற்ற பாரசீகக் கவிஞராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸஅதி (ரஹ்) அவர்கள் தம்மிடம் எஞ்சியிருந்த ஜீவ நீரை ஹாஃபிஸுக்குக் கொடுத்ததாகக் குறிப்பிட்டார்களே!

யார் அந்த ஹாஃபிஸ்?

அவரும் கி.பி. 1320இல் தோன்றிய பெரும் பார்ஸீக் கவிஞராவார்.

இறைக்காதலைக் குறிப்பிட்டு 569 செய்யுட்களில் அவர் எழுதிய 'தீவான்' உலகப் புகழ்பெற்றதாகும்.

★ ★ ★

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் "ஆபெஹயாத்" ஜீவ நீரைப் பருகிய பின்னர் கற்கள் நிறைந்த ஒரு மேட்டுப் பகுதிக்குச் சென்றார்கள்.

அக்கற்கள் எத்தகையவை என்பது அவர்களுக்குத் தெரியாது.

எனவே அவர்கள் அதுபற்றி சிக்கந்தர் துல்கர்னைனிடம் வினவினார்கள்.

அதற்கவர், இக்கற்களை அள்ளிக் கட்டிக்கொள்ளுங்கள். இவற்றைச் சிறிதளவே எடுத்தவரும் கைச்சேதப்படுவார். அதிகமாக எடுத்தவரும் கைச்சேதப்படுவார் என்று கூறினார்.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் அக்கற்களை எடுத்துக்கொண்டு திரும்பினர்.

இருண்ட குகையிலிருந்து வெளியில் வந்து பார்த்தபொழுது அவை பச்சை மரகதங்களாக இருந்தன.

இன்னும் அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் வந்துவிட்டோமே என்று சிலர் வருந்தினர் என்பதாக 'தப்சீர் திப்யானில்' கூறப் பட்டுள்ளது.

# காப் மலைக்குச் சென்ற துல்கர்னைன்

சிக்கந்தர் துல்கர்னைன் ஒரு நபியல்லர் என ஹத்தாதீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

எனினும் அவர் உலக மக்களை இஸ்லாத்தின் பால் அழைத்து ஓரிறை வணக்கத்தில் ஈடுபடுத்துபவராக இருந்தார்.

மக்களை தீனின் பக்கம் அழைப்பதற்காக அவர் முதலில் மேற்றிசை நோக்கிச் சென்றார். அவர் சந்தித்த மக்களையும், பல நாட்டினரையும் சன்மார்க்கத்தின்பால் அழைத்தார்.

அவரின் அழைப்பை ஏற்று இஸ்லாத்தை தழுவிக்கொள்வோரை அவர் அங்கீகரித்துக் கொண்டார்.

அவரின் அழைப்பை ஏற்காதோரின் ஊர்களை இருள் கவ்விக் கொண்டது.

அதாவது அம்மக்களின் பட்டிணங்கள், கோட்டைகள், இல்லங்கள் ஆகியவற்றின் கதவுகள் மூடிக்கொண்டன.

இந்நிகழ்ச்சிபற்றி அல்லாஹு தஆலா தன் திருமறையில் (18:86,87,88) ஆகிய திருவசனங்களில் குறிப்பிடுகின்றான்.

இவ்வண்ணம் நாடுகளை வென்று மக்களை தீன் பக்கம் அழைத்தவண்ணம் சிக்கந்தர் துல்கர்னைன் எட்டு இரவு, எட்டு பகல் கடந்து மலையொன்றினை அடைந்தார்கள்.

அது பூமியைச் சுற்றிலும் இருக்கும் மலையாகும். அதற்கு காப் மலை என்று பெயர் சொல்லப்படுகிறது.

வானவர் ஒருவர் அம்மலையினைப் பிடித்தவண்ணம் அல்லாஹ்வைத் துதித்துக் கொண்டிருந்தார்.

அங்குவந்த துல்கர்னைன் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்து தமக்கு வலிமை (ஆற்றல்) வழங்குமாறு துஆ இறைஞ்சினார்.



அல்லாஹு தஆலா அவருக்கு வலிமையையும், ஆற்றலையும் வழங்கி அருள்புரிந்தான்.

எனவே அவரால் அந்த வானவரைக் காண முடிந்தது.

அப்பொழுது வானவர் அவரை நோக்கி, ஆதமுடைய மக்களில் எவரும் இவ்விடத்திற்கு உமக்கு முன்னர் வந்ததில்லை. அவ்வாறிருக்க உமக்கு மட்டும் எவ்வாறு இங்குவர வலிமை கிட்டியது? என்று வினவினார்.

அதற்கு துல்கர்னைன், இம்மலையைத் தாங்கும் வலிமையை உமக்குத்தந்த அல்லாஹு தஆலா தான் எனக்கும் வலிமையைத் தந்தான் என்று விடையளித்தார்.

காப் மலையைக் காட்டினும் பிரம்மாண்டமான மலை வேறெதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

அதன் பின்னர் துல்கர்னைன் அங்கிருந்து திரும்பிச் செல்ல எச்சரித்தார்.

அப்பொழுது அவர் அவ்வானவரிடம் தமக்கு அறிவுரை பகருமாறு பேண்டினார்.

அதற்கு வானவர்,

1. நாளைய உணவுக்காக இன்றே நீர் கவலையுற வேண்டாம்.

2. இன்றைய வேலையை நாளைக்கெனத் தள்ளிப்போட வேண்டாம்.

3. உம்மிடமிருந்து தவறிவிட்டதற்காக நீர் வருந்த வேண்டாம்.

4. மக்களிடத்தில் கடுகடுப்பாக இல்லாமல் மென்மையாக நடந்துகொள்வீராக! என்று நான்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி 'கஸஸுல் அன்பியா'வில் மிக்க விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எந்த அளவிற்கு உண்மை என்பதை அல்லாஹ் ஒருவனே அறிவான்.

எனினும் தஃப்ஸீர்கள் அனைத்திலும் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

# துல்கர்னைனின் கீழ்த்திசைப் படையெடுப்பு

மேற்றிசைப் படையெடுப்பை முடித்துக்கொண்டபின் சிக்கந்தர் துல்கர்னைன் கீழ்த்திசை நோக்கிப் படையெடுத்துச் சென்றார்.

அவர் நாடிச்சென்ற நாட்டைச் சென்றடைய பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும் என்றும் அதனை அவர்கள் குறுகிய காலத்தில் சென்றடைந்தார் என்று கூறப்படுகிறது.

அந்நாட்டில் சூரிய வெப்பம் மிகக் கடுமையாக இருக்குமென்றும், அங்கு வாழும் மக்களின் தலையிலோ, உடலிலோ, புருவங்களிலோ உரோமங்கள் முளைப்பதில்லை எனவும் ஹஜ்ரத் ஹத்தாதி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

அந்நாட்டின் பெயர் ஜாபலக் என்பதாகும்.

அதற்குப் பதினாயிரம் தலைவாயில்கள் இருந்தனவென்றும், இரு தலைவாயில்களுக்கிடைப்பட்ட தொலைவு ஒரு பர்ஸக் என்றும் கூறப்படுகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜுக்குச் சென்றபோது அங்கு வாழ்ந்த மக்கள் நபி (ஸல்) அவர்கள்மீது ஈமான் கொண்டார்கள் என்று கூறப்படுகிறது.

அந்நாட்டில் வெப்பம் மிகுதியாக இருந்தமையால் அம்மக்களின் முகங்களில் தோல் உரிந்ததைப்போல் இருந்தது.

சூரிய உதயத்தில் குகைகளுக்குள் நுழைந்துகொள்வார்கள் அம்மக்கள். கடலில் மீன்பிடித்து அதனை உண்டு அவர்கள் உயிர் வாழ்ந்தார்கள். இம்மனிதர்களை சன்மார்க்கத்தின்பால் சிக்கந்தர் துல்கர்னைன் அழைத்தார்.

அவர் அங்கு இருபத்து நான்கு முழ ஆழத்தில் அடித்தளம் போட்டு, நூறு முழ உயரத்தில் நானூறு முழ அகலத்தில் ஒரு பள்ளிவாயிலைக் கட்டினார். அதில் மக்கள் தொழுதுவர வேண்டுமென அவர்களுக்குப் பணித்தார் என்று கூறப்படுகிறது.

சிக்கந்தர் துல்கர்னைன் துவக்கத்தில் கொடுங்கோலராக இருந்தாரெனவும், பின்னர் தம் முரட்டுத்தனத்தை விட்டு தவ்பாச் செய்தாரெனவும், அதன்பின்னர் சாதுவாக மாறி நீதியுள்ள பேரரசரானார் என்றும் கூறப்படுகிறது.



கிழக்கு, மேற்குப் பயணங்களுக்குப் பின்னர் அவர் மூன்றாவது பெரும் பயணமாக தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் படை யெடுத்தார்.

# யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர்

இம்மூன்றாவது பயணத்தின்பொழுது சிக்கந்தர் துல்கர்னைன் தம் படைகளுடன் இருபெரும் மலைகளுக்கிடையே சென்றார்.

அம்மலைகளுக்கப்பால் ஒரு கூட்டத்தினர் வாழ்ந்துவந்தனர். அவர்களின் பேச்சு விளங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. அதேபோன்று இவர்கள் கூறுவதையும் அம்மக்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

எனவே சமிக்ஞை மூலமே அவர்களுடன் பேச வேண்டி யிருந்தது.

அம்மனிதர்கள் துல்கர்னை நோக்கி, "துல்கர்னைனே! நிச்சயமாக யாஃஜூஜும் மாஃஜூஜும் பூமியில் அக்கிரமம் செய்கின்றார்கள். எனவே எங்களுக்கும், அவர்களுக்குமிடையே ஒரு தடுப்பை நீர் ஏற்படுத்துவதன் மூலம் உமக்குக் கூலியை நாங்கள் ஏற்படுத்தவா? (தரலாமா) என்று கூறினார்கள். (18:94)

யஃஜூஜ் மஃஜூஜ் என்பவர்கள் நபி நூஹ் (அலை) அவர்களின் புதல்வர் யாபிதுடைய சந்ததியிலுள்ளவர்கள். யஃஜூஜ் என்பதும், மஃஜூஜ் என்பது இருபெரும் கூட்டத்தின் பெயர்களாகும்.

இக்கூட்டத்தினரை சிலர் பண்டைய அநாகரீக சீனர்கள் என்றும் ஜப்பானியர் என்றும் கூறுகின்றனர்.

இவர்கள் மனிதர்களேயாயினும், மனிதர்களிடம் காணப்படாத பழக்கவழக்கங்களையும், முரட்டுத்தனங்களையும், கொடூரத் தன்மைகளையும் உடையவர்கள் என்பதில் ஐயமில்லை.

இவர்களில் சிலர் மிக்க உயரமானவர்களாகவும், வேறு சிலரோ மிகக் குட்டையானவர்களாகவும் இருப்பர். இவர்களின் காதுகளும் மிகப் பெரியதாக அகன்று காணப்படும்.

உயிர்ப் பிராணிகள் அனைத்தையும் தின்னும் வழக்கமுள்ள இவர்கள், தங்களில் இறந்தோர்களையும் தின்பர் என்று கூறப்படுகிறது.

உலகில் வாழும் நாகரீக மனிதர்களைப் போன்று எண்ணிக்கையில் மூன்று மடங்கின்ரான இவர்களின் அநியாய அக்கிரமங்களைப் பொறுக்க இயலாத அங்கு வாழ்ந்த மக்கள், அங்குச் சென்ற பேரரசர் சிக்கந்தந்தர் துல்கர்னைனிடம் இதுபற்றி முறையிட்டனர்.

அந்த வம்பர்களுக்கும், தங்களுக்குமிடையே ஓர் தடுப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமெனக் கோரினர்.

அதற்குரிய கூலியையும் தாம் தருவதாக அவர்கள் அவரிடம் கூறினர்.

அதற்கு துல்கர்னைன், எனக்கு நீங்கள் கூலி ஏதும் தரவேண்டாம். அல்லாஹ்விடம் உள்ளதோ இக்கூலியைக் காட்டினும் மிக்க மேலானது என்று கூறினார்கள்.

மேலும் அவர், அம்மக்களின் கோரிக்கைக்கு இணங்கி எனக்கு நீங்கள் அனைவரும் உதவியாக இருப்பின் உங்களுக்கும் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினருக்கும் இடையே பெரியதொரு தடுப்பை (மாபெரும்) சுவரை ஏற்படுத்தித் தருகிறேன் என்று கூறினார்.

பின்னர் அவர் அம்மக்களை நோக்கி, பெரும் பெரும் இரும்புக் கட்டிகளை என்னிடம் கொண்டு வாருங்கள்! அவற்றை உருக்கி அவை சமமாகப்படிந்த பின்னர் நெருப்பை மூட்டி ஊதுங்கள். அந்த இரும்புக் கட்டிகள் பழுத்து, நெருப்பு போலாகும். அப்பொழுது செம்புப் பாளங்களைக் கொண்டு வந்தால் அவற்றை நான் உருக்கி அந்த இரும்பின்மீது ஊற்றுகிறேன் என்று கூறினார்.

அம்மக்களும் அவரின் வேண்டுகோளுக்கேற்ப முதலில் இரும்புக் கட்டிகளையும், பின்னர் செம்புப் பாளங்களையும் கொண்டு வந்தனர்.

பின்னர் துல்கர்னைன் தாம் சொன்னவாறே செய்தார். இரும்புக் கட்டிகளுக்கிடையே இருந்து துளைகளையும், துவாரங்களையும் உருக்கு ஊற்றப்பட்ட செம்பைக்கொண்டு அடைத்தார். இதனால், இரும்பு, செம்பு கலந்த கலவையாலான மலைபோன்ற நீண்ட, நெடிதுயர்ந்த சுவர்கள் உருவாயின.



இந்த பிரம்மாண்டமான அலுவலைச் செய்து முடிக்கத் தேவையான, இரும்பு மற்றும் செம்புக் கட்டிகளை நாங்கள் எங்கே போய் தேடுவது? என்று அம்மக்கள் அவரிடம் வினவியபொழுது, அவர் அவர்களுக்கு இரும்பு மற்றும் செம்புச் சுரங்கங்களைக் காட்டிக் கொடுத்ததாக, 'கஸஸுல் அன்பியா'வில் கூறப்பட்டுள்ளது.

மேலும் கஸஸுல் அன்பியாவில், அந்தச் சுவருக்காக அடித்தளம் இடுவதற்காக மலைகளுக்கிடையே ஆழமாகத் தோண்டப்பட்டதெனவும், அடியில் செம்பு உருக்கி ஊற்றப்பட்டதெனவும் சுவரைப் பின்னர் இரும்புக் கட்டிகளால் எழுப்பப்பட்டதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடித்தளத்தின் ஆழம் நூறு முழம் என்றும், அகலம் ஐம்பது முழம் என்றும், சுவரின் நீளம், மூன்று மைல்கள் எனவும் கூறப்படுகிறது.

இவ்வாறு இரண்டு மலைகளுக்கிடையே பெரியதொரு சுவரைக் கட்டி முடித்த துல்கர்னைன்,

இது என்னுடைய இறைவனின் அருள்தான். என் இறைவனின் வாக்குறுதி (யுக முடிவு) வரும் வேளையில் இதனையும் தூள் தூளாக்கி விடுவான். என் இறைவனின் வாக்குறுதி (முற்றிலும்) உண்மையானதே! என்று கூறி அல்லாஹ்வைப் புகழ்ந்தார்.,

மலைகளை இணைத்து மாபெரும் சுவர் உருவான பின்னர் அவ்வழியே வழக்கம்போல் வந்த யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் தாங்கள் செல்லும் தடத்தில் இடையூறாக தடுப்பு ஒன்று நிற்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றனர்.

அதன்மீது ஏற முயன்றும் அவர்களால் அது முடியவில்லை. அதனைத் துளையிட்டு நுழையவும் அவர்களால் இயலவில்லை.

இது பற்றியச் செய்திகளை அல்லாஹு தஆலா **18:96,97,98** ஆகிய திருவசனங்களில் குறிப்பிடுகின்றான்.

ரிவாயத்து: யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் நாள்தோறும் அச்சுவரைத் தோண்டுகின்றனர். சுவருக்கு அப்பால் வெளிச்சத்தை அவர்கள் கண்டு, எஞ்சியதை நாளைவந்து தோண்டலாம் என்ற கூறிவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

ஆனால் அல்லாஹு தஆலா அந்த துவாரத்தை மூடிவிடுகிறான்.

மறுநாட் காலையில் அவர்கள் வந்து பார்க்கும்போது, துவாரத்தைக் காணாமல் மீண்டும் தோண்டுவர்.

இது உலக முடிவு நாள்வரை நிகழ்ந்த வண்ணம் இருக்கும்.

உலக முடிவு நாளின்பொழுது யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரில் ஒருவரை அல்லாஹு தஆலா முஃமினாக்கி விடுவான்.

வழக்கம்போல துவாரமிட்டு வெளிச்சத்தைப் பார்த்தவுடன் அவர், இன்ஷா அல்லாஹ்! நாளை வரலாம் என்று கூறி மற்றவர்களையும் அழைத்துச் செல்வார்.

மறுநாள் அவர், தம் கூட்டத்தினருடன் வந்து 'பிஸ்மில்லாஹ்' என்று அவர்களைப் பணிப்பார்.

அவர்களும் அவ்வாறே கூறி துவாரமிட்டு நாட்டிற்குள் நுழைந்துவிடுவார்கள்.

பின்னர் தாங்கள் சந்திக்கும் மனிதர்களை எல்லாம் கொன்றொழிப்பார்கள்.

அத்துடனன்றி கொல்லப்பட்டவர்களையெல்லாம் வெட்டியும், அறுத்தும், புசிப்பர். இஃதன்றி நாட்டிற்குள் இருக்கும் உணவுகள் அனைத்தையும் தின்று தீர்ப்பர். மேலும் உலகில் பல பகுதிகளுக்கும் பரவிச் சென்று அக்கிரமங்கள் செய்வர்.

எனினும் நாற்பெரும் புனிதத் தலங்களாகிய மக்கா, மதீனா, பைத்துல் முகத்தஸ், தூர்ஸினா ஆகிய இடங்களிலுள்ள மஸ்ஜிதுகளில் மட்டும் நெருங்கமாட்டார்கள்.

அவற்றை சேதப்படுத்தவும் அவர்களால் இயலாது.

பின்னர் அவர்கள் பைத்துல் முகத்தஸ் மலைப்பகுதிக்கு வந்து, மானிட இனத்தவர் யாவரையும் அழித்தொழித்தோம். வானவர்களையும் அழிப்போம் என்று கூறி விண்ணகம் நோக்கி அம்பு மழையைப் பொழிவர். அவ்வம்புகள் இரத்தம் தோய்க்கப் பட்டனவாக அவர்களிடமே திரும்பிவரும்.

அப்பொழுது அவர்கள் தாங்கள் வெற்றிபெற்றுவிட்டதாக எண்ணி, நாம் வானவரையும் கொன்றுவிட்டோம் என்று கூறுவார்கள்.



இறுதியாக ஸீனாய் மலையில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் முற்றுகையிடுவர்.

அப்பொழுது ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் இது குறித்து துஆச் செய்வார்கள். அவர்களின் துஆவை ஏற்று அல்லாஹ் ஒரு புழுவை அனுப்புவான். அது யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் பிடரியை அரித்துவிடும். இதன் காரணமாக அவர்கள் அனைவரும் ஒரே இரவில் செத்தொழிவார்கள்.

அதன்பின்னர் சூறாவளிக் காற்று உருவாகி, அவர்களின் சடலங்களை வாரிக்கொண்டு போய்விடும்.

இவ்வாறு 'தப்ஸீர் திப்யரில்' கூறப்பட்டுள்ளது.

சிக்கந்தர் துல்கர்னைன் பற்றி அல்லாஹு தஆலா தன் திருமறையில் சூரத்துல் கஹ்ஃபு என்னும் அத்தியாயத்தில் 83–ஆம் திருவசனம் முதற்கொண்டு 98ஆம் திருவசனம் வரைக் குறிப்பிடுகின்றான்.

இதில் யஃஜூஜ், மஃஜூஜ் பற்றியும் கூறுகின்றான்.

(நபியே) துல்கர்னைப்பற்றி (அந்த யூதர்கள்) உம்மிடம் கேட்கின்றனர். அவருடைய வரலாற்றில் சிறிதை நான் உங்களுக்கு ஓதிக் காட்டுகிறேன் என்று நீர் கூறுவீராக! (18:83) எனத் துவங்கி அல்லாஹு தஆலா இவ்வரலாற்றை விவரிக்கின்றான்.

# மிகவும் அறிந்தவர் யார்?

நபி மூஸா (அலை) அவர்கள் மிகச் சிறந்த அறிவாளராக விளங்கினர். அல்லாஹ்வும் அவர்களுக்கு நாள்தோறும் பேரறிவைப் புகட்டிய வண்ணமிருந்தான்.

தாம்பெற்ற அறிவையும், ஆற்றலையும் கொண்டு அவர்கள் மக்களுக்கு நல்லுரை எடுத்தோதி வந்தனர்.

அவற்றைச் செவியுறும் இஸ்ரவேலர்கள் பெரு வியப்பெய்துவர்.

எனவே, தாங்கள் அறிந்தவரை நபி மூஸா (அலை) அவர்களைப் போன்ற பேரறிவாளர் வேறெவரும் உலகில் இல்லை என்று எண்ணம் அவர்களின் உள்ளத்தின் உள்ளே வேரூன்றியது.

அம்மட்டுமா?

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கும் தங்களுக்கு அல்லாஹ் அளவற்ற அறிவை நல்கியுள்ளான் என்ற எண்ணம் ஏற்பட்டது.

ஒருநாள் நபி மூஸா (அலை) அவர்கள் மக்களுக்கு அறபோதம் வழங்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருவர் எழுந்து, அதிகமதிகம் அறிந்தவர் யார்? என்று வினவினார்.

அதற்கு மூஸா (அலை) அவர்கள், அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன் என்று கூற மறந்தவர்களாக, நான் மிகவும் அறிந்தவன் என்று கூறிவிட்டார்கள்.

அப்பொழுது அல்லாஹ் அவர்களிடம் பேசினான்.

மூஸாவே! இரண்டு கடல்கள் சந்திக்கும் ஓரிடத்தில் என் அடியார் ஒருவர் இருக்கிறார். அவர் உம்மைவிட மிகவும் அறிந்தவர் என்று அல்லாஹ் கூறினான்.

அதுகேட்டு வியப்புற்ற அவர்கள், ''அப்படியா! அவர் இப்பொழுது உயிருடன் உள்ளாரா?'' என்று வினவினார்கள்.

ஆம்! என்று அல்லாஹ் விடையளித்தான்

அல்லாஹ் குறிப்பிட்ட அவ்வடியார் ஹஜ்ரத் கிள்ரு (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்தாம்.

அல்லாஹு தஆலாவின் இவ்விடை அவர்களுக்கு முன்னைவிட அதிக வியப்பைத் தந்தது.

எனவே அவர்கள், இறைவா! நான் உன்னுடைய திருநபியல்லவா? இக்காலத்தில் வாழும் அனைவரினும் என்னை நீ மேலாக்கி வைக்கவில்லையா? என்று கேட்டனர்.

அப்பொழுது அல்லாஹு தஆலா "உண்மைதான்! அதில் ஐயமேதுமில்லை. இக்காலத்தில் இஸ்ரவேலர்களில் உம்மைக் காட்டினும் என் அன்பிற்குரிய அடியார் வேறெவரும் இலர்'' என்று மொழிந்தான்.

அது கேட்ட அவர்கள் "அவ்வாறாயின் என்னைக் காட்டினும் மிகவும் அறிந்தவர் என்று நீ வேறொருவரைக் குறிப்பிட்டாயே!'' என்று வினா எழுப்பினர்.



"ஆம்! உமக்கு அறிவிக்காத பல இரகசியங்களை நாம் அவருக்கு அறிவித்துத் தந்தோம்'' என்று கூறினான்.

அது கேட்டு வியப்புற்ற ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் அம்மாமேதையைக் காண துடியாய்த் துடித்தார்கள்.

ஆர்வத்தின் உந்துதலால் அவர்கள் அல்லாஹ்வை நோக்கி, அவரை நான் எங்கே காண்பேன்? எவ்விதம் காண்பேன்? என்று வினவினர்.

அல்லாஹ்வும் அவர்களின் ஆர்வத்திற்குத் துணை நின்றான். மிகவும் அறிந்த அம்மனிதரைச் சந்திக்கும் முறைமையை அவன் அவர்களுக்குக் கோடிட்டுக் காட்டினான்.

## உப்பிடப்பட்ட மீன் உயிர்ப்பெற்ற வரலாறு

அல்லாஹு தஆலா நபி மூஸா (அலை) அவர்களை நோக்கி பின்வருமாறு கூறினான்:

கடலோரத்திலுள்ள ஒரு பாறாங்கல்லின் அருகே நீர் அவரைக் காண்பீர்! உப்பிடப்பட்ட மீன் ஒன்றினை கூடையில் வைத்துக் கொள்ளும்! அது உமக்கு உணவாக இருக்கட்டும். எந்த இடத்தில் அம்மீன் உம்மை விட்டு மறைந்து விடுகிறதோ அந்த இடத்தில் அவரை நீர் காண்பீர்!

அதன் பின்னர் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள், அல்லாஹ் கூறிய அவ்வடியாரைக் காணப்புறப்பட்டார்கள்.

அப்பொழுது. அவர்கள் தமக்குத் துணையாக யூஷஃ இப்னு நூன் (அலை) அவர்களை அழைத்துச் சென்றார்கள்.

யூஷஃ இப்னு நூன் (அலை) மூஸா (அலை) அவர்களின் சகோதரர் மகன் என்றும், அவரின் தந்தை நூன், நபி யூசுஃப் (அலை) அவர்களின் மகனார் அப்ராயீமின் மைந்தர் என்றும் கூறப்படுகிறது.

நபி மூஸா (அலை) அவர்களுக்குப்பின் யூஷஃ (அலை) இஸ்ரவேலர்களின் நபியாக இருந்து தீன் பணியாற்றினர் என்று கூறப்படுகிறது. அவர்கள் 126 வயது வரை வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. இவர்களைப் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் ஒன்றும் உள்ளது.

இத்துணை சிறப்புகளுக்குரிய இளைஞரான யூஷஃ (அலை)அவர்களை தம்முடன் அழைத்துக்கொண்டு நபி மூஸா (அலை) அவர்கள் புறப்பட்டார்கள்.

முன்னதாக அவர்கள் உப்பிடப்பட்ட மீன் வைக்கப்பட்ட கூடையொன்றை யூஷஃ (அலை) அவர்களிடம் கொடுத்து, எந்த இடத்தில் இம்மீன் காணாமற் போகின்றதோ அவ்விடத்தில் அது பற்றி நீர் எனக்குத் தெரிவிக்க வேண்டும்!" என்று கூறியிருந்தனர்.

பின்னர் அவ்விருவரும் வெகுச் சிரமங்களை மேற்கொண்டு பயணம் செய்தனர்.

நாட்டின் நானா பக்கங்களிலும் அலைந்து திரிந்தனர். எனினும் அந்நல்லடியார் அவர்களின் கண்களிற் தென்படவில்லை.

அப்பொழுது மக்கள் அவர்களை நோக்கி, "எங்களையெல்லாம் நிர்க்கதியாக தவிக்கவிட்டு தாங்கள் இவ்வாறு வீணே சுற்றித் திரிவது ஏனோ? உலக ஆசை அணுவளவும் அற்ற பேரரசரான பராரியாய் இவ்விதம் சுற்றி அலைய வேண்டும்? விண்ணளவு மாண்பிற்குரியவரான தாங்கள் இந்த அற்ப மண்ணிலே ஏன் நாடோடிபோல் திரிய வேண்டும்? சொல்லுங்கள் எத்தனைக் காலம் வரைதான் தாங்கள் இவ்விதம் திரிந்துகொண்டிருப்பீர்கள்? என்று பலவாறு கூறினர்.

அது கேட்ட மூஸா (அலை) அவர்கள், "என் மக்களே! நீங்கள் என்னை குறை கூறினீர்கள், அவ்வாறே தடையும் செய்யாதீர்கள். அவரைச் சந்திக்கும்வரை என் பயணத்தை நான் நிறுத்தமாட்டேன். இரவென்றும், பகலென்றும் பாராது பயணம் செய்வேன் என்று கூறினர்.

மேலும் அவர்கள் தம் மக்களை நோக்கி, அவரைக் கண்டறிவேன் என் குறிக்கோளை எய்த அவரை ஒரு பாலமாக நான் பயன்படுத்திக்கொள்வேன் என்று கூறினர்.

இன்னும், மூஸா (அலை) அவர்கள், இரு கடல்கள் சந்திக்கும் இடத்தில் அவர் இருப்பதாக இறைவன் கூறியுள்ளான். இரு கடல்களும் சந்திக்கும் அவ்விடத்தை நான் அடையும்வரை பயணம் செய்துகொண்டே இருப்பேன். அவ்விடத்தை அடையப் பல்லாண்டுகள் ஆயினும் சரியே! என்று கூறியவாறு தம் முயற்சியில் உறுதியாயிருந்தார்கள்.



"இரு கடல்கள் சந்திக்குமிடம்" 'மஜ்மஅல் பஹ்ரைனி' என்று நபி மூஸா (அலை) அவர்களுக்கு திருமறை (18:60) வசனத்தில் அல்லாஹு தஆலா குறிப்பிட்ட இடம்.

- ★ அகபா வளைகுடாவும், சூயஸ் வளைகுடாவும் ஒன்றினையும் இடம் என்று சிலர் கூறுகின்றனர்.
- ★ ஆனால் இவ்விடம் பாரசீகக் கடலும், உரோமக் கடலும் சந்திக்கும் இடத்தில் உள்ளது என பைளாவி, தபரீ, நஸஃபீ, ஷமக்ஸரீ ஆகியோரின் தப்ஸீர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ அது ஜோர்டன் கடலும், செங்கடலும் சந்திக்கும் 'பாபுல் மன்தப்' என்ற இடம் எனச் சிலரும்
- ★ ஜிப்ரால்டர் ஜலசந்தி என வேறு சிலரும் கூறுகின்றனர்.
- ★ எனினும் தப்ஸீர் பைளாவியிலோ புற அறிவாகிய மூஸா (அலை) அவர்களும், அக அறிவாகிய கிள்ரு (அலை) அவர்களும், ஒன்று சேருதல் என்பதாக விளக்கம் கூறப்பட்டுள்ளது.

எனினும் அக்கடல்கள் எவை? எங்குள்ளவை?

என்ற சர்ச்சையில் ஈடுபடாமல் கல்வி கற்பதற்காக நபி மூஸா (அலை) அவர்கள் எவ்வளவு நீண்டதொரு பயணம் மேற்கொண்டார்கள்! என்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதாக திருமறையின் விரிவுரையாளர்களான முபஸ்ஸிரீன்கள் நமக்கு விரித்தோதுகின்றனர்.

★ ★ ★

அதன் பின்னர் மூஸா (அலை) அவர்களும், யூஷஃ (அலை) அவர்களும் இரு கடல்கள் சந்திக்கும் இடத்திற்கு வந்தார்கள். கடலோரமாகவே வந்து அவ்விடத்தை அவர்கள் அடைந்தார்கள்.

அவ்விடத்தில் பாறை ஒன்றிருந்தது

களைப்பு மிகுதியால் மூஸா (அலை) அவர்கள் அதன்மீது அமர அவர்களை அப்பொழுது உறக்கம் ஆட்கொண்டது.

பின்னர் கண்விழித்தெழுந்த அவர்கள், அப்பாறையின் அடியில் ஒலித்தோடிய சுனை நீரில் உளூச் செய்தனர்.

அப்பொழுது ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

ஆம்!

அவர்கள் உளூச் செய்தபொழுது தெறித்த சுனை நீரின் ஓர் துளி அவர்கள் கொண்டு வந்திருந்த உப்பிடப்பட்ட மீனின் மீது பட்டு உயிர்பெற்றது.

உயிர்பெற்ற அம்மீன் கண்ணிமைப் பொழுதில் கூடையிலிருந்து துள்ளிக் குதித்து கடலில் வீழ்ந்தது.

கடலில் விழுந்த அம்மீன் நீந்திச் சென்றபொழுது அதன்மீது நீர்படவில்லை. மாறாக அது செல்லச்செல்ல தண்ணீர் விலகி வழியும் ஏற்பட்டது.

இந்த அதிசயத்தை ஹஜ்ரத் யூஷஃ (அலை) அவர்கள் கண்டு கண்கள் நிலை குத்திட வியந்து நின்றார்கள்.

எனினும் நபி மூஸா (அலை) அவர்கள் அவ்வற்புதக் காட்சியைக் காணவில்லை.

உளூச் செய்த முடித்த அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றபொழுது, யூஷஃ (அலை) அவர்களும், அவர்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள்.

எனினும் தாம் கண்ட அற்புதத்தை மூஸா (அலை) அவர்களிடம் சொல்ல அவர்கள் மறந்துவிட்டார்கள்.

இதுபற்றி அல்லாஹ் தன் திருமறையில், அவ்விருவரும் இரு கடல்கள் சந்திக்கும் இடத்தை அடைந்தபொழுது தங்களின் மீனை அவர்கள் மறந்துவிட்டனர். அது கடலில் தன் வழியைச் சுரங்கம்போல் அமைத்துக்கொண்டு (சென்று) விட்டது." (18:61)

என்று இயம்புகின்றான்

★ ★ ★

அதன் பின்னர் அவ்விருவரும் கடலின் ஓரமாக தங்களின் கால்கள் சென்ற வழியே இரவு முழுவதும் நடந்தார்கள்.

எனவே அவர்கள் இருகடல் சந்தித்த இடமான பாறையைக் கடந்து நெடுந்தொலைவு வந்துவிட்டார்கள்.



நடந்து நடந்து களைப்பு மேலிட்டு, அயர்வு மிகுதியால் தள்ளாடினார்கள். வைகறைப் பொழுது நெருங்கிக்கொண்டிருந்தது.

பசியோ அவர்களை வாட்டியது.

எனவே நபி மூஸா (அலை) அவர்கள், யூஷஃ (அலை) அவர்களை நோக்கி, நாம் இப்பயணத்தால் மிகவும் களைத்து விட்டோம். எனவே நம்முடைய காலை உணவை எடுத்து வாரும் என்று கூறினார்கள்.

இதுபற்றித் திருமறையில்,

(தாங்கள் செல்ல விரும்பிய இடம் அதுதான் என்பதை அறியாது) அவ்விருவரும் அதைக் கடந்தபின் மூஸா தன் பணியாளை நோக்கி 'நம்முடைய காலை உணவை நீர் கொண்டு வாரும். நிச்சயமாக நாம் இப்பயணத்தில் மிகவும் அலுப்படைந்து விட்டோம் என்று கூறினார்." (18:62)

என்று கூறுகின்றான்.

இத்திருவசனத்திற்கு விளக்கம் பகரும் விரிவுரையாளர்கள்,

"மூஸா (அலை) அவர்கள் இறைவனால் குறிப்பிடப்பட்ட இடத்தை அடையும்வரை களைப்புறவில்லை; அந்த இடத்தைக் கடந்து பயணம் மேற்கொண்டபொழுதுதான் களைப்பால் துன்புற்றார்கள்" என்று என்று கூறுகின்றார்கள்.

மேலும் அவர்கள், "மூஸா (அலை) அவர்களுக்குப் பசியும், களைப்பும் மேலிட்டதால் தங்களின் உணவான மீனை உண்ண முயன்றார்கள்: அது உயிர்பெற்றுச் சென்றுவிட்டது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே அல்லாஹு தஆலா அவர்களுக்கு இத்தகு களைப்பையும், அலுப்பையும் ஏற்படுத்தினான்" என்றும் விளக்கம் கூறுகின்றனர்.

## பாறைமீது வீற்றிருந்த கிள்ரு (அலை)

உணவை எடுப்பதற்காகக் கூடையினுள் கையைவிட்ட யூஷஃ (அலை) அவர்கள் திடுக்கத்துடன் கையை வெளியே எடுத்தார்கள்.

அதுகண்ட மூஸா (அலை) அவர்கள், "என்ன ஆயிற்று?

ரொட்டி இல்லையா? என்று வினவ,

அதற்கு யூஷஃ (அலை) "ரொட்டி இருக்கிறது மீனைத்தான் காணவில்லை" என்று கூறினார்கள்.

அது கேட்ட மூஸா (அலை) அவர்களுக்கும் வியப்பு மேலிட்டது.

எனவே அவர்கள், "காணாமற்போய்விட்டதா? எந்த இடத்தில் காணாமற்போனது என்பதைக் கூறமுடியுமா? என்று வினவினர்.

அப்பொழுது இளைஞரான யூஷஃ (அலை), "நாம் இருவரும் அக்கற்பாறைமீது அமர்ந்திருந்தபொழுது நிகழ்ந்த அற்புதத்தை நீங்கள் பார்க்கவில்லையா? அம்மீன் திடீரென உயிர் பெற்றுக் கடலில் குதித்து மறைந்தது. இப்பொழுதுதான் என் நினைவுக்கு வருகின்றது. அதனை நான் தங்களிடம் கூறத்தான் எண்ணியிருந்தேன். எனினும் தங்களிடம் கூறாதவாறு ஷைத்தான் என்னை மறக்கடித்து விட்டான்" என்று கூறினர்.

திருமறையில் இவ்வுரையாடல்,

"அதற்கவர், 'அக்கற்பாறையில் நாம் தங்கியிருந்த வேளையில் (நிகழ்ந்த அதிசயத்தை) நீங்கள் பார்த்தீர்களா? நிச்சயமாக நான் (நம்முடன்) கொண்டுவந்த மீனை மறந்துவிட்டேன். அதனை நான் (உங்களுக்குக்) கூறுவதை ஷைத்தானையன்றி (வேறெவரும்) எனக்கு மறக்கடிக்கவில்லை. (அவ்விடத்தில் அது) கடலில் (செல்ல) அதிசயமான வகையில் தன் வழியை அமைத்துக்கொண்டது என்று கூறினார்." (18:63)

என பொறிக்கப்பட்டுள்ளது.

அது கேட்ட மூஸா (அலை) அவர்களின் பசி மயக்கமும், பயணக் களைப்பும் ஓடி மறைந்தன.

மகிழ்ச்சி மீக்குற்ற அவர்கள், "நாம் தேடிவந்த இடம் அதுதான். அதுதான்! அதுதான்'' என்று கூறித் தாங்கள் நடந்துவந்த அடிச்சுவடுகளைப் பின்பற்றியவாறு அக்கற்பாறையைத் தேடியவர்களாகத் திரும்பிச் சென்றார்கள். (திருக்குர்ஆன் 18:64)

இளைஞரான யூஷஃ (அலை) அவர்களும், அவர்களின் பின்னே தொடர்ந்து ஓடினார்கள்.



இறுதியாக அவ்விருவரும் அக்கற்பாறையை அடைந்த பொழுது, அங்கு பச்சைத் தலைப்பாகை அணிந்த ஒருவர் வீற்றிருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். அவரே கிள்ரு (அலை).

அவ்விருவரும் (அவ்விடத்தில்) நம் அடியாரில் ஒருவரைக் கண்டார்கள். அவருக்கு நம்முடைய (சொந்தமான) அருளை அளித்து, நம்முடைய (சொந்தமானதொரு) ஞானத்தையும் நாம் அவருக்குக் கற்பித்திருந்தோம்." (18:65)

கிள்ரு (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்.

அவ்விருவரும் தம்மை நோக்கி வருவதைக் கண்ட கிள்ரு (அலை) அவர்கள் ஒரு துணியால் தம்மைப் போர்த்தி மூடிக்கொண்டார்கள்.

மேலும் இன்ன நோக்கத்திற்காகத்தான் அவர்கள் தம்மிடம் வந்துள்ளனர் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

தம் தொழுகையை கிள்ர் (அலை) அவர்கள் முடித்துக் கொண்டபின்,

மூஸா (அலை) அவர்கள் 'சலாம்' உரைத்தனர்.

அதற்கு அவர்களும் பதில் சலாம் கூறிவிட்டு நீர் யார்? என்று வினாக்கணை தொடுத்தனர்.

அதற்கு மூஸா (அலை) அவர்கள், "நான் மூஸா ஆவேன். தங்களிடம் அறிவு பெறுவதற்காக வந்துள்ளேன்" என்றனர்.

அது கேட்ட கிள்ரு (அலை) அவர்கள், நீர் இஸ்ரவேலர்களின் மூஸாவா? என்று வினவினர்.

அதற்கவர்கள், "ஆம்!" என்றனர்.

அவ்விருவருக்கும் இடையே நிகழ்ந்த இச்சந்திப்பு பற்றி வேறுவிதமாகவும் வரலாற்று நூல்களில் காணப்படுகிறது.

அது வருமாறு:

பாறைமீது கிள்ரு (அலை) அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அங்குவந்த மூஸா (அலை) அவர்கள், அவர்களுக்குச் சலாம் உரைத்தனர்.

அதனைச் செவியுற்ற கிள்ரு (அலை) அவர்கள் "வ அலைக்கு முஸ்ஸலாம் யாநபி பனீ இஸ்ராயீல்!" என்று பதிலுரைத்தனர்.

அது கேட்டு வியப்புற்ற மூஸா, என்னைத் தாங்கள் எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்? என்று வினவ,

உமக்கு எவன் என்னை அறிவித்தானோ அவனே எனக்கு உம்மையும் அறிவித்தான் என்று கிள்ரு (அலை) அவர்கள் விடையளித்தார்கள்.

★ ★ ★

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலர்களின் நபி என்பதை அறிந்துகொண்ட கிள்ரு (அலை) அவர்கள், "உமக்கு பனூ இஸ்ராயீல்களிடம் அதிக வேலை இருக்குமே! என்று கூறினர்.

அ்பொழுது மூஸா (அலை) அவர்கள் , உண்மைதான். எனினும் அறிவு பெறுவதற்காக அல்லாஹ் என்னைத் தங்களிடம் அனுப்பியுள்ளான்." என்று கூறினார்கள்.

இதன் பின்னர் ஹஜ்ரத் யூஷஃ இப்னு நூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு தம் இருப்பிடம் திரும்பினார்கள்.

## அல்லாஹ்வின் அறிவும், படைப்பினங்கள் அனைத்தின் அறிவும்

ஹஜ்ரத் யூஷஃ (அலை) அவர்கள் சென்ற பின்னர் மூஸா (அலை) அவர்கள் கிள்ரு (அலை) அவர்களுடன் இருந்தார்கள்.

அப்பொழுது பழம் தின்னும் வௌவால் ஒன்று பறந்துவந்து தன்னுடைய அலகால் அந்த ஆழ்கடலில் ஒரு சொட்டுத் தண்ணீரைக் குடித்துவிட்டுச் சென்றது.

அதுகண்ட கிள்ரு (அலை) அவர்கள், மூஸா (அலை) அவர்கள் நோக்கி, "மூஸா! உம்முடைய உள்ளத்தில் நீர் மிகவும் அறிந்தவர்' என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் உம்முடைய அறிவையும், என்னுடைய அறிவையும் இவ்வுலகில் முன்னால் வாழ்ந்துச் சென்றவர்களின் அறிவையும், இனி வருங்காலத்தில் இவ்வுலகில் வாழப் போகின்றவர்களின் அறிவையும், ஒருங்கு சேர்த்து அல்லாஹ்வின் அறிவோடு ஒப்பிட்டுப் பார்ப்பின் இதோ பறந்து செல்லும் பறவை சற்றுமுன் குடித்த ஒரு சொட்டு அளவு நீருக்கும் சமமாகாது என்று கூறினர்.



## கிள்ரு (அலை) அவர்களின் நிபந்தனை

அப்பொழுது நபி மூஸா (அலை) அவர்கள், கிள்ரு (அலை) அவர்களை நோக்கி, "தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கல்வியில் பயனுள்ளவற்றை தாங்கள் எனக்குக் கற்றுத் தருகிறீர்களா? நானும் தங்களுடன் வருகிறேன்," என்று கூறினர்.

"மூஸா அவரை நோக்கி, உமக்கு கற்பிக்கப்பட்ட நன்மையானவற்றை நீர் எனக்கு கற்பிக்கும் நிபந்தனையின் மீது நான் உம்மைப் பின்பற்றலாமா? என்று கேட்டார்." (18:66)

அதுகேட்ட கிள்ரு (அலை) அவர்கள், மூஸா (அலை) அவர்களை நோக்கி "ஷரீஅத்திற்கு விரோதம் போன்ற செயல்களை நான் செய்வேன். அவற்றை உம் போன்ற நபிமார்களால் பொறுத்துக் கொண்டிருக்க இயலாது. நீரோ ஷரீஅத்தையும், வேதத்தையும் உடையவராக இருக்கின்றீர். பிறரிடமிருந்து நீர் எவ்வாறு கல்வியைக் கற்றுக்கொள்ள இயலும்? என்று கேட்டனர்.

மேலும் அவர்கள், உம்முடைய கூட்டத்தினருக்குப் பயன் தராத கல்வியைப் பயில்வதும், உமக்குத் தேவையில்லாதது. அது உம்முடைய நபித்துவத்திற்கு மாறான செயலாகும். உண்மை இவ்வாறு இருக்க உமக்கு நான் எதனைக் கற்றுக்கொடுப்பது? என்று கேட்டனர்.

அது கேட்டு நபி மூஸா (அலை) அவர்கள் ஏதும் பேசாது மௌனமாயிருந்தனர்.

கிள்ரு (அலை) அவர்கள் தொடர்ந்து கூறலாயினர்.

"மூஸா! உம்முடைய சட்டதிட்டங்கள் வெளிப்படையான செயல்களின் அடிப்படையில் உள்ளன. என்னால் ஏதேனும் ஒரு செயல் உம்முடைய 'ஷரீஅத்' சட்டத்திற்கு முரணாக நடந்துவிடின் அது

உமக்கு வெறுப்பூட்டக்கூடியதாக இருக்கும். அதன் அந்தரங்கப் பொருளை அறியாமல் நீர் திணறுவீர்" என்றனர்.

மேலும் அவர்கள் மூஸா (அலை) அவர்களை நோக்கி, உண்மையில் உமக்கு அளிக்கப்பெறாத அறிவை அல்லாஹு தஆலா எனக்கு அளித்துள்ளான். உமக்கு அளித்துள்ள அறிவை அவன் எனக்கு அளிக்கவில்லை. அவ்வாறிருக்க என்னுடைய செயல்களைக் கண்டு நீர் எவ்வாறு பொறுமையுடனிருப்பீர்! "என்னுடன் பொறுமையாக இருக்க நீர் ஆற்றல் பெறமாட்டீர்!" (திருமறை 18:67) என்று கூறினர்.

மேலும் கிள்ரு (அலை) அவர்கள், எனக்கு அளிக்கப்பட்ட அறிவோ எவ்வித முயற்சியுமின்றி எனக்கு அருளப்பட்டதாகும். ஆனால் உமக்கு அளிக்கப்பட்டுள்ள அறிவோ முயற்சியின் விளைவாக உமக்கு அருளப்பட்டதாகும். எனவே உண்மை, நீதி என நீர் என்னுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரிடும் என்று நான் அஞ்சுகிறேன். உம்முடைய அறிவுக்கு எட்டாத செயல்களை நான் செய்யும்பொழுது அவற்றை உம்மால் பொறுத்துக் கொண்டிருக்க இயலாதே! என்று கூறினர்.

உம்முடைய ஞானத்தை மீறியதாக உள்ள செயல்களைப் பற்றி நீர் எவ்வாறு சகித்துக்கொண்டிருப்பீர்? (18:68) என்று கிள்ரு (அலை) நபி மூஸா (அலை) அவர்களை நோக்கிக் கேட்டதாக அல்லாஹ்வின் திருமறையில் குறிப்பிடுகின்றான்.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) இவ்வாறெல்லாம் கூறியதைக் கேட்ட நபி மூஸா (அலை) அவர்கள், இறைவன் நாடினால் (எச்செயலையும்) சகித்துக்கொள்பவனாகவே என்னை நீர் காண்பீர்! எச்செயலிலும் உமக்கு நான் மாறு செய்யமாட்டேன் என்று கூறினர். (18:69)

அது கேட்ட கிள்ரு (அலை) அவர்கள் நீர் என்னைப் பின்பற்றுவதாயின் எந்த ஒரு விஷயத்தையும் அறிவிக்கும் வரையில் நீர் என்னிடம் (அதனைப்பற்றி) கேட்கக்கூடாது. (18:70)

என்று நிபந்தனை விதித்தனர்.

அதற்கு இசைந்து மூஸா (அலை) அவர்கள் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களுடன் பயணமாயினர்.



# பொறுமை இழந்த மூஸா (அலை)

அவ்விருவரும் கடலோரமாகச் சென்று கொண்டிருந்தனர்.

ஏதேனும் கப்பல் வருமா? என்று எதிர்பார்த்துச் சென்ற அவர்களின் கண்களில் ஓர் கப்பல் தென்பட்டது.

அக்கப்பலின் மாலுமியை கிள்ரு (அலை) அவர்கள் நன்கு அறிந்தவர்களாய் இருந்ததால் அவன் அவர்கள் இருவரையும் கட்டணமின்றி ஏற்றிக்கொண்டான்.

அவ்விருவரையும் கண்ட கப்பற் பயணிகள் அவர்களிருவரும் கடற்கொள்ளைக்காரர்களாய் இருக்கக்கூடும். எனவே, அவர்களை ஏற்றிக்கொள்ள வேண்டாமென ஆட்சேபித்தனர்.

அப்பொழுது மாலுமி, இல்லை இவர்களின் முகங்கள் நபிமார்களின் முகங்களைப் போன்றுள்ளன என்று கூறி கப்பலில் ஏற்றிக்கொண்டான்.

ஆழ்கடற்பகுதியில் கப்பல் அலைகளைக் கிழித்துச் சென்று கொண்டிருந்தது.

அப்பொழுது ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் எவரும் அறியாவண்ணம் ஓர் ஆயுதத்தை எடுத்து, கடல்நீரை தொட்ட நிலையில் உள்ள கப்பலின் பக்கவாட்டுப் பலகைகளில் இரண்டினைப் பெயர்த்து கப்பலை ஓட்டையாக்கிவிட்டார்கள்.

அது கண்டு ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் வியப்பும், ஆத்திரமும் அடைந்தார்கள்.

அப்பொழுது அவர்களின் உள்ளத்தில் இம்மனிதருடன் இருப்பதால் எனக்கு என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகின்றது? இஸ்ரவேலர்களுடன், இருந்தாலேனும் அவர்களுக்கு இறைவேதத்தை போதித்துக் கொண்டிருக்கலாம். அதனால் நற்பயன் விளையுமே! என்ற எண்ணம் தோன்றியது.

அப்பொழுது கிள்ரு (அலை) அவர்கள், மூஸா! நீர் எதனைப் பற்றி சிந்தனை செய்து கொண்டுள்ளீர் என நான் சொல்லட்டுமா? என்று கேட்டனர்.

மூஸா (அலை) அவர்களும், சொல்லுங்கள் என மொழிய கிள்ரு (அலை) அவர்கள், மூஸா (அலை) அவர்கள் தம் உள்ளத்தில் நினைத்ததைக் கூறினர்.

அது கேட்டு வியப்புற்ற மூஸா (அலை) அவர்கள், ஆம்! தாங்கள் கூறிய அனைத்தும் உண்மையே! என்று கூறினர்.

எனினும் கிள்ரு (அலை) அவர்கள் கப்பலை ஓட்டையிட்ட செயலை நபியவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

எனவே அவர்கள் கிள்ரு (அலை) அவர்களை நோக்கி, என்ன? இதிலுள்ளவர்கள் (கடலில்) மூழ்கடிக்கவா நீர் ஓட்டையாக்கினீர்! நிச்சயமாக நீர் மிக்க அபாயகரமான செயலைச் செய்துவிட்டீர்! என்று கூறினர். (18:71)

மேலும் அவர்கள் "கட்டணம் வாங்காது நம்மைக் கப்பலில் ஏற்றிய உபகாரத்திற்கு நாம் செய்யும் கைம்மாறா இது? நீர் ஓர் புதுமையான செயலைச் செய்து விட்டீர்! என்று கூறினார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள் விரைந்துச் சென்று அத்துவாரத்தை ஓர் துணியினால் அடைக்க முற்பட்டனர்.

அப்பொழுது ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் ஓர் பாத்திரத்தை எடுத்து அவ்வோட்டையை அடைத்தனர்.

அதன்பின் அவர்கள் நபி மூஸா (அலை) அவர்களை நோக்கி, கப்பலில் துளையிட்டுவிட்ட காரணத்தால் கப்பல் மூழ்கிவிடுமென்பதில்லை. கப்பலின்றி வெற்றுப் பேழையில் உம்மை உம் அன்னை வைத்து அலைவீசும் ஆழியில் அனுப்பியபொழுது, நீர் ஆழியில் மூழ்கச் சாகாமல் காக்கப்பெறவில்லையா? என்று இடித்துரைத்தனர்.

பின்னர் அவர்கள், நீர் என்னுடன் பொறுமையாக இருக்க நிச்சயமாக உம்மால் முடியாது என்று நான் கூறவில்லையா? (18:72)

என்று கேட்டனர்.

அதற்கு நபி மூஸா (அலை) அவர்கள், மறந்துவிட்டேன். மன்னித்து விடுங்கள். என்னிடம் கண்டிப்புடன் கடந்து கொள்ள வேண்டாம். (18:73) என்று வினயமாக பதிலளித்தார்கள்.



# சிறுவனைக் கொன்ற நிகழ்ச்சி

அவ்விருவரும் பயணம் செய்த கப்பல் கரையை அடைந்தது. அதிலிருந்து இறங்கிய அவர்கள் இருவரும் அய்லத் என்னும் ஓர் சிற்றூரை நோக்கி நடந்து சென்றனர்.

அப்பொழுது வழியில் ஒரு சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கிள்ரு (அலை) அவர்கள் ஒரே பாய்ச்சலாய் அவன்மீது பாய்ந்து தங்களின் காலால் மிதித்து அவனைக் கொன்றொழித்தனர். அது கண்டு மூஸா (அலை) அவர்கள் திடுக்குற்றனர்.

இக்கொலை நிகழ்ச்சி பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

கிள்ரு (அலை) அவர்கள் அச்சிறுவனைச் சுவரின் ஓரத்தில் படுக்கவைத்து கத்தியால் அறுத்தார்கள் என ஸயீத் இப்னு ஜுபைர் (ரலி) அவர்களும், கழுத்தை நெறித்துக் கொன்றார்களென்று சிலரும்,

அவனின் தலையை சுவரில் மோதிக் கொன்றனர் என வேறு சிலரும், 'கல்லால் அடித்து அவனின் தலையைப் பிளந்து கொன்றார்கள் என வேறொரு சாராரும், கூறுகின்றனர்.

ஹஜ்ரத் வஹ்ப் இப்னு முனப்பஹ் (ரஹ்) அவர்கள், கல்லால் அடித்து தலையை பிளக்கச் செய்து கொன்றதை ஆமோதிக்கின்றனர்.

எனினும் இக்கருத்துக்கள் அனைத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக அல்லாஹு தஆலா தன் திருமறையில்,

பின்னர் இருவரும் நடந்தனர். (வழியில் விளையாடிக் கொண்டிருந்த) ஒரு பையனைச் சந்திக்கவே, அவர் அவனை வெட்டிவிட்டார். (18:74) என்று கூறுகின்றான்.

இத்திருவசனத்திற்கு விளக்கம் கூறும் முபஸ்ஸிரீன்கள், அவ்விருவரும் கடற்கரை ஓரமாக நடந்து சென்றுக் கொண்டிருக்கையில் பல குழந்தைகள் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்களின் ஒரு சிறுவனை கிள்ரு (அலை) அவர்கள் பிடித்து அவனின் தலையை வெட்டி உடலை வேறாக்கி கொன்றுவிட்டனர் என்று கூறுகின்றனர்.

அதனைக் கண்ட மூஸா (அலை) அவர்கள் எவ்விதக் குற்றமும் செய்யாத ஒருவனை கொன்றுவிட்டீரே! நிச்சயமாக நீர் ஒரு தகாதச் செயலையே செய்துவிட்டீர்! (18:74) என்று கூறி அலறினார்கள். அப்பொழுது கிள்ரு (அலை) அவர்கள் அவனின் தலையின் ஒருபுறத் தோலை உரித்துக் காட்டினர் அதில் அவன் காபிர், ஒருபோதும் இறை நம்பிக்கை கொள்ளமாட்டான் என்று காணப்பட்டது

அதன் பின்னர் அவர்கள் மூஸா (அலை) அவர்களை நோக்கி "குற்றமற்ற ஒரு கிப்தியை நீர் ஒரே குத்தாகக் குத்திக் கொன்றொழிக்கவில்லையா? என்று கேட்டனர்.

பின்னர் அவர்கள், நீர் என்னுடன் பொறுமையாக இருக்க உம்மால் நிச்சயமாக முடியாது என்று நான் உமக்கு (முன்னரே) கூறவில்லையா? என்றும் கேட்டனர். (18:75)

இவ்வாறு அவர்கள் கேட்டது நபி மூஸா (அலை) அவர்களை நாணமுறச் செய்துவிட்டது.

பொறுமையுடனிருக்கத் தவறிவிட்டோமே என்று அவர்கள் நாணமுற்றனர். மேலும் அதற்காக வருந்தினர்.

எனவே அவர்கள் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களை நோக்கி, இனியும் நான் யாதேனுமொரு செயலைப்பற்றி உம்மிடம் கேட்பேனாயின், (அதன் பின்னர்) என்னை நீர் உம்முடன் வைத்துக்கொள்ள வேண்டாம். நிச்சயமாக நீர் என்னை மன்னிக்கும் எல்லையைக் கடந்து விட்டீர்! என்று கூறினர். (திருமறை 18:76)

இந்நிகழ்ச்சி பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறிப்படுகையில், என் சகோதரர் மூஸாவுக்கு இறைவன் அருள்பாலிப்பானாக! அவர் நாணமுற்றுவிட்டார். எனவேதான் அவர் அவ்வாறு கூறினார். அவர் தம் தோழருடன் இருந்திருப்பின் மிகவும் வியப்பிற்குரியவற்றையெல்லாம் கண்டிருப்பார் என்று கூறினர்.

## சாய்ந்திருந்த சுவரை சரிசெய்த நிகழ்ச்சி

அதன் பின்னர் அவ்விருவரும் அவ்வூரை விட்டு நீங்கி கர்யத் என்னும் ஊரை சென்றடைந்தார்கள். அதுவே அந்தாக்கியா என்றும் அழைக்கப்படுகின்றது.



ஹஜ்ரத் இப்னு ஸீரீன் (ரஹ்) அவர்கள் அவ்வூர் ஏலியாவுக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூர் என்று கூறுகின்றனர்.

எனினும் அபூஹுரைரா (ரலி) அவர்களோ அது அந்துலூஸ் அண்மையிலுள்ள ஒரு சிற்றூர் என்பதாக கருத்து தெரிவிக்கின்றனர்.

அந்தாக்கியா நகரம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில ரோமப் பேரரசில் கிழக்குத் தலைநகராக விளங்கியது.

சிரியாவில் இன்றுள்ள நகரங்களில் திமிஷ்குக்கு அடுத்தபடியாக எழிலும், வளமும் நிறைந்த ஊர் அந்தாக்கியாவே ஆகும். இங்கு அளவுக்கு அதிகமாக மழை பெய்வதால் இந்நகருக்கு 'அஷ்ஷெக்காகா' என்ற பெயரும் உண்டு.

இங்கு பதினான்கு பள்ளிவாயில்களும், ஹபீபுன்னஜ்ஜாருடைய அடக்கவிடமும் உள்ளன. இவ்வூர் மக்களை அல்லாஹ், 'அஸ்ஹாபுல் கர்யத்' என்று சூரா யாசீனில் குறிப்பிடுகின்றான்.

ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலம் கி.மு. 1300 ஆகும். அதாவது இன்று கி.பி. 1998ம் கி.மு. 1300ம் சேர்ந்து 3298 ஆண்டுகளுக்குமுன் மூஸா (அலை) அவர்கள் வாழ்ந்தார்கள் என்று கணக்கிடப்படுகின்றது.

அவர்களின் காலத்தில் அந்தாக்கியா ஓர் சிறப்புற்ற பட்டினமாகத் திகழ்ந்ததா என்று தெரியவில்லை.

எனினும் அக்காலத்தில்கூட இந்நகரைச் சுற்றிலும் பெரிய கோட்டைச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன.

இச்சுவர் பன்னிரண்டுமைல் தொலைவுள்ளது என்று கூறப்படுகின்றது.

மாலை நேரத்தில் இக்கோட்டைக் கதவுகள் யாவும் பூட்டப்பட்டு வைகறைப் பொழுதில்தான் திறந்துவிடப்படும்.

இராக்காலங்களில் இந்நகருக்கு வந்து சேர்பவர்கள் கோட்டைச் சுவரின் வெளியில்தான் தங்கவேண்டியிருக்கும்.

தலைவாயில் திறக்கப்பட்ட பின்னரே அவர்கள் நகருக்குள் நுழைய முடியும்.

பகைவர்கள், கள்வர்கள் ஆகியோரின் தீங்கிலிருந்து இரவு வேளைகளில் தப்பியிருப்பதற்காகவே இத்தகு பாதுகாப்பு ஏற்பாடு எனலாம்.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களும், மூஸா (அலை) அவர்களும் அந்நகருக்கு அந்திப் பொழுதில் வந்தடைந்தனர்.

பசியும், களைப்பும் மேலிட்டதால் அவர்கள் அவ்வூர் மக்களிடம் சென்று தங்களுக்கு உணவளிக்குமாறு வேண்டினர்.

ஆனால் அம்மக்களோ அவர்களுக்கு உணவளிக்க மறுத்துவிட்டனர்.

பின்னர் அவர்கள் பெண்களிடம் சென்று உணவு கேட்டபொழுது பெர்பெரிய்யா என்ற ஒரேயொரு பெண்மணி அவர்களுக்கு உணவு வழங்கினாள்.

★ ★ ★

அவர்கள் அந்திப்பொழுதில் அவ்வூருக்கு வந்து சேர்ந்தததால் கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டு, அவர்களிருவரும் நகருக்குள் நழைய முடியாமற் போயிற்று என்றும், பசி மிகுதியால் வாயிற் காப்போனிடம் சென்று உணவு வேண்டிய பொழுது அவன் அதனைப் பொருட்படுத்தவில்லை என்றும், கூறப்படுகிறது.

வேறு சிலரோ, அவர்களிருவரும் எவரிடமும் சென்று உணவு கேட்கவில்லை என்றும், எனினும், வெளியூர்வாசிகளான அவர்களை உபசரித்து அவ்வூர்மக்கள் உணவு வழங்கவில்லை என்றும் கூறுகின்றனர்.

அல்லாஹு தஆலா அவ்வூர் மக்களின் இச்செயலை, 'மறுத்துவிட்டார்கள்' எனப் பொருள்படும் 'ஃபஅபவ்' என்னும் சொல்லைத் திருக்குர்ஆனில் (18:77) கூறியுள்ளான்.

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் அந்தாக்கியா நகர மக்கள், நபி (ஸல்) அவர்களை அணுகி, பொற் காசுகளைக் காணிக்கையாக வைத்து ஃபஅபவ் (மறுத்துவிட்டார்கள்) என்ற சொல்லை திருமறை வசனத்திலிருந்து நீக்கிவிட்டு கொடுத்தார்கள் எனப் பொருள்படும் 'ஃபஅதவ்' என்னும் சொல்லைப் பொறிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.



அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அம்மக்களின் வேண்டுகோளை நிராகரித்து, "அல்லாஹ்வின் திருவசனத்தைத் திருத்துவது அவன் பொய்யுரைத்தான் என்று கூறாமற் கூறுவதாகும். இறைவன் பொய்யனல்லன்; உண்மையாளன் என்று கூறினர் என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் எழுதியுள்ளனர்.

★ ★ ★

மறுநாள் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களும், மூஸா (அலை) அவர்களும் ஊருக்குள் சென்றனர்.

அப்பொழுது நெடுஞ்சுவர் ஒன்று சாய்ந்து விழும் நிலையில் இருப்பதை அவர்கள் கண்டனர். அது நூறு அடி உயரமுள்ளது என்று கூறப்படுகிறது. ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் அதனை நோக்கி சமிக்ஞை செய்ய அது நிமிர்ந்து நின்றது.

இவ்வாறு அவர்கள் அச்சுவற்றைச் செப்பனிட்டு சீர்படுத்தினார்கள்.

★ ★ ★

'அதனை இடித்துத் தள்ளிவிட்டுப் புதிதாகச் சுவர் எழுப்பினர்' என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும்,

'தம் கையால் அதனைத் தடவி, தம் தோளால் அதனை தூக்கி நிலைநிறுத்தினர்' என்று இப்னு ஜுபைர் அவர்களும் கூறுகின்றனர்.

கிள்ரு (அலை) அவர்கள் அதனைத் தம் கரத்தாலேயே ஒழுங்குபடுத்தினர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

★ ★ ★

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களின் செயல்கண்டு நபி மூஸா (அலை) அவர்கள் சினமுற்றனர்.

நமக்கு ஒரு கவளம் உணவுகூட வழங்காத இம்மக்களுக்கு நாம் ஏன் இந்த வேலை செய்ய வேண்டும்? என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தில் மிகைத்தது போலும்;

எனவே அவர்கள் கிள்ரு (அலை) அவர்களை நோக்கி 'நீர் விரும்பி இருப்பின் இதற்குரிய கூலியை (இவ்வூராரிடம்) வாங்கியிருக்கலாமே!' (18:77) என்று கூறினர்.

இப்பொழுது கிள்ரு (அலை) அவர்கள் மூஸா (அலை) அவர்களை நோக்கி, நீர் ஏன் கூலி பெற்றுக்கொள்ளாமல் ஷுஐப் (அலை) அவர்களின் பெண் மக்களுக்கு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொடுத்தீர்? என்று இடித்துரைத்தனர்.

## மூன்று விளக்கங்கள்

பின்னர் கிள்ரு (அலை) அவர்கள், மூஸா (அலை) அவர்களை நோக்கி, எனக்கும் உமக்கும் இடையில் பிரிவினை(க்குரிய நேரம் வந்துவிட்டது) இதுவே...என்று கூறினர். (18:8)

அவ்வாறு கூறியபின்னர் மூஸா (அலை) அவர்களுக்கு வியப்பூட்டும் வண்ணம் செய்த மூன்று செயல்களுக்குரிய விளக்கங்களைக் கூறலானார்கள்.

அவர்கள், நபி மூஸா (அலை) அவர்களை நோக்கி, நாம் பிரிவதற்கு முன் நான் ஆற்றிய அலுவல்களின் மறைபொருள்களை உமக்குக் கூறுகிறேன்.

★ 1. முதலில் நான் கப்பலில் துளையை ஏற்படுத்தினேன். அதற்குரிய காரணம்,

அக்கப்பல் செல்லும் வழியில் கொடியவன் ஒருவன் ஆட்சிசெய்து வந்தான். (அவனின் பெயர் ஜலீல் இப்னு கர்கர் என்றும் ஹுதத் இப்னு புதத் என்று இருவிதமாகச் சொல்லப்படுகின்றது.)

கப்பல்களில் சிறந்தவற்றை அவன் வன்முறையின் மூலம் அபகரித்துக் கொள்ளும் வழக்கமுடையவனாக இருந்தான். நாம் பயணம் செய்த அக்கப்பலோ கடலில் கூலி வேலை செய்து பிழைக்கும் ஏழைகளுக்குரியதாகும்.

(அது பத்து சகோதரர்களுக்குச் சொந்தமானது என்றும், அவர்களில் ஐவர் அதில் பணியாற்றினர் என்றும் எஞ்சிய ஐவர் உடல் ஊனமுற்றவர்கள் என்றும் கூறப்படுகிறது)

அக்கொடுங்கோலன் ஏழைகளுக்குரிய அக்கப்பலை அபகரித்துக் கொண்டால் அவர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகிவிடும். கப்பல் ஓட்டையாயிருப்பின் அதனை அவன் அபகரிக்கமாட்டான். அதனை அதன் போக்கில் விட்டுவிடுவான் என்று எண்ணியே நான் அதனை ஓட்டையாக்கினேன்.



அவன் அக்கப்பலைக் கண்டான். பழுதடைந்த அதனைப் பார்த்த அவன் அதனைக் கைப்பற்றாது விட்டுவிட்டான். பின்னர் நான் அதனை ஒழுங்குபடுத்திவிட்டேன்.

(இதன் சுருக்கம் (18:79) திருவசனத்தில் பொதிந்துள்ளது.)

★ 2. இரண்டாவதாக நான் ஒரு சிறுவனைக் கொன்றேன். அதற்குக் காரணம் அவனின் பெற்றோர் இருவரும் முஃமின்களாய் (இறை நம்பிக்கையாளர்களாக) இருக்கின்றனர். ஆனால் அவனோ காஃபிர் ஆவான்.

(அச்சிறுவன் பெயர் ஷம்வூன் என்றும், ஜயூர் என்றும், ஜயூன் என்றும் மூன்றுவிதமாகக் கூறப்படுகின்றது.)

அவன் பருவம் எய்தியபின் அக்கிரமக்காரனாகி, தம் பெற்றோர் இருவரையும் காபிர்களாகவும், அக்கிரமக்காரர்களாகவும் ஆக்கிவிடுவானோ என்று அஞ்சியே நாம் அவனைக் கொன்றொழித்தோம்.

(திருக்குர்ஆனில் 'நாம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து கிள்ரு (அலை) அவர்கள் இறை ஆணைப்படியே அவனைக்கொன்றனர் என்பது தெளிவாகிறது.

அவன் தீய செயல்கள் புரிந்து பெற்றோருக்கு மன வருத்தத்தை அளித்து வந்தான் லஹ்ஹாக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.

அவன் இரவு முழுவதும் களவாடுவதில் ஈடுபடுவான் என்றும், களவு கொடுத்தோர் பெற்றோரிடம் வந்து முறையிடின் அவர்கள் அவன்மீது கொண்ட அன்பின் காரணமாக, எம் மகன் இன்றிரவு முழுவதும் எங்களுடனல்லவா இருந்தான்! என பொய்யுரை புகல்வர் என்று கல்பீ கூறுகின்றார்.

"அப்பையன் இறந்தபிறகு இறைவன் அப்பெற்றோருக்கு ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தான். அப்பெண்ணை ஒரு நபி மணந்துகொள்ள அவளின் சந்ததியில் எழுபது நபிமார்கள் தோன்றினர்" என ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றனர்.

அப்பெண்ணை மணந்துகொண்ட நபி ஷம்வீல் என்றும் ஷம்வூன் என்றும் இருவிதமாகக் கூறப்படுகிறது.

★ 3. மூன்றாவதாக கீழே விழும் நிலையிலிருந்த சுவரை

நிலைநிறுத்தினேன், அதற்குரிய காரணம் யாதெனில், அச்சுவர் இரண்டு அநாதைச் சிறுவர் (யத்தீம்)களுக்கு உரியது.

ஒருவரின் பெயர் அஸ்றம் மற்றவரின் பெயர் ஸுறைம் என்பதாகும். இவர்களின் தந்தையின் பெயர் காஷிஹ் தாயின் பெயர் தன்யா ஆகும். பெற்றோர்கள் மிக்க இறையச்சமுடையோரா யிருந்தனர்.

தந்தையார் மிகுந்த நேர்மையாளராக விளங்கியவர். மக்கள் தங்களிடமுள்ள பணம் முதலான திரவியங்களை அவரிடமே கொடுத்து வைத்து பாதுகாப்பார்களாம். அவரும் மிக்க நாணயத்துடன் நடத்து மக்களின் செல்வங்களைத் திருப்பித் தருவாராம்.

(சிறுவர்களின் தந்தை என்று கூறப்படுவது அவர்களின் ஏழாவது தலைமுறைப் பாட்டானாரைக் குறிக்கும் என்பதாக ஜஃபர் இப்னு முஹம்மது (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.)

அச்சிறுவர்களுக்குரிய புதையல் (கன்ஜ்) ஒன்று அச்சுவருக்கு அடியில் இருந்தது. அல்லாஹு தஆலா அச்சிறுவர்கள் பருவமெய்தியதும் அதனை எடுத்துப் பயனடைய நாடினான். எனவேதான் அச்சுவர் கீழே விழுந்துவிடாது நிலைநிறுத்தினேன்.

இதனை உம் இறைவனின் பேரருளால் செய்தேனே அன்றி வேறில்லை. எனவேதான் நான் அதற்குக் கூலி பெற்றுக் கொள்ளவில்லை" என்று கூறினர்.

# புதையலில் காணப்பட்ட போதனைகள்

அப்புதையலில் தங்கப்பாளம் இருந்தது என்று சொல்லப்படுகிறது. அதில் பளிங்கினால் ஆன பலகை இருந்தது எனவும் அதன் இருபுறங்களிலும் உபதேசங்கள் எழுதப்பட்டிருந்தன எனவும் கூறப்படுகின்றது.

ஒரு பக்கத்தில் எழுதப்பட்டிருந்த உபதேசங்கள் வருமாறு:

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்! கத்ரை (விதியை) விசுவாசிப்பவனை எண்ணி வியப்படைகிறேன். செயல்கள் யாவும் அல்லாஹ்வின் கற்பனையாலுட் தக்தீராலும் நிகழ்கின்றன. எனவே



ஒரு வரவு தவறிப்போயினும் அல்லது ஒரு துன்பம் வந்தெய்தினாலும் துயரமடைவது தேவையற்றது.

"ரிஜ்க் (உணவு)க்காக மிகுந்த சிரமத்தை மேற்கொள்பவனை எண்ணி வியப்படைகிறேன்.

அல்லாஹு தஆலா ஒவ்வொருவருக்கும் படியளப்பவனாக இருக்கின்றான்; எனவே அதனை அடைவதற்காக ஏன் மனிதன் சிரமப்பட வேண்டும்?

தன்னுடைய அற்ப ஆயுளைக்கொண்டு திருப்தி அடைபவனை எண்ணி வியப்புறுகிறேன்; அவன் விரைவில் மரிப்பது முடிவானது; எனவே தன்னுடைய அற்ப ஆயுளைக்கொண்டு அவன் எவ்வாறு மகிழ்ச்சி அடைய முடியும்?

அல்லாஹு தஆலா சிறியவை, பெரியவை என அனைத்திற்கும் விசாரணை நிகழ்த்தக்கூடியவன்; அவ்வாறிருக்க இவ்வுலகில் செல்வங்களையும், பொருள்களையும், வசதி வாய்ப்புகளையும் பெருக்குவதிலேயே ஈடுபட்டு விசாரணையை எவ்வாறு மறக்க இயலும்?

இவ்வுலகை நம்பி இருப்பவர்களை எண்ணி நான் வியப்படைகிறேன். நரகத்தை விசுவாசிப்பவர்கள் எவ்வாறு சிரிக்கின்றனர்?" என்றிருந்தன.

அப்பலகையில் மறுபக்கத்தில காணப்பட்ட போதனைகள் பின்வருமாறு:

நான்தான் அல்லாஹ்! என்னைத்தவிர வேறு நாயனில்லை. நான் தனித்தவன்; எனக்கு இணையாக எவருமில்லை.

நன்மையையும், தீமையையும் உருவாக்கியவன் நானே! நன்மைக்கென நான் படைத்தவர்களுக்கு நன்மாராயம் உண்டாவதாக! அவர்களின் கரங்களால் நான் நன்மைகளை ஏற்படுத்தியுள்ளேன். தீமைகளுக்காக நான் படைத்தவர்களுக்கு கேடுதான். அவர்களின் கரங்களால் தீயவற்றை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்று பொறிக்கப்பட்டிருந்தது.

# கிள்ரு (அலை) அவர்களின் அறிவுரை

தாம் செய்த மூன்று வியத்தகு செயல்களுக்குரிய விளக்கங்களைக் கூறி முடித்த ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள், மூஸா (அலை) அவர்களிடம்,

“இம்மூன்றில் எதனையும் நான் என் விருப்பத்திற்கேற்ப செய்யவில்லை; உம்மால் பொறுத்துக்கொள்ள இயலாத என் செயல்களின் உட்பொருள்கள் இவைதாம்” என்று கூறினர்.

மேலும் அவர்கள் மூஸா (அலை) அவர்களை நோக்கி, “நீர் சற்று பொறுமையுடன் இருந்திருப்பின் இன்னும் அதிசயமான ஆயிரம் புதுமைகளைக் கண்டிருப்பீர்!” என்று கூறினர்.

அது கேட்ட மூஸா (அலை) அவர்கள் தம் தவற்றை எண்ணி கண்ணீர் உகுத்து அழுதார்கள்.

அதன்பின்னர் அவர்கள் கிள்ரு (அலை) அவர்களை நோக்கி, அல்லாஹ் தங்களுக்கு எக்காரணத்தை முன்னிட்டு மறைவானவற்றை அறியும் ஆற்றல் வழங்கினான்? என்று வினவினர்.

அதற்கு கிள்ரு (அலை) அவர்கள், “அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறுவதற்காக பாவங்கள் செய்யாது தவிர்ந்து கொண்டேன் என்பதனால் என்று விடையளித்தார்கள்.

பின்னர் மூஸா (அலை) அவர்கள் தமக்கு அறிவுரை பகருமாறு கிள்ரு (அலை) அவர்களிடம் வேண்டிக்கொண்டனர். அதற்கிணங்கி அவர்களும் பின்வருமாறு அறிவுரை பகர்ந்தனர்.

பிறரிடம் தர்க்கம் செய்வதற்காக நீர் கல்வி கற்க வேண்டாம்.

கற்றபடி செயலாற்றுவதற்காக கல்வி பயில்வீராக!

கற்றபடி செயலாற்றாவிடின் அதனால் எவ்விதப் பயனும் ஏற்படாது. பிறருக்குத்தான் அது பயன்படும்.

பிறருக்கு நன்மை செய்வீராக!

பிறருக்கு ஒருபோதும் தீங்கிழைக்க வேண்டாம்.

முகத்தைக் கொடூரமாக வைத்துக் கொள்ளாதீர்.



முக மலர்ச்சியுடன் இருப்பீராக!

அழிவு வேலையில் இறங்க வேண்டாம்.

வியப்பிற்குரியவை நிகழ்ந்தாலன்றி வேறு காரணங்களுக்காக சிரிக்க வேண்டாம்.

தாம் செய்த தவற்றினை எண்ணி மனம் வருந்தி ஒருவர் மன்னிப்புக் கோரிய பின்னர், நீர் மீண்டும் அவரிடம் அத்தவற்றை எடுத்துரைத்து அவரை இழிவுபடுத்த வேண்டாம்.

நீர் வாழும் காலமெல்லாம் உம் பாவங்களை எண்ணி அழுது கொண்டிருப்பீராக!

இன்றைய அலுவலை நாளை செய்யலாம் என்று தள்ளிப்போட வேண்டாம்.

மறுமைக்கான தேட்டத்திலேயே உம்முடைய முயற்சிகள் அமைந்திருக்கட்டும்.

உமக்குத் தேவையற்ற அலுவல்களில் நீர் தலையிட வேண்டாம்.

இவ்வாறு கிள்ரு (அலை) அவர்கள் அறிவுரை கூறினார்கள்.

# மூஸா (அலை) அவர்களின் அறிவுரை

அதன்பின்னர் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் தமக்கு அறிவுரை பகருமாறு நபி மூஸா (அலை) அவர்களை வேண்டினார்கள்.

இம்ரானுடைய மகனே! எனக்கு நீர் அறிவுரை நல்குவீராக! என்று அவர்கள் கூறினர்.

அப்பொழுது மூஸா (அலை) அவர்கள் பின்வருமாறு அறிவுரை பகர்ந்தனர்.

அல்லாஹ்வுக்காக அன்றி வேறெவருக்காகவும் எவர்மீதும் சினமுற வேண்டாம்.

உலகத்தின்மீது பற்றுக்கொள்ள வேண்டாம்! பற்றுக் கொண்டால் அது இறைநம்பிக்கையை உள்ளத்திலிருந்து போக்கடித்து இறைவனுக்கு மாறு செய்யும் தன்மையை உள்ளத்தில் புகுத்திவிடும்.

இந்த அறிவுரைகளைச் செவியுற்ற கிள்ரு (அலை) அவர்கள், மிக்க மேலான அறிவுரையை வழங்கி விட்டீர். இறைவன் தன்னை வணங்கிவர உமக்குப் பேரருள் பாலிப்பானாக! உம்முடைய அலுவல்களில் உமக்கு மகிழ்ச்சியை நல்குவானாக! அவனின் படைப்பின்மீது உமக்கு அன்பு ஏற்படச் செய்வானாக! என்று துஆ இறைஞ்சினர்.

இவ்வாறு இமாம் அஸ்ஸுஹைலி (ரஹ்) அவர்கள் தம்முடைய 'அத்தஃரீபு வல் இஃலாம்' என்னும் நூலில் எழுதியுள்ளார்கள்.

நபி மூஸா (அலை) அவர்கள் அதற்கு ஆமீன் கூறினார்கள்.

பதினெட்டு நாட்களுக்குப் பின்னர் அவ்விருவரும் தத்தம் வழியே பிரிந்து சென்றனர்.

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் தம் வழியே செல்ல நபி மூஸா (அலை) அவர்களோ இஸ்ரவேலர்களை நோக்கி நடந்து வந்தனர்.

## கிள்ரு (அலை) பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறிய நிகழ்ச்சி

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபீ உமாமத்துல் பாகிலி (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:

ஒருநாள் கிள்ரு (அலை) பனீ இஸ்ரவேலர்களின் கடைத்தெரு வழியே சென்றார். அப்பொழுது ஒரு மனிதன் அவரிடம் வந்து யாசகம் கேட்டான்.

அதற்கு கிள்ரு நபி, "உமக்குக் கொடுக்க என்னிடம் ஏது மில்லை என் கையைப் பிடித்துக்கொண்டு போய் கடையில் என்னை விலைக்கு விற்று அந்தப் பணத்தை வாங்கிக்கொள்க! என்றார்.

அவ்வாறே அம்மனிதனும் அவரின் கையைப் பிடித்துக்கொண்டுபோய் கடையில் 400 திர்ஹத்துக்கு விற்றுப் பணத்தை வாங்கிக் கொண்டான்.

பின்னர் கிள்ரு (அலை) தம்மை விலைகொடுத்து வாங்கியவனிடம், "எனக்குரிய அலுவல் யாது எனக்கூறும்!" என்று கூறினார்.



அதற்கவன், "நீரோ வயது முதிர்ந்த கிழவராக உள்ளீர். எனவே உம்மீது கடினத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை" என்று கூறினான்.

எனினும் கிள்ரு (அலை) எனக்கு எதுவும் கடினமில்லை. எனவே ஏதேனும் அலுவல் எனக்கு நீ கூறு! என்றார்.

எனவே அவன், இப்பாறையை எடுத்து இந்த இடத்தில் போடவேண்டும். என்று பணித்தான்.

அவன் குறிப்பிட்ட அப்பாறையோ ஆறு பேர் நாள் முழுவதும் முயன்றாலும் அகற்ற முடியாததாகும். அதனை கிள்ரு (அலை) ஒரு சாஅத் நேரத்தில் எடுத்துப் போட்டார். அல்லாஹு தஆலா மலக்குகளைக் கொண்டு அவருக்கு உதவினான். அந்த அற்புதத்தைக் கண்ணுற்ற அம்மனிதன் பெருவியப்புற்றான். பின்னர் அவன் பயணம் புறப்பட்டான்.

அப்பொழுது அவன் அவரை நோக்கி, "நீர் ஒரு முஃமின் (இறை நம்பிக்கையாளர்) என நான் கண்டேன். எனவே நீர் எனக்குக் பகரமாக என் இல்லத்தில் இருந்து வாரும். நான் பயணம் செல்கிறேன்" என்றார்.

அதற்கு கிள்ரு (அலை) 'இன்ஷா அல்லாஹ்! அவ்வாறே செய்கிறேன். எனக்குரிய அலுவல்களைக் கூறிவிட்டுச் செல்' என்று கூறினார்.

அப்பொழுது அவன், அந்த பாறாங்கல்லை முறைப்படி எடுத்து அடைத்துவை! என்று பணித்துவிட்டுப் பயணமானான்.

அவன் பயணத்திலிருந்து திரும்பிவந்து பார்த்தபொழுது, அவன் எண்ணியவாறு வீடு கட்டப்பட்டிருந்தது.

அதுகண்டு வியப்புற்ற அவன், நீர் யார்? என்று வினவினார்.

அப்பொழுது அவர், அடிமைத்தனத்தில் அகப்பட்ட கிள்ரு என்று விடையளித்தார்.

அப்பொழுது அம்மனிதன், அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு கேட்கிறேன்! உண்மையைச் சொல்லும்! நீர் யார்? என்று வினவினார்.

அதற்கு கிள்ரு (அலை), "நான் கிள்ரு! ஒரு மனிதன் என்னிடம் வந்து யாசகம் கேட்டான். என்னிடம் பணம் இல்லாததால் என்னையே அவனிடம் ஒப்படைத்து, என்னை விற்று காசாக்கிக் கொள்ளுமாறு கூறினேன். அவனும் என்னை உன்னிடம் விற்று பணத்தைப் பெற்றுக்கொண்டான்" என்று கூறினர்.

அதுகேட்ட அம்மனிதன் அவரின் காலில் விழுந்து "நீர் அவர் என்பதை அறியாமல் நான் உம்மிடம் வேலை வாங்கி விட்டேன். இனிமேல் நாம், என்பிள்ளைகளும், என் செல்வங்கள் யாவும் உமக்கு உரியனவே! நான் உமக்கு உரிமை விட்டு விட்டேன். உம்முடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நாங்கள் நடப்போம்" என்று கூறினான்.

பின்னர் காஃபிரான அம்மனிதன் அவரின் கரம் பற்றி இஸ்லாத்தில் இணைந்ததுடன் 400 தீனாரும் அவருக்கு அடித்தளையிலிருந்து விடுதலையும் வழங்கினான்.

அல்லாஹு தஆலா கிள்ரு நபிக்கு வஹீ அறிவித்தான்.

அடிமைத்தளையிலிருந்து உம்மை விடுவித்தோம். உம்முடைய கரம் பற்றிக் காஃபிரானவனை முஸ்லிமாக்கினோம். நானூறு திர்ஹத்துக்குப் பகரமாக 400 தீனார் உமக்குக் கொடுத்தோம். அல்லாஹ்வின்மீது தவக்குல் வைப்பவன் இழப்பை அடையமாட்டான். இவ்வாறு வஹீ வந்தது.

இந்நிகழ்ச்சி நபி (ஸல்) அவர்களால் கூறப்பட்டதென, அபீ அமாமத்துல் பாகிலி (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்கின்றார்கள்.

# வலிமார்களுடன் கிள்ரு (அலை) அவர்களின் சந்திப்பு முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களுடன் சந்திப்பு

ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைத் தாம் பலமுறை சந்தித்ததாக முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விவரிக்கையில் இது பற்றி தெரிவிக்கின்றார்கள். அவை பின்வருமாறு:



1. நான் ஆன்மீகத் துறையில் அடியெடுத்து வைத்த புதிதில் செவில்லிக்கு அபூ ஜஃபர் அல்யூர்யானீ என்ற இறைநேசச் செல்வர் வந்தார்.

அவர் என்னிடம், நீர் உலகத் தொடர்பனைத்தையும் விட்டொழித்து இறைவன் ஒருவனையே உம்முடைய உற்ற நண்பராகத் தெர்ந்தெடுத்துக் கொள்ளும்! இடைத்தரகரின் உதவியின்றி நீரே இறைவனுடன் நேரடியாக உரையாடலாம்' என்று கூறினார்.

அவர் எப்பொழுதும் உளூவுடன் கிப்லாவை முன்னோக்கியே அமர்ந்திருப்பார்.

அவருக்கும் எனக்குமிடையே ஒருவரின் ஆன்மீக நிலையைப் பற்றி கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அவருடன் வாதித்து விட்டு நான் வெளியே வந்தேன். அப்பொழுது முதன் முதலாக கிள்ரு (அலை) அவர்களைக் கண்டேன்.

ஷைகுல் உர்யானீ கூறியதே சரியென்றும் நான் கூறியது தவறு என்றும் அவர்கள் என்னிடம் எடுத்துரைத்தார்கள். அப்பொழுது நான் ஆன்மீகப் பாதையில் பக்குவப்பட்டிருக்கவில்லை.

2. முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்கும், கிள்ரு (அலை) அவர்களுக்கும் இடையே தூனிஸ் நகரில் இரண்டாவது சந்திப்பு நிகழ்ந்தது.

அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடுகையில், மற்றொரு முறை நான் தூனிஸ் துறைமுகத்திலுள்ள ஒரு கப்பலில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது எனக்கு வயிற்று வலி ஏற்பட்டது. கப்பலில் இருந்த அனைவரும் உறங்கிவிட்டனர். நான் கப்பலின் ஓரத்திற்கு வந்து கடலின் அலைகளைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன்.

அப்பொழுது கடலின்மீது எவரோ நடந்து வருவது போலிருந்தது; ஆம்! அவர் நடந்து வந்தார். கப்பலை நெருங்கியதும் கப்பலில் ஒருகால் வைத்தார். அது நனையாமல் இருந்தது. பின்னர் மறுகால் எடுத்து வைத்தார். அதுவும் நனையாமல் இருந்தது.

கப்பலில் நின்று சற்று நேரம் உரையாடிய பின்னர், எனக்கு சலாம் கூறிவிட்டுப் பிரிந்தார்.

அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் கலங்கரை விளக்கமொன்று இருந்தது. அதனை அவர் இரண்டு அல்லது மூன்று எட்டில் சென்றடைந்தார். அங்கிருந்து அவர் இறைவனைத் துதி செய்து கொண்டிருந்த ஒலி என் செவிகளிற் கேட்டது.

விடிந்தபின் நான் கப்பலிலிருந்து இறங்கி ஊருக்குள் நடந்தேன். அப்பொழுது ஒருவர் என்னைச் சந்தித்து கப்பலின் கிள்ரு (அலை) அவர்களுடன் ஏற்பட்ட சந்திப்பு எவ்வாறிருந்தது? அவர் உம்மிடம் என்ன கேட்டார். அதற்கு நீர் என்ன விடையளித்தீர்? என்று வினவினார், என்று கூறினார்கள்.

இது கிள்ரு (அலை) அவர்களுடன் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்கு நிகழ்ந்த இரண்டாவது சந்திப்பு ஆகும்.

3. முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தனிமையைப் பெரிதும் விரும்பினார்கள்.

ஒரு நாள் அவர்கள் ஒரு சிற்றூர் சென்று அங்குள்ள அடக்கவிடத்தில் அமர்ந்து தவம் செய்தார்கள்.

பெரும்பாலும் பட்டினியாயிருக்கும் அவர்கள் சில வேளைகளில் வெளியில் வந்து எங்கேனும் கிடைக்கும் காய்ந்த ரொட்டிகளைத் தண்ணீரில் நனைத்து அதன் உண்டு உயிர் வாழ்ந்தனர்.

அச்சமயத்தில் அவர்கள் முன் கிள்ரு (அலை) அவர்கள் வந்து அவர்களுக்கு 'பைஅத்'தும், கிர்க்காவும் வழங்கிச் சென்றனர்.

அதன்பின் அவர்களுக்கு 'இஸ்முல் அஃலம்' தெரியலாயிற்று.

இரும்பைப் பொன்னாக்கும் கீமியா வித்தையையும் அவர்கள் தாமாகவே உதிப்பின் மூலம் தெரிந்து கொண்டார்கள்.

அதன் பின்னர் இப்னு அரபி (ரஹ்) அவர்களுக்கும், கிள்ரு (அலை) அவர்களுக்கும் இடையே அடிக்கடி சந்திப்புகள் நிகழ்ந்தன.

இச்செய்திகளை இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தம்முடைய 'புத்தூஹாத்துல் மக்கிய்யா' என்னும் நூலில் தெரிவிக்கின்றார்கள்.

மேலும் அவர்கள் அந்நூலில் குறிப்பிடும் ஒரு செய்தி முக்கியம் வாய்ந்ததாகும்.

நான் கிள்ருடன் பல பாலைவனங்களில் பயணம் செய்துள்ளேன்.



ஒரு தடவை மூஸா (அலை) அவர்களுடன் அவர்கள் கொண்ட தொடர்பு பற்றி நான் வினவினேன்.

அதற்கவர்கள், என்ன செய்வது? நான் அவருக்காக ஆயிரம் செய்திகளைத் தயாரித்து வைத்திருந்தேன். ஆனால் அவருக்கோ மூன்று நிகழ்ச்சிகளில்கூட பொறுமை இல்லாது போய்விட்டது. எனவே நான் அவரை விட்டுப் பிரிந்து விட்டேன் என்று கூறினார்கள் என்று இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

4. 'அல்தனஸ்ஸுலாத்தும் மௌஸிய்யா' என்னும் நூலில் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் பின்வரும் செய்தியைக் குறிப்பிடுகின்றார்கள்.

மோசூல் சென்ற அவர்கள் அங்கு அப்துல்லாஹ் இப்னு ஜாமி என்ற பெரியாரைச் சந்தித்தனர்.

அவருக்கு ஏற்கனவே கிள்ரு (அலை) அவர்கள் அவருடைய தோட்டத்தில் கதீப் அல்பான் என்னும் இறைநேசரின் முன்னிலையில் வைத்து பைஅத் வழங்கியிருந்தார்கள். அதனை அவர் கூறினார்.

அப்பொழுது இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தமக்கும் அவ்வாறே செய்யுமாறு அவரை வேண்டினர்.

அதே இடத்தில் ஒரு தொப்பியைக் கொண்டுவந்து அவர்களின் தலையில் அணிவித்து, அவர்களுக்கு பைஅத்தும், கிர்க்காவும் அவர் வழங்கினார்.

இவ்வாறு ஹஜ்ரத் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைத் தாம் சந்தித்த செய்திகளைத் தம் நூல்களின் வாயிலாக தெரிவிக்கின்றார்கள்.

ஷைகு இப்னு அரபி (ரஹ்)யின் காலம் ஹிஜ்ரீ 560 – 638 (கி.பி. 1165–1240) ஆகும்.

இளமையிலேயே ஹதீஸ்களுக்கு விளக்கம் கூறிய இப்னு அரபி (ரஹ்) அவர்களை மார்க்க விற்பன்னர்கள் பெரிதும் மதித்தனர்.

மாபெரும் தத்துவ ஞானியான இப்னு ருஷ்த் இப்னு அரபி (ரஹ்) அவர்களைச் சந்தித்து இரண்டொரு வார்த்தைகள் பேசிய உடனேயே திக்பிரமையுற்று, முகம் வெளிறி நடுங்கத் துவங்கிவிட்டார் என்று கூறப்படுகிறது.

ஷைகுல் அக்பர் (மாபெரும் ஷைகு) என்று அழைக்கப்பட்ட இப்னு அரபி (ரஹ்) அவர்கள் இரத்தின வாணிபக்கடை, துணிக்கடை ஆகியவற்றின் சொந்தக்காரராய் இருந்தனர்.

எனினும் அவர்களின் உணவோ கோதுமைக் கஞ்சியும், துவையலும் என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தூஹாத்துல் மக்கிய்யா, ஃபுஸூஸுல் ஹிகம், ஹில்யத்துல் அப்தால் போன்ற எண்ணற்ற நூல்களை எழுதிய அவர்களின் ரூஹுல் குத்ஸ், அல் துர்ரத்துல் பாகிரா ஆகிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்தன. திருக்குர்ஆனுக்கு விளக்கவுரை எழுதிவந்த அவர்கள், அந்த அலுவலின் பாதியிலேயே இறப்பெய்தினார்கள். 500 நூல்கள்வரை அவர்கள் எழுதியுள்ளனர்.

இத்தகு சிறப்புகளுக்குரிய முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கிள்ரு (அலை) அவர்களைத் தாம் சந்தித்தாகக் கூறும் நிகழ்ச்சிகளைப் பொய் என்று கூறுவதா? பெரியார்கள் அபாண்டமான பொய்களை உரைப்பார்களா?

## கிள்ரு (அலை) அவர்களின் விரல் அமைப்பு

இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்கள் (ஹிஜ்ரீ 593–656) அவர் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் வழிவந்தவர்களாவர். நஜ்முத்தீன் இஸ்பஹானியின் மாணவரான இவர்கள் இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்களின் இஹ்யாவு உலூமித்தீனை மிகவும் விரும்பிப் படித்தனர்.

ஷாதுலி தரீக்காவின் மூலவரான இவர்கள் எளிய ஆடை அணிந்தனர். மக்கள் முன் உபதேசம் செய்யும்பொழுது விலையுயர்ந்த ஆடைகளை அணிந்தனர். இவர்கள் ஒரு குத்பு ஆவர்.

இமாம் அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் பலமுறை வந்து அவர்களின் வலப்புறத்தில் அமரும் வழக்கமுடையவராக இருந்தனர். அப்பொழுது ஷாதலி (ரஹ்) எழுந்திருப்பின் கிள்ரு (அலை) அவர்களும் எழுந்திருப்பர். அவர்கள் தம் தியான அறைக்குச் சென்றால் அதன் வாயில்வரை கிள்ரு (அலை) அவர்களும் செல்வர்.



ஒருநாள் ஒருவர் ஷாதலி (ரஹ்) அவர்களை அணுகி கிள்ரு உயிரோடு உள்ளாரா அல்லது இறந்துவிட்டாரா? என்று வினவினர்.

அப்பொழுது அவர்கள், நீர் ஃபகீஹ் நாஸிருத்தீன் அம்பாரியிடம் செல்லும். அவர் கிள்ரு உயிரோடுள்ளார் என்றும், அவர் நபிமார்களில் ஒருவர் என்றும் ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) வழங்குவார் என்று விடையளித்தார்கள்.

மேலும் அவர்கள்,

கிள்ரு (அலை) இறந்துவிட்டார் என்று மார்க்க அறிஞர்கள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஐதாபுக் காட்டில் நான் கிள்ரை எத்தனையோ தடவை என்னுடைய இந்தக் கை கொண்டு முஸாபஹா செய்துள்ளேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி,

அபுல் ஹஸனே! இறைவன் உமக்கு அழகிய முறையில் அருள்பாலிப்பானாக! காட்டிலும், மேட்டிலும் மலையிலும், கரையிலும் அவன் உமக்குத் துணை நிற்பானாக! என்று கூறி துஆச் செய்துள்ளனார். அவரின் கலிமா விரலும், நடு விரலும் ஒரே நீளமுடையதாக நான் கண்டேன் என்று கூறியுள்ளார்கள்.

## முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களை கிள்ரு (அலை) அவர்கள் சந்தித்தல்

அடந்த கானகமொன்றில் புருஜுல் அஜமி என்னும் பழங்கால கோட்டையில் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் ஒருநாள், இனி எவரேனும் வந்து தமக்கு உணவு ஊட்டினாலன்றி தாம் உண்பதில்லை என்று தீர்மானித்தவர்களாய் அவர்கள் இறைவணக்கத்தில் ஈடுபட்டார்கள்.

மனித நடமாட்டமே இல்லாத காடு அது. எனவே அவர்களுக்கு உணவு ஊட்ட எவரும் வரவில்லை. இந்நிலையில் நாற்பது நாட்கள் கழிந்தன.

நாற்பத்தியோராம் நாள் வழிப்போக்கர் ஒருவர் தம்முடைய உணவில் ஒரு பகுதியைக் கொண்டு வந்து அவர்களின் முன்வைத்துவிட்டு ஏதும் கூறாமல் சென்றுவிட்டார்.

அப்பொழுது அவர்களின் நஃப்ஸ் உண்ணுக! உண்ணுக! என்று அவர்களைத் தூண்டியது வயிற்றிலும் இரைச்சல் ஏற்பட்டது. எனினும் அவர்கள் அதற்கு இடம்கொடாமல் பொறுமையாய் இருந்தார்கள்.

அப்பொழுது அறிவிற் சிறந்த மேதையான ஷைகு அபூ ஸயீது முகர்ரமீ அவ்வழியே வந்தார்.

அப்பொழுது அவர், அப்துல் காதிரே! என்ன அது இரைச்சல்? என்று வினவ, அதற்கு அவர்கள், இது என் வயிற்றுப் பசியினை ஒலமாகும். நான் அதனைப் பொருட்படுத்தாமல் இறை சிந்தனையில் ஈடுபட்டுள்ளேன் என்று கூறினார்கள்.

நல்லது நாம் இருப்பிடமாகிய சுஸாம் வாயிலுக்கு வாரும் என்று கூறிவிட்டு அவர்கள் சென்றார்கள்.

அவர்கள் சென்றவுடன் ஹஜ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் உள்ளத்தில் போராட்டம் துவங்கியது.

போ! போகாதே! போ! போகாதே!

என்று கூறி உள் மனமும், வெளிமனமும் போரிட்டன.

அப்பொழுது அவர்கள் செய்வதறியாது அமர்ந்திருந்தார்கள்.

அவ்வேளையில் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் அங்கு வந்தனர். அவர்கள் அப்துல் காதிரே! அழைப்பை ஏற்று அங்குச் செல்வீராக! என்று கூறிவிட்டுச் சென்றனர்.

இதுவே முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களுக்கும் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களுக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்பு ஆகும்.

★ ★ ★

பிற்காலத்தில் ஹஜ்ரத் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் பக்தாதில் தங்கியிருந்து மக்களுக்கு ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தனர்.

அவ்வேளைகளில், அவர்களின் பேச்சைக் கேட்க ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் வருவது நீங்காத வழக்கமாக இருந்தது.

இதைப்பற்றி ஒருர் கிள்ரு (அலை) அவர்களிடம் வினவியபொழுது, ஈடேற்றம் பெற விரும்புவோர் இப்பேரவையைப் பற்றி பிடித்துக்கொள்ளட்டும்! என்று அவர்கள் விடையளித்தார்கள்.



# இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களுடன் சந்திப்பு

பல்கு நாடு ஈன்றெடுத்த மாபெரும் ஆத்ம ஞானியான ஷைகு இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களின் முற்கால வாழ்க்கையோ மிகவும் வேறுபட்டதாகும்.

துவக்கத்தில் அவர்கள் தம் தாய்வழி பாட்டனார் அமர்ந்து கோலோச்சிய பல்க் நாட்டின் அரியணையில் அமர்ந்து நல்லாட்சி புரிந்தனர்.

அவர்களின் அரசவையில் அமைச்சர்களும், அறிஞர்களும், வணிகர்களும், வீரர்களும் வரிசை வரிசையாக அமர்ந்திருந்த காட்சி முழுமதியைச் சூழ விண்மீன்கள் நிறைந்திருப்பது போன்று காட்சி வழங்கியது.

இவ்வாறிருக்கையில் ஒருநாள்.......

பிரம்மாண்டமான அந்த அரண்மனையினுள் புகுந்த ஒரு மனிதர் அரசவையில் அனைவரின் முன் தோன்றி அங்குமிங்கும், மேலும் கீழும் பார்த்து எதையோ தேடுபவர்போல் செயல்பட்டார்.

உள்ளே நுழைந்த அவர் மன்னருக்கோ, மற்றவருக்கோ உரியமுறையில் சலாம் உரைக்காமலும், மன்னருக்கு மரியாதை செலுத்தாமலும் இவ்வாறு தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டது அவையோர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அதே வேளையில் அனைவருக்கும் அவர்மீது தாங்கொணாத சினமும் ஏற்பட்டது.

பொறுமை இழந்த சுல்தான் இப்றாஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அம்மனிதரை நோக்கி தமக்கே உரிய அதிகாரத் தோரணையில், யார் நீ? எங்கே வந்தாய்? என்று கேட்டு அதட்டினார்கள்.

அது கேட்ட அவர், "இந்த சத்திரத்தில் ஒரு நாள் தங்கி விட்டுச் செல்லலாமென வந்தேன்" என்று கூறினார்.

அவரின் பதிலைக் கேட்ட அவையோர் அனைவரின் புருவங்களும் மேலே ஏறின. அவர் என்ன சொல்கிறார் என்பது எவருக்குமே விளங்கவில்லை.

அவரின் இப்பேச்சைக் கேட்ட அனைவரின் கண்களும் கோபக்கனலைக் கக்கின,

வீரர்களோ மின்னல் வேகத்தில் தங்கள் வாட்களை உருவிக்கொண்டு தயாராயினர்.

சுல்தானின் நாவிலிருந்து அனல் கக்கும் வார்த்தைகள் வெளிவந்தன.

"என்ன சொன்னாய்? சத்திரமா? இதுவா? இது என்னுடைய அரண்மனை என்பது உனக்குத் தெரியாதா?"

ஆனால் அம்மனிதரோ இந்த அதட்டல் மிரட்டல் களையெல்லாம் கண்டு அஞ்சவோ, நடுங்கவோ இல்லை.

அவர் சுல்தானைப் பார்த்துக் கேட்டார், "இது சத்திர மில்லையா? அவ்விதமாயின் இங்கு உமக்கு முன் எவர் வாழ்ந்தார்?"

ஒரு கணம் திகைத்த சுல்தான், "என்பாட்டானார்" என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

"அவருக்கு முன் இங்கு எவர் வாழ்ந்தார்?"

"என்பாட்டனாரின் தந்தை!"

"அவருக்கு முன்?"

வந்தவரின் சரமாரியான இவ்வினாக்கள் சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களின் உச்சியை ஓர் குலுக்குக் குலுக்கியது. சட்டென அவரின் வினாவிற்கு அவர்களால் விடையளிக்க இயலவில்லை.

எனினும் தட்டுத் தடுமாறி சிந்தித்துப் பார்த்து, தம்முடைய மூதாதையின் பெயரை அவர்கள் கூறினார்கள்.

அது கேட்ட அம்மனிதர், "நீரே சொல்லும்! அவ்வாறாயின் இது சத்திரமா? இல்லையா?" என்று கேட்டு விட்டு அவ்விடம் விட்டகன்றார்.

அப்பொழுது சுல்தானின் மூளை குழம்பியது.

அதற்கு மேல் அரியணை மீது அமரவிருப்பமின்றி மெல்ல மெல்ல இறங்கி அங்கிருந்து நீங்கி அந்தப்புரம் சென்றார்கள்.



அவையோரும் கலைந்தனர்.

ஆனால் சுல்தானின் சிந்தனையோ அம்மனிதர் கூறிய வார்த்தைகளைச் சுற்றியே ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

அவரின் வினாக்களில் பொருள் பொதிந்துள்ளதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

'அவை வெறும் வார்த்தைகள் என்று ஒதுக்கி விடுவதற்கில்லை' என்று அவர்கள் கருதினார்கள்.

உலகமாயையை நீக்கி, மயக்கத்திலிருந்து மீள, தூண்டு கோலாக அமைந்த அம்மனிதரைத் தேடி அவர்கள் பல நாட்கள் அலைந்தார்கள்.

இறுதியாக ஓரிடத்தில் அவரைக் கண்டார்கள்.

அவரின் கரங்களை இறுகப்பற்றிக் கொண்ட சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், "தாங்கள் யார்?" என்று வினவினர்.

அப்பொழுது அவர், "என்பெயர் கிள்ரு" என்று விடையளித்தனர்.

அது கேட்டு அவர்களின் மயக்கம் நீங்குவதற்கு பதிலாக அதிகரித்தது.

ஆம் ஆன்மீக வேட்கை அவர்களின் உள்மனத்தில் அரும்பலாயிற்று.

## கிள்ரு (அலை) அவர்களின் இரண்டாவது சந்திப்பு

ஹஜ்ரத் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் இரண்டாவது தடவையாகவும் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்தார்கள்.

ஒருநாளிரவு அவர்கள் தங்களின் அரண்மனையில் பஞ்சணை மீது படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது உப்பரிகை மீது (மேல் மாடி மீது) எவரோ நடமாடும் அரவம் கேட்டு அவர்களின் உறக்கம் கலைந்தது.

தாக்கக் கலக்கத்தில் இருந்த அவர்கள், "யாரது?" என்று அதிகாரத் தோரணையில் கேட்டார்கள்.

அப்பொழுது, "உமக்கு அறிமுகமானவர்தான். வேறு எவருமில்லை." என்றும் பதில் வந்தது.

"அறிமுகமானவரோ, அறிமுகம் ஆகாதவரோ இந்த நள்ளிரவு வேலையில் மேல் மாடியில் உமக்கு என்ன வேலை." என்று கூறி அதட்டினார்கள்.

அதற்கு, "என் ஒட்டகம் காணமற்போய்விட்டது அதனை நான் தேடிக் கொண்டுள்ளேன்" என்ற பதில் மீண்டும் வந்தது.

அதுகேட்டு எவர்தாம் சினமுறமமாட்டார்!

கோபம் முகத்தில் கொப்பளிக்க, "காணமற்போன உம்முடைய ஒட்டகம் என் அரண்மனை உப்பரிகையின் முகட்டிலா மேயவந்தது?" என்று அவர்கள் கேட்க,

அப்பொழுது, "மறதியில் ஆழ்ந்திருப்பவரே! நீர் உம்மையும், உம்முடைய நிலையையும் மறந்து விட்டுப் பேசுகின்றீரா? பொற்கட்டிலின் மீது விரிக்கப்பட்ட மலர் மஞ்சத்தின் மீது படுத்துக் கொண்டு நீர் இறைவனைத் தேடும் பொழுது, காணாமற் போன என் ஒட்டகத்தை நான் இங்கு வந்து தேடக்கூடாதா?" என்ற பதில் வந்தது.

இந்த பதில் சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களைத் திக்கு முக்காடச் செய்துவிட்டது.

அதற்கு மேலும் பேச அவர்களின் நா எழவில்லை.

அவர்களின் உள்ளம் ஒருவித மயக்கத்தால் சூழப்பட்டு அந்நிலையிலேயே அவர்கள் உறங்கியும் விட்டார்கள்.

பொழுது விழந்தது.

"நேற்றிரவு நடந்த நிகழ்ச்சி கனவா அல்லது நனவா?" ஒரே குழப்பம் அவர்களுக்கு.

நீர்க்குமிழியை ஒத்த இவ்வுலகில் சுகபோகங்களைத் துய்த்துக் கொண்டே இறைவனைத்தேட முயல்வது கானலில் நீரைத்



தேடுவதற்கு ஒப்பாகும் என்ற உண்மை அவர்களுக்கு விளங்கலாயிற்று.

நாட்பட நாட்பட அவர்களுக்கு அரசவாழ்வும், அரண்மனைச் சுகமும் கசப்புணர்வைத் தரலாயின.

ஏழை எளியவர்கள் கூட தங்களுக்குக் கிட்டும் அன்றாட சிறு வருவாயின் மூலம் இன்புற்று வாழ்ந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டு மகிழ்ச்சியுடன் காலம் கழிப்பதை அவர்கள் பலமுறைகண்டு வியப்பெய்தினார்கள்.

இறைவனைத் தொழுது, இரண்டு காய்ந்த ரொட்டிகளைத் தண்ணீரில் நனைத்து உப்பைத் தொட்டுக் கொண்டு தின்று அயர்ந்து உறங்கும் ஏழை ஒருவனைக் கண்ட அவர்கள்

"இவ்வாழ்வு உனக்கு மனநிறைவைத் தருகிறதா?" என்று வினவினார்கள்.

"மனநிறைவு இல்லையாயின் மனமொன்றி இறைவனை என்னால் தொழ இயலுமா?" என்ற மறு வினா தொடுத்தான் அவன்.

அது கேட்டு அவர்கள் திகைத்தார்கள்

'அவன் கூறுவது உண்மைதானா என்ன?" என்று சிந்தித்த அவர்களுக்கு 'இவ்வுலகமே புரியாத பதிராக' இருந்தது.

அப்பொழுது ஓரிடத்திலிருந்து, 'உறக்கத்திலிருந்து விழித்தெழும்' என்ற ஒலி அவர்களுக்குக் கேட்டது

இவ்வாறு அடுத்தடுத்த நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களைத் துறவு நிலைக்குத் தள்ளியது.

ஒரு நாள் வேட்டையாட கானகத்திற்குச் சென்றபோது அவர்களின் வாழ்க்கையின் மாபெரும் திருப்பம் ஏற்பட்டது.

காட்டில் ஓரிடத்தில் தம் புரவியிருந்து கீழே இறங்கிய அவர்கள் தம்முடைய அரச உடுப்புக்கள் அனைத்தையும் களைந்து அவற்றை ஓர் ஆட்டிடையனிடம் கொடுத்துவிட்டு, அவன் அணிந்திருந்த கம்பளி ஆடையை வாங்கி அணிந்து கொண்டார்கள்.

இதன் பின்னர் அவர்களின் ஆன்மீகப்பயணம் துவங்கியது.

அப்பொழுது அழகிய உருவினர் அவர்களின் முன்தோன்றி அவர்களை ஆரத்தழுவி "நீர் எங்குச் செல்கின்றீர்?" என்று வினவினார்.

"உலகைத் துறந்து இறைவனிடம் செல்கின்றேன்" என்றனர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள்.

"உண்மையாகவா?" என்றார் அவர்.

உடனே அவர்கள், "ஆம்!" என்று திடமாக பதிலுரைத்தனர்.

அதன் பின் அங்கு தொழத்தொடங்கிய அவர், அவர்களையும் தொழுமாறு ஏவினார்.

அதன் பின்னர் அவர்களுக்கு உணவு வழங்கி உண்ணச் செய்த அவர் இறுதியில் அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்பெயர்களில் மேலானதாகிய இஸ்முல் அஃலத்தை கற்றுக் கொடுத்தார்கள்.

பின்னர் அவர் அவர்களை நோக்கி, "உமக்குப் பசி ஏற்படும் வேளையில் இதனை ஓதி இறைவனிடம் இறைஞ்சினால் உம்முடைய பசி தீரும்" என்று கூறினார்.

மேலும் அவர், "பிறப்பிறப்பு இல்லாத அல்லாஹ்விடம் உம்மை ஒப்படைத்துவிட்டுச் செல்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

★ ★ ★

இந்த சந்திப்பு நிகழ்ந்த பின்னர் அவர்கள் இஸ்முல் அஃலத்தை உச்சரித்த வண்ணம் தகிக்கும் வெய்யில், அனல் பரப்பும் பாலைமணலில் நடந்து சென்றார்கள்.

அப்பொழுது அவர்கள் அழகிய உருவினரான மற்றொரு மனிதரைக் கண்டார்கள்.

அவர் அவர்களை நோக்கி, "இப்ராஹீமே! உம்மை வழியில் சந்தித்து உமக்கு இஸ்முல் அஃலத்தை போதித்தவர் எவர் என்பதை நீர் அறிவீரா?" என்று வினவினார்.

அதற்கவர்கள், "தெரியாதே!" என்று விடையளித்தார்கள்.

"அவர்தாம் என்னுடைய சகோதரர் இல்யாஸ் (அலை) அவர்கள்" என்றார் அவர்.



அப்பொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், "அவ்விதமாயின் தாங்கள் யார்?" என்று வினவினார்.

அதற்கவர், "நான் கிள்ரு ஆவேன்." என்று கூறினார்.

பின்னர் கிள்ரு (அலை) அவர்கள், இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களிடம், "நான் தங்களுடன் இருந்து நட்புறவாடவந்தேன்." என்று கூறினர்.

அதுகேட்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், "நான் அல்லாஹ்வுடனே அன்றி வேறு எவரிடமும் நட்புறவாட விரும்பவில்லை." என்று கூறிவிட்டார்கள்.

அப்பொழுது அவர்களுக்கு கிள்ரு (அலை) அவர்கள் பைஅத் வழங்கினர் என்று வேறொரு வரலாறு கூறுகிறது.

## கிள்ரு (அலை) இறந்து விட்டனரா?

இந்த வினாவிற்குரிய விடையைத்தாம் நாம் இதுவரை படித்தோம்.

ஆன்மீக ஞானியரும், வலிமார்களும், சூஃபியாக்களும் ஹள்ரத் கிள்ரு (அலை) அவர்களைத் தாங்கள் சந்தித்ததை உறுதி செய்கின்றனர்.

மேலும் கிள்ரு (அலை) அவர்கள் உலக முடிவுநாள் வரை உயிருடன் வாழ்ந்து வருவர் என்றும் கூறுகின்றனர்.

'ஆபெஹயாத்' எனப்படும் ஜீவ நீரைப் பருகியதன் விளைவால் அவர்களுக்கு இத்தகு சிறப்புத்தன்மை ஏற்பட்ட தென வலிமார்கள் கூறுகின்றனர்.

பிரபல ஃபார்ஸிக் கவிஞரும், அறிஞரும் ஆன ஃபரீதுத்தீன் அத்தார் (ஹிஜ்ரீ 513 – 627) எழுதிய 'தத்கிரத்துல் அவ்லியா (வலிமார்கள் வரலாறு)' என்னும் நூலில் இறைநேசச் செல்வர்களைப் பற்றி ஏராளமான செய்திகள் உள்ளன.

அவற்றில் வலிமார்கள் ஹள்ரத் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்த நிகழ்ச்சிகளும், அவர்களுடன் வலிமார்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களும் எண்ணிறைந்தவை உள்ளன.

இந்நூலை ஃபரீதுத்தீன் அத்தார் எழுதி முடிக்க 39 ஆண்டுகள் ஆயின என்பதும், இதில் இடம் பெற்றுள்ள செய்திகளைச் சேகரிக்க அவர் அரும்பாடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து,

வலிமார்கள் எனப்படும் இறைநேசர்களும், ஆரிஃபீன்கள் எனப்படும் ஆன்மீக ஞானிகளும் பொய்யுரைப்பவர்களா? என்பது நாம் சிந்திக்கத் தக்கது.

1. ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாக தங்களின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் அறுதியிட்டுக் கூறும் ஹஜ்ரத் முஹ்யித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் ஓர் ஆன்மீக ஞானி மட்டுமன்றி ஓர் முஹத்திஸ் (ஹதீஸ் விளக்க மேதை) என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும். நம்மைக் காட்டினும் எல்லா வகையிலும் மேலான அவர்கள் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாகக் கூறும் செய்திகள் பொய்யானவை என்று கூற நம் மனம் துணியவில்லை.

2. ஷாதுலி தரீகாவின் மூலவரும், பெரும் ஆன்மீக ஞானியும், மேதையுமான இமாம் அபுல்ஹசன் ஷாதலி (ரஹ்) அவர்கள், 'கிள்ரு (அலை) அவர்களைத் தாம் சந்தித்ததாகவும், கிள்ரு (அலை) அவர்களின் கலிமா விரலும், நடுவிரலும் ஒரே நீளமுடையதாக இருக்கத் தாங்கள் கண்டதாகவும், பலமுறை அவர்களுடன் தாங்கள் முஸாபஹா செய்ததாகவும்' கூறுகின்றனர்.

'ஜதாபு'க் காட்டில் தாம் பல முறை கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாகக் கூறும் இமாம் அபுல் ஹசன் ஷாதலி (ரலி) அவர்களின் கூற்று பொய்யானதா?

3. கௌதுல் அஃலம் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களும் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்துள்ளனர்.

கிள்ரு (அலை) அவர்கள் கௌதுல் அஃலம் (ரஹ்) அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க வருபவர்களாக இருந்தனர்.

4. ஹஜ்ரத் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் பலமுறை கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாக வரலாறு கூறுகிறது.



5. திருக்குர்ஆன் விரிவுரையாளரான ஹஜ்ரத் தபரீ (ரஹ்) அவர்கள், 'கிள்ரு (அலை) ஆபெ ஹயாத்தில் மூழ்கினர்' என்று கூறுகின்றனர்.

6. ஃபார்ஸிக் கவிஞரான நிஜாமி, 'கிள்ரு (அலை) அவர்களும், இல்யாஸ் (அலை) அவர்களும் ஆபெ ஹயாத் ஜீவ நீரைப் பருகினரென்றும், அதனால் இறவாப் பெருவாழ்வு எய்தப் பெற்றனர் என்றும் கூறுகின்றார்.

7. ஷைகு ஸஅதீ (ரஹ்) அவர்களும், கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாக வரலாறு கூறுகிறது.

8. 'கிள்ரு (அலை) அவர்கள் ஆதம் (அலை) அவர்களின் புதல்வர்களுள் ஒருவரெனவும், தஜ்ஜால் வரும்பொழுது அவனைப் பொய்ப்பிக்கும் வரை இவர்களின் வயது அதிகப் பட்டிருக்கிறது என்பதாகவும்' ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

9. "ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு மரணவேளை வந்தபொழுது, அவர்கள் தம் புதல்வர்களிடம், 'தம்ஜனாஸா, அவர்களுடனே குகையில் வைத்திருக்கப் பட வேண்டுமென' இறுதியாக கோரிக்கை விடுத்தார்கள்.

அதன்படி அவர்களின் ஜனாஸா அவர்களுடைய புதல்வர்களுடன் குகையில் இருந்தது.

பின்னர் ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஆதம் (அலை) அவர்களின் வஸிய்யத்திற்கேற்ப அவ்வுடல் கப்பலில் ஏற்றப்பட்டது.

பின்னர் கப்பலிலிருந்து மக்கள் வெளியேறிய பொழுது அந்த ஜனாஸாவும் வெளியில் கொண்டுவரப்பட்டது.

அப்பொழுது நூஹ் (அலை) அவர்கள், 'தம் ஜனாஸாவை குகையில் நல்லடக்கம் செய்வோர் உலக முடிவு நாள்வரை உலகில் உயிர் வாழவேண்டுமென ஆதம் (அலை) அவர்கள் துஆச் செய்துள்ளனர்' எனக்கூறி அதனை நல்லடக்கம் செய்ய கட்டளையிட்டனர்.

எனவே ஆதம் (அலை) அவர்களின் மக்களை தம் தந்தையின் ஜனாஸாவாகிய அதனை அடக்கம் செய்வதில் ஈடுபட்டனர்.

அப்பணியில் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் தலைமை வகித்தார்கள். எனவே அல்லாஹுதஆலா தன் வாக்குறுதியை இவ்விஷயத்தில் நிறைவேற்றினான்." என்பதாக இப்னு அஸாக்கிர் (ரஹ்) அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

10. ஷைகு அபூதாலிப்னில் மக்கிய்யி (ரஹ்) தமது நூலில் கிள்ரு (அலை) அவர்கள் உயிருடன் உள்ளார்கள் என்பதற்கான செய்திகளை விவரிக்கின்றார்கள்.

11. ஹஜ்ரத் ஹக்கீமுத்திர்மிதீ (ரஹ்) அவர்கள், தம்முடைய நூலான 'நவாதிர்' என்னும் நூலில் ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் உயிருடனுள்ளார்கள் என்பது பற்றி தெளிவு படுத்துகின்றார்கள்.

12. ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்கள் இறந்துவிட்டார்கள் என்றவாதத்தை அடிப்படையாகக் கொண்டுபார்ப்பினும், அவர்கள் எப்பொழுது, எந்த இடத்தில் இறந்தார்கள் என்பதற்குரிய ஆதாரம் இன்று வரை கிடைக்கவில்லை.

13. 'தப்ஸீருல் பகவி' யிலோ, "நபிமார்களில் நால்வர் உலகமுடிவு நாள்வரை உயிருடன் இருப்பர்; அவர்களுள் கிள்ரு (அலை) இல்யாஸ் (அலை) ஆகிய இருவர் இப்புவியில் வாழ்கிறார்கள்; கிள்ரு (அலை) அவர்கள் கடலிலும், இல்யாஸ் (அலை) அவர்கள் கரையிலும் இருக்கின்றனர். இவர்களின் உணவு காளானும், கீரையும் ஆகும். இத்ரீஸ் (அலை), ஈஸா (அலை) ஆகிய இருநபிமார்கள் விண்ணகத்தில் இருக்கின்றார்கள்." என்று எழுதப்பட்டுள்ளது.

14. ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்ததாகவும், அப்பொழுது அவர்கள் 'துஆ' ஒன்றைக்கற்றுக் கொடுத்ததாகவும் 'கிதாபுல் ஹவாத்திபில்' கூறப்பட்டுள்ளது.

15. ஹஜ்ரத் அல்ஹர்வீ (ரஹ்) அவர்கள், "கிள்ரு (அலை) அவர்கள் பல முறை அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்ததாக" கூறியுள்ளார்கள்.

16. 'கிள்ரு (அலை) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழராக இருந்தார்களென்று பல ஹதீஸ்கள் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளன' என 'பஸ்லுல் கித்தாபில்' கூறப்பட்டுள்ளது.

தபூக் போரின் பொழுது நபி இல்யாஸ் (அலை) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தார்களென்று 'கஸாயி ஸுஸ்ஸுக்ரா'வில் கூறப்பட்டுள்ளது.



17. 'அத்தஃரீபு வல்இஃலாம்' என்னும் நூலில் இமாம் ஸுன்ஹலீ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளதாவது:-

"ஹஜ்ரத் கிள்ரு (அலை) அவர்களும், இல்யாஸ (அலை) அவர்களும் திருக்குர்ஆன் அதன் ஏட்டை விட்டு அகற்றப்படும் காலம் வரை உயிர் வாழ்ந்து மரணிப்பார்கள்.

கிள்ரு (அலை) அவர்கள் பாரசீக நாட்டைச் சேர்ந்தவர், ஹஜ்ரத் இல்யாஸ் (அலை) அவர்பனா இஸ்ராயீல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்விருவரும் ஆண்டிற்கு ஒரு முறை சந்தித்து.

'மாஷா அல்லாஹ்!

லா யஸூகுல் கைர இல்லல்லாஹ்;

மாஷா அல்லாஹ்!

லா யஸ்ரியுஸ் ஸூஅ இல்லலல்லாஹ்;

மாஷா அல்லாஹ்!

மா கான மின் நிஃமத்தின் மினல்லாஹி

மாஷா அல்லாஹ்!

லா ஹவ்ல வலாகுவ்வத்த

இல்லா பில்லாஹி' என்று கூறிப்பிரிகின்றனர்.

'இதனை நாள்தோறும் காலையிலும், மாலையிலும் மூன்று முறை ஓதுபவர்கள் நீரில் மூழ்கி இறத்தல், களவு கொடுத்தல், ஷைத்தானின் தீங்கு, பாம்புகடித்தல், தேள்கொட்டுதல் ஆகிய தீங்குளைவிட்டும் தவிர்ந்திருப்பர் என்று கூறப்பட்டுள்ளது.

## ஹழ்ரத் கிழ்ரு

கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து காணப்படும் பல்வேறு அறிவிப்புக்களில் இதுதான் மிகச்சரியான அறிவிப்பாகும். அதாவது, இவர் மிக நீண்ட வயதைக் கொண்ட ஒரு இறைத்தூதராகும். இப்போது இவர் இப்பூமியிலுள்ள சிருஷ்டிகளின் பார்வையிலிருந்து மறைந்திருக்கிறார். இவர் ஜீவதீர்த்தத்தை அருந்தியதால் இறுதிநாள் வரை இவர் இப்பூமியில் ஜீவித்திருப்பார். வேறுசில அறிஞர்கள் இவரை ஒரு இறைநேசர் என்று மட்டுமே அறிந்துள்ளனர். இன்னும் சிலர் இவரை ஒரு வானவர் என்பதாகவும் எண்ணுகின்றனர். ஆனால் இது தவறாகும். இஸ்லாமிய அறிஞர்களிலுள்ள (ஜும்ஹூர்கள்) என்போரின் கருத்து, இவர் இப்போதும் உயிரோடு இருக்கிறார் என்பதாகும். பின்னும் குர்ஆன் இப்பூமியில் இருக்கும்வரை இவரை மரணம் வந்து அணுகாது.

மேலும் இப்னுஹஜர் ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது நபிமொழிக்குரிய விரிவுரை நூலில் இவருடைய பெயரை **‘பல்யான்’** மற்றும் **‘மலக்கான்’** எனக் குறிப்பிடுகின்றனர். சிலர் இவரை பிர்அவ்னுடைய மைந்தர் என்றும் கூறுகின்றனர். ஆனால் இது ஆச்சரியமான வார்த்தையாகும். வேறுசிலர் இவர் மாலிக்கின் மைந்தரான இல்யாஸின் சகோதரர் என்றும் கூறுகின்றனர். வேறு சிலரிடத்தில் இவர் ஆதம் நபியவர்களின் சொந்தப்பிள்ளையென்றும் காணப்படுகிறது.

சுருங்கக்கூறின் ஞானிகள் மற்றும் அறிஞர்களின் கருத்தாய்வுப்படி கிழ்ரு என்னும் பெயருடைய இவர் இப்போதும் உயிரோடுதான் இருக்கிறார் எனத் தெரியவருகிறது. இனி நபிமொழிக் கலையின் விற்பன்னர்களில் ஒரு பிரிவை சேர்ந்த புகாரி, இப்னுல் முபாரக், இப்னுல் அரபி, இப்னுலல் ஜௌஸி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் இவர் உயிரோடு இருக்கிறார் என்பதை மறுக்கின்றனர். காரணம் இன்னோர் தமது கூற்றுக்கு ஆதாரமாக கீழ்க்காணும் ஒரு நபிமொழியை குறிப்பிடுகின்றனர். அதாவது,...

**‘முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்பூவுலகை விட்டுப் பிரியும்போது இப்பூமியில் எந்தவொரு ஜீவராசியும் நூறு ஆண்டுகளுக்கு மேல் ஜீவித்திருக்காது எனக் கூறினர்’** என்பதை ஆதாரமாக்குகின்றனர்.

ஆனால் இந்த நபிமொழியின் கருத்தை விளங்கிக் கொள்ள வலிந்துரையும் விளக்கமும் தேவைப்படுவதால் வெறுமனே நபிமொழியுடைய வெளிப்படையான வாக்கியத்தை மட்டும் கருத்தில் கொண்டு முடிவெடுத்தல் சரியாகாது.

மேலும் கிழ்ரு நபி என்னும் இவர், எண்ணற்ற இறை நேசர்களை வந்து சந்தித்துவிட்டுச் சென்ற சம்பவங்கள் வரலாற்று ஏடுகளில் கணக்கின்றி காணப்படுகின்றன. அத்துடன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் இவர் வந்து சந்தித்துள்ளார். அது மட்டுமின்றி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களின் தோழர்களை வந்து சந்தித்து இரங்கலும் தெரிவித்துள்ளார். அதேநேரம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்,....

لو كان خضرا حيا لزارني.

**‘ஒருவேளை கிழ்ரு உயிரோடு இருந்தால் நம்மை வந்து சந்தித்திருப்பார்’** என்னும் இவ்வாக்கியம் கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வந்து சந்திப்பதற்கு முன்னர் சொல்லப்பட்டதாகும். இதுபோன்ற சந்திப்புகள் அறிமுகத்திற்குரிய வழக்கங்களில் நின்றுமுள்ள ஒன்றாகும். அத்துடன் கிழ்ரு நபியவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸல்லம் அவர்களைக் கொண்டு பல்வேறு நபிமொழிகளையும் அறிவித்துள்ளார். அந்த நபிமொழிகளை ஞானிகளில் பலர் கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமிருந்து கேட்டுமுள்ளனர்.

*முற்றும்.*